

# சிவஜோதி
## எனும் ஆளுமை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஜோதி எனும் ஆளுமை...



வயித்தீஸ்வரன் சிவஜோதியின் நினைவாக

நவம்பர் 18 1971 – டிசம்பர் 30 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : சிவஜோதி எனும் ஆளுமை... |
| மொழி | : தமிழ் |
| தொகுப்பாசிரியர் | : த ஜெயபாலன்,<br>லண்டன் |
| வெளியீட்டாளர் | : லிற்றில் எய்ட்,<br>கனகராசா வீதி,<br>திருநகர், கிளிநொச்சி |
| பதிப்பு | : முதலாவது பதிப்பு மார்ச் 2021 |
| அச்சகம் | : ஜெம்ஃபார் இன்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிடட் |
| பக்கங்கள் | : 220 |
| விலை | : அன்பளிப்பு |
| அட்டை | : ஏ எம் ரஸ்மி<br>லூட்டன், ஐ. இ. |

| | |
|---|---|
| Title | : Sivajyothi enum aalumai... |
| Language | : Tamil |
| Compiler | : T Jeyabalan, London |
| Publishers | : Little Aid,<br>Kanagarasa Veethy,<br>Thirunagar, Killinochchie |
| Edition | : First Edition March 2021 |
| Printers | : JEMFAR Ind. (PVT) LTD |
| Pages | : 220 |
| Price | : Free |
| Cover Design | : A M Rashmy,<br>Luton, UK |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஜோதி எனும் ஆளுமை...

பதிப்பு அனுசரணை:

யா / விக்ரோரியாக் கல்லூரிப் பழைய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுத் துளிகள்:


01. ஆளுமை பற்றி...

03. சிவஜோதி வழங்கிய நேர்காணல்:

12. அறியாத புரியாத பருவம்
17. சி வயித்தீஸ்வரன்
20. சி சிவகணேசசுந்தரன்
23. மு தயாநிதி
25. வ சிவப்பிரகாஷ்
28. க அனுமேஹா
29. சு செல்லத்துரை
30. வை இரகுநாதமுதலியார்
33. தி பொன்னம்பலவாணர்

35. கூடித்திரிந்த காலம்

42. பொன் சிவகுமார்
44. நா கலைவாணி, கெ சுமதி, எம் ராஜ்குமார், ஆர் சுவேந்திரன்
46. ந சியாமினி
48. விஜயரத்தினம் குணபாலா

52. புதிய ஆரம்பம்

55. நண்பர்கள்
58. கலா ஆனந்தகுமார்
61. அ ப அல்பிறேட்
64. செல்லத்துரை ஶ்ரீகணேஷா
68. வைரமுத்து பவன்
71. த கோபாலகிருஸ்ணன்
73. நண்பர்கள்
75. செ சக்திதரன்
77. அபிலாஷா தேவராஜா
79. எஸ் தில்லைநடராசா
81. த சிவசுப்பிரமணியம்
84. ஆ குகமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. மகேஸ்வரன் பிரசாத்
87. ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
88. மு சிவலிங்கம்
90. சந்தான ஜெயவீர (தமிழ் மொழிபெயர்ப்பு)
93. சந்தான ஜெயவீர (சிங்களம்)
95. Prasanne Perera
96. சி சிவசேகரம்
99. சி கா செந்திவேல்
101. சோ தேவராஜா

113. நீ பாதி நான் பாதி...

116. ஹம்சகௌரி சிவஜோதி
120. வே மகாலிங்கம்
122. வே குமாரவேல்

124. லிற்றில் எய்டும் கிளிநொச்சியும்

126. அரிமர்த்தனா கணேசன்
129. சி குபேந்தினி
132. லிற்றில் எய்ட் ஆசிரியர்கள்
133. சி இதயராஜா
134. ப தயாளன்
136. மார்க்கண்டு குகன்
139. க விஜயசேகரன்
141. மு தமிழ்ச்செல்வன்
142. அமரசிங்கம் கேதீஸ்வரன்
143. வண ரி எஸ் யோசுவா
150. தங்கமுத்து சத்தியமூர்த்தி
151. முருகேசு சந்திரகுமார்
153. கருணாகரன்

158. சிவஜோதி எனும் ஆளுமை...

160. காலங்களில் அவன் வசந்தம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை பற்றி...

'சிவஜோதி எனும் ஆளுமை...' ஒரு ஆளுமையாக எண்ணப்படுவதற்கு முதற்காரணம் அவ்வாளுமை தான் சார்ந்த சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கமே. இன்றைய காலகட்டத்தில் உலகத் தலைவர்களே கோமாளிகளாக, பொறுப்பற்றவர்களாக, வினைத்திறனற்றவர்களாக, ஏன், மோசடியாளர்களாகவும், பாதகம் செய்பவர்களாகவும் இருப்பதால் ஆளுமைகளை வரலாற்றில் தான் தேட வேண்டியுள்ளது. கீழைத்தேச நாகரிகத்தின் - இந்தியாவின் மோடியில் இருந்து, மேலைத்தேச நாகரீகத்தின் - அமெரிக்காவின் ட்ரம் வரை, இவர்களிடம் இருந்து எதைத்தான் நாளைய தலைவர்கள் கற்றுக் கொள்வது? இம்மண்ணில் பிறக்காத உயிரின் (pro life) உரிமைக்காகப் போராடும் அமெரிக்கர்கள் பள்ளிகளில், கல்லூரிகளில் கொல்லப்படும் மாணவர்களின் உயிரைக் காப்பாற்ற, துப்பாக்கிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கூடத் தயாரில்லை. பொறுப்பற்ற இந்த பொதுப்புத்தி மனிதர்களை நாம் ஆளுமைகளாகக் கொள்ள முடியாது.

உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவில் பள்ளி மாணவர்கள் பட்டினியில் வாடுகிறார்கள். பள்ளிச் சிறுமிகள் மாதவிடாய் அங்கிகளை வாங்குவதற்கு வசதியில்லாததால் பாடசாலைக்குச் செல்வதில்லை. ஆனால் பிரித்தானிய அரசு ஆயதத் தளபாடங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து உள்ளது.

இன்று வல்லரசுகள் வைத்துள்ள அதிநவீன ஆயுதங்களால் ஒரு கொரோனா வைரஸைக் கூட சுட்டு வீழ்த்திவிட முடியாது. ஆனால் இந்த நவீன அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவும் பாதுகாக்கவும் இந்த வல்லரசுகள் பல பில்லியன் டொலர்களைச் செலவிட வேண்டியுள்ளது. ஆனால் மருத்துவர்களையும் தாதிகளையும் உருவாக்குவதற்கு, அவர்களுக்கான பாதுகாப்பு அங்கிகளை வழங்குவதற்கும் கூட இந்த உலகத் தலைவர்கள் தயாரில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கொரோனா தாக்கத்தினால் 270 மில்லியன் மக்களின் ஒரு நேர உணவே கேள்விக்குறியாகி இருக்க, 2200 பில்லியனெர்கள் 2020 ஏப்ரல் முதல் 2020 ஜூலை வரையான நான்கு மாதங்களில் 2.7 ரில்லியன் டொலர்களைச் சம்பாதித்து உள்ளனர். இந்த சம்பாத்தியத்தில் வெறும் 20 பில்லியன் டொலர்களை வழங்கினால் அந்த 270 மில்லியன் மக்களின் வறுமையைப் போக்க முடியும். ஆனால் செய்ய மாட்டார்கள்.

அரசுகளும் அரசுத் தலைவர்களும் செய்ய முடியாத, செய்ய விரும்பாத விடயங்களை தனிநபர்கள் தங்கள் தோள்களில் சுமக்கின்றனர். சமூகம் என்ற கட்டமைப்பு ஒன்றில்லை, அவரவர் தங்கள் தங்கள் நன்மைகருதிச் செயற்பட வேண்டும் என்பதை ஊக்குவிக்கும் தன்னலம்சார்ந்த முதலாளித்துவ சமூகக் கட்டமைப்புளூ தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டது. சமூகம் என்பதன் அவசியம் இன்று உலகெங்கும் உணரப்படுகின்றது. இந்த சமூகத்தில் சராசரி மனிதர்கள் ஆற்றுகின்ற பங்கின் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது. பள்ளியில், கல்லூரியில், பல்கலையில் உயர்புள்ளி பெற்றவர்கள் எல்லாம் சமூகத்தைவிட்டு ஒதுங்க, சராசரியானவர்களே சமூகத்தின் சுமைகளைத் தங்கள் தோள்களில் சுமந்தனர். அவ்வாறு சுமந்ததனாலும் அந்த சமூகத்திற்கு வழிகாட்டியதனாலுமே நாங்கள் இத்தன்னலமற்ற மனிதர்களை ஆளுமைகளாக கணிக்கின்றோம். அவ்வாறான ஆளுமைகளே மக்களோடு மக்களாக நின்று அவர்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைக்கின்றனர். அவ்வாறான ஒரு ஆளுமையே இந்த ‘சிவஜோதி எனும் ஆளுமை...’

சிவஜோதி தனது 49 ஆண்டுகால குறுகிய வாழ்க்கைக் காலத்தில் தனது பன்முக ஆளுமையை பல கோணங்களில் வெளிப்படுத்தி உள்ளார். கலை, இலக்கியம், நாடகம், கல்வி, சமூக செயற்பாடுகள் என சிவஜோதி பதித்த தடங்கள் குறிப்பிடத்தக்கன. இத்தடங்களைப் பதிப்பதற்கு சாதி, மத, இன எல்லைகள் எதுவும் தடையாக இருக்கவில்லை. இந்த எல்லைகளைத் தாண்டி மக்களின் வாழ்க்கைப் பயணம் முழுவதும் சிவஜோதி பயணித்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஜோதி வழங்கிய நேர்காணல்:

(இலங்கையின் வடமாகாணத்தில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ்க்குரல் இணைய வானொலிக்கு வயீத்தீஸ்வரன் சிவஜோதியின் நேர்காணல். இந்நேர்காணல் சிவஜோதியின் மறைவுக்கு சில மாதங்களுக்கு முன்னதாக நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டது.)

**தமிழ்க்குரல்:** வணக்கம் வயீத்தீஸ்வரன் சிவஜோதி அவர்களே. உங்களைப் பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்ளவும்.

**சிவஜோதி:** நான் பிறந்தது 1971ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி. நான் யாழ்ப்பாணத்தின் சுழிபுரம் எனும் ஊரில் பிறந்தேன். அங்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் எனது ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரையில் கற்றேன். நாட்டின் போர் நிலைச் சூழல் காரணமாக 1990களில் நான் கொழும்புக்கு இடம்பெயர வேண்டி வந்தது. 1990 நவம்பர் 7ஆம் திகதி நானும் எனது அண்ணாவும் அதே கொம்படி வண்ணாங்குளம் பாதைக்கு ஊடாக கஷ்டப்பட்டு ஒரு நாள் பயணம் செய்து வவுனியாவுக்கு போய் அங்கு ஆமியின் செக்கப் முடித்து ரயிலின் ஊடாக கொழும்பு வெள்ளவத்தைக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு நான் உயர்தரத்துக்காக நுவரெலியா சென்சேவியரில் சேர்ந்தேன். அந்த நேரத்தில் பல கனவுகளோடு நாங்கள் பயின்றோம். நான் பயின்றது உயிரியல். வைத்தியர் ஆக வேண்டும் என்ற கனவோடு தான் கற்றேன். அதற்கேற்ற வகையில் தான் எங்களுடைய நண்பர்களோடு சேர்ந்து கற்றோம். அந்தக் காலத்தில் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் எல்லாம் நேரடியாக கண்டு அனுபவப்பட்டுள்ளேன். அதிலிருந்து தப்பி ஷெல்லடி எல்லாம் கடந்து தான் எங்களுடைய படிப்பைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தோம். சுழிபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சைக்கிளில் தான் போக வேண்டும். போய் வரும்போது ஹெலிகொப்டர் மூலமாக தாக்குதல்களிலிருந்து தப்பி தனியார் நிறுவனங்களில் படித்தோம். அங்கு நாங்கள் தவறவிட்டதை எங்களுடைய ஆசிரியர் செல்வி ரீச்சர் எங்களுக்கு கற்றுத் தந்தார். அப்பிடியொரு கனவுடன் தான் நான் எனது நண்பர்கள், ஜெயபாலன், சிவகுமார், ஜெயக்குமார் அப்பிடி என்னும் நிறையப் பேர் கற்று வந்தோம்.

அந்த நேரத்தில் பாடசாலை காலத்தில் நான் கல்லூரி முதல் மாணவனாக, மாணவ முதல்வராக, விளையாட்டுகளிலும் ஈடுபட்டு தான் வந்தேன். அதுக்கு பிறகு கொழும்புக்கு போய் அங்கு பலதரப்பட்ட மக்களுடன் ஊடாடி படிக்கக்கூடியதாக இருந்தது.

உயர்தரக் கல்வியை முடித்த பிறகு நான் எனது மேற்படிப்படைத் தொடர்வதற்காக திறந்த பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் பீடத்தில் சேர்ந்தேன். அங்கு நிறைய பேருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அங்கு நாடகம், கலை நிகழ்வுகள் என்பவற்றில் ஈடுபட்டு சிங்கள மக்களுடன் எங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காக சண்டை பிடித்து சிலதை சுமூகமாகத் தீர்த்துக்கொண்டோம். அதுக்கு பிறகு எனக்கு தேசிய கலை இலக்கியப் பேரவை, சரிநிகர் என்பவற்றுடன் ஈடுபாடு ஏற்பட்டதுடன் இடதுசாரி எண்ணம் கொண்டவர்களுடன் எனக்கு கூடுதல் பழக்கம் வந்தது.

அங்கு தான் என்னுடைய சிந்தனைகள், மாற்றங்கள் கூட வந்ததுடன் நான் மக்கள் சார்ந்து சிந்திக்கத் தொடங்கினேன். ஏனெனில் நான் அடிப்படையில் மற்றவர்களை மதிக்காத ஒரு சமூகத்திலிருந்து வந்தபடியால் இடதுசாரிச் சிந்தனைகள் என்னை ஒருபக்கத்துக்கு மாற்றிப் போடத் தொடங்கியது. என்னுடைய செயற்பாடுகளிலும் மாற்றங்கள் வந்தன. அது சார்ந்த போராட்டங்களிலும் கூடுதலாகக் கலந்துகொண்டேன். அதற்குப் பிறகு லேக்ஹவுஸ் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டேன். அதிலும் பலருடைய தொடர்புகள் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு முன்பு கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பு கிடைத்தது. அங்கு முன்னாள் செயலாளராக இருந்த் அ.இ கந்தசாமி மாஸ்டருடனான தொடர்பு தான் இந்த சமூகப் பணியில் கூடுதலாக இணைய வைத்தது. என்னுடைய திருமணமும் காதல் திருமணம். அவர் என்னுடைய சமூகத்தைச் சார்ந்தவரில்லை. என்னுடைய அப்பா, அம்மா இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் சொந்தக்காரர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. அதையெல்லாம் தாண்டி நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். இப்படி 1990 தொடக்கம் 2016 வரை வேறு வேறு துறைகளில் பலவிதமான அனுபவங்களுடன் பணியாற்றி வந்தேன்.

பின்பு என்னுடைய பாடசாலைத் தோழன் ஜெயபாலன் நீண்ட காலத்துக்குப் பின்னர் என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார். அப்போது அவருடைய லிற்றில் எய்ட் என்ற நிறுவனத்துக்கு ஒருவர் தேவை என்றார். என்னுடைய துறை பற்றிக் கேட்டார். நான் கணனி வன்பொருள் துறையைச் சேர்ந்தவன் என்பதால் அப்படி ஒருத்தர் தான் தமக்குத் தேவை என்றார். என்னை இணைந்துகொள்ள முடியுமா என்று கேட்டார். நானும் நீண்ட காலமாக சொந்த இடத்தை விட்டு வெளியில் வசிப்பது அந்நியமாக இருந்தது. அதேநேரம் என்னுடைய இப்போதைய மனநிலையுடன் யாழ்ப்பாணம் போவது ஒத்துவராது என்று தோன்றியது. அங்கு சென்றால் எனக்கு கோபம் வருவது போல இருக்கும். அதனால் கிளிநொச்சியில் இருப்பது பரவாயில்லை என்று தோன்றியது. இதைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் லிட்டில் எய்டில் எனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

**தமிழ்க்குரல்:** மாணவர்களுக்கு லிற்றில் எய்ட் எவ்வாறான சலுகைகளை வழங்கி பணியை முன்னெடுக்கிறது?

**சிவஜோதி:** லிட்டில் எய்ட் நிறுவனம் 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு வரை கோப்பாயில் இயங்கி வந்தது. அதன் பின் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டது. 2017இல் நான் பொறுப்பேற்ற பின் சிலரை அணுகி கணனிகளை அதிகரிப்பதற்குரிய ஏற்பாடுகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தோம். பிள்ளைகளுக்கு பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான நேரத்தை அதிகரித்தோம். பிள்ளைகளுக்கு பாடப்புத்தகத்தில் இருப்பது போன்று அல்லாமல் வித்தியாசமாக அவர்களுக்கு ஏற்றவகையில் கற்பிப்பதை ஊக்குவித்தோம். நாங்கள் செய்யும் பெரிய பிழை என்னவென்றால், பிள்ளைகளுக்கு அச்சடித்தது போல ஒரே மாதிரி சொல்லிக் கொடுக்கின்றோம். பிள்ளைகளுக்கு விளங்கியதா விளங்கவில்லையா என்பது பற்றி அக்கறைப்படுவதில்லை. சில நேரங்களில் சில மாணவருக்கு நாங்கள் கூறுவது பழைய விடயமாக இருக்கும். முதல் ஆசிரியர்கள் மாணவர்களுடைய நிலையைப் புரிந்து அவர்களுக்கு ஏற்ப இறங்கி ஏற வேண்டும்.

மாணவர்கள் பரீட்சை எடுத்துவிட்டு கற்க வரும்போது அவர்களுக்கு 3 அல்லது 4 மாதங்களில் பெறுபேறு வந்துவிடும். அவர்களால் கற்கை நெறியை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கும். அதனால் கற்கை நெறிக்கான திட்டங்களை மீளாய்வு செய்து மாணவர்களுக்கு ஏற்ப மாற்றினோம்.

**தமிழ்க்குரல்:** கணனி கற்க வரும் மாணவர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள் என்று கூற முடியாது. லிற்றில் எய்ட் இதற்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறதா?

**சிவஜோதி:** பார்த்தீபனுடைய காலத்தில் ஆங்கில கற்கை நெறிகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் அன்ரனி பீற்றர் அவுஸ்திரேலியாவிலிருந்து இங்கு வந்து ஆங்கிலம் கற்பித்திருந்தார். பின்பு அவர் இல்லாமையால் அந்த கற்கை நெறி தடைப்பட்டுள்ளது. நாங்கள் எதிர்காலத்தில் மீண்டும் அதைக் கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

**தமிழ்க்குரல்:** கொழும்புப் பகுதியிலிருக்கும் மாணவர்களுக்கும் கிளிநொச்சிப் பகுதியிலிருக்கும் மாணவர்களுக்கும் இடையில் நீங்கள் கண்டு கொண்ட வித்தியாசங்கள் எவ்வாறுள்ளன.

**சிவஜோதி:** கொழும்பில் மாணவர்களுக்கு போதுமான வசதி வாய்ப்புக்கள் உள்ளன. இங்கு மாணவர்கள் யுத்தத்தின் வடுக்களிலிருந்து இன்னும் முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவரவில்லை. அது சார்ந்த ஆற்றுப்படுத்தல்களோ அல்லது வழிகாட்டல்களோ இங்கு செய்யப்படவில்லை. கொழும்பில் உள்ள மாணர்களிடம் ஸ்மாட் போன் வசதியும், கணனி வசதியும் கட்டாயம் இருக்கும். ஆனால் இங்கு பெரும்பாலான மாணவர்களுக்கு அவ்வாறான வசதிகள் இல்லை. பாடசாலைகளிலும் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்கான ஆய்வுகூடங்கள் இல்லை. அப்படி இருந்தாலும் அவற்றை மாணவர்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் எங்களுடைய மாணவர்கள் அனைவரும் திறமையானவர்கள். அவர்களைத் தனித்தனியாக இனங்கண்டு அவர்களை வளப்படுத்த வேண்டும்.

**தமிழ்க்குரல்:** லிற்றில் எய்டின் முயற்சியினுடாக எத்தனை மாணவர்கள் இதுவரை பயன்பெற்றுள்ளனர்?

**தமிழ்க்குரல்:** நான் வந்த பின்பு 60-70 மாணவர்கள் சான்றிதழ் பெற்றிருப்பார்கள். இந்த முறை ஜனவரியிலிருந்து பாடத்திட்டத்தையும் மாற்றியுள்ளோம். சுமார் 75பேர் கல்வி கற்று வருகின்றார்கள். இவ்வளவு காலம் ms office தான் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வந்தது. நான் அதை மாற்றி பக்கவடிவமைப்பு போன்ற வேறு சில விடயங்களை உள்வாங்கி கற்கை நெறியை ஆரம்பித்தேன். பரீட்சார்த்த முயற்சியாகவே அதை ஆரம்பித்தோம். ஆனால் இந்தியாவில் கற்று முடித்து வந்த பவதாரணி என்ற ஆசிரியர் நான் எதிர்பார்த்தது போலவே ஒவ்வொரு மாணவர்களிடமும் தனித்தனி கவனமெடுத்து அந்தக் கற்கை நெறியை கற்பித்து வருகிறார். நான் எதிர்பார்த்தது போல மாணவர்கள் அழகாக அதைக் கற்று வருகின்றனர். உண்மையில் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் அவர்களால் நிச்சயம் பிரகாசிக்க முடியும்.

**தமிழ்க்குரல்:** லிட்டில் எய்ட்டுடன் இணைந்து பணியாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

**சிவஜோதி:** உண்மையில் லிட்டில் எய்ட்டுடன் புலம்பெயர்ந்து வாழும் நண்பர்கள் எமது நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்து பணியாற்றி வருகின்றனர். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையல் பயிற்சிநெறியையும் நாங்கள் மாற்றியுள்ளோம். வெறுமனே தையலைப் பயின்று வீட்டில் இருந்து தைக்காமல் அவர்கள் துணிந்து தங்களுடைய சொந்தக் காலில் நிற்க வேண்டும். தையலுக்கும் புது ஆசிரியர் ஒருவர் இணைந்துள்ளார். அவர் தையலில் பல நவீன முறைகளை மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றார். எதிர்காலத்தில் லிட்டில் எய்ட்டை ஒரு தொழிற்பயிற்சி மையாமாக உருவாக்க உள்ளதால் அதற்குத் தேவையான கணினிகள், தையல் இயந்திரங்களை வாங்குதற்கு மற்றும் வேறு தொழில் பயிற்சி நெறிகளை உருவாக்குவதற்கு புலம்பெயர் உறவுகளை எதிர்பார்க்கின்றோம். இங்குள்ள மக்கள் மத்திய, மாகாண அரசாங்கத்தையோ அரசியல்வாதிகளையோ நம்பி வாழாமல் சொந்தக்காலில் நின்று வாழப் பழக வேண்டும். லிட்டில் எய்ட் நிறுவனத்தை எதிர்காலத்தில் ஒரு தொழில் பயிற்சி மையமாக உருவாக்க வேண்டிய தேவையுள்ளது. இதற்கு தேவையான கணினிகள் மற்றும் உபகரணங்கள் மேலும் பல பயிற்சி நெறிகளை உருவாக்குவதற்குத் தேவையுள்ளது. எனவே இவற்றை நாம் புலம்பெயர் உறவுகளிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**தமிழ்க்குரல்:** இவ்வாறான கற்கை நெறிகளை முன்னெடுக்கும் பணி ஒருபுறம் இருக்க லிற்றில் எய்டின் பிரத்தியேகப் பணிகள் எவ்வாறாக இருக்கின்றன?

**சிவஜோதி:** இம் முறை வெள்ளம் காரணமாக கிளிநொச்சி பாதிக்கப்பட்ட போது, நான் மிகவும் வியந்த விடயம் என்னவெனில் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தாத இடங்களில் புலம்பெயர் உறவுகளும் எமது மத்திய கிழக்கு உறவுகளும் இணைந்து உலர் உணவுப் பொருட்களும் உடைகளும் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவ முன்வந்தனர். அதேவேளை எமது லிட்டில் எய்ட் கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களும் இப்பெரும் பணியில் தொண்டர்களாக இணைந்து கொண்டனர். அதற்கு இணைப்புப் பாலமாக எமது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவனான தூயவன் மற்றும் அவர்களின் நண்பர்களின் பங்கு பெருமளவில் இருந்தது. இம்மாணவர்கள் வீடு வீடாகச் சென்று வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி சேகரித்தனர். இதனை கேள்வியுற்ற எமது லிட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்ட்டின் முன்னாள் மாணவி யாழரசி சில நண்பர்களின் தொடர்பை ஏற்படுத்தித் தந்தார். டுபாயில் இருந்து அருண் என்பவரும் பருத்தித்துறையில் இருந்து முருகன் தொண்டு நிறுவனமும் இன்னும் பல நிறுவனங்களும் தன்னார்வமாக எம்முடன் இணைந்து கொண்டனர். கற்சிலைமடுவில் உள்ள முன்னாள் போராளியான தர்சன் அவர்கள் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இருபதிற்கும் மேற்பட்ட மாணவர்களை வைத்துப் பராமரித்து வருகிறார். இவர் எந்தவித அரச உதவிகளும் இல்லாமல் அவர்களைப் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இவருக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை. எமது நிறுவனமே உதவி செய்தது. எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளைத்தான் மண்ணில் பிறக்கையிலேயே என்பது போல் எமது மாணவர்களை நாம் சரியாக வழி நடத்த வேண்டும். அதனை விடுத்து மாணவர்களை பிழை சொல்வது தவறு. எமது மாணவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்த உரிய தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

உண்மையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குவதோடு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றோம். பேருக்கும் புகழுக்குமாக நாம் தனித்து நின்று உதிரிகளாகச் செயற்பட முற்படுவது தவறு. நான் ஒரு ஆசியராகவே லிட்டில் எய்ட் நிறுவனத்திற்கு வந்தேன். தவிர்க்க முடியாத சூழல் காரணமாக நிர்வாகப் பொறுப்பை ஏற்றேன். எனது நிர்வாகத்தில் தனித்து முடிவு எடுக்க நிர்வாகத்தினர் சுதந்திரத்தை தந்துள்ளார்கள். அந்த வகையில் எனக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்கள். அத்துடன் நான் சமூகத்துடன் சேர்ந்து பாடுபட விரும்புகின்றேன். எனவே அதற்கான அனுமதியையும் தருமாறு நிர்வாகத்திடம் கேட்டிருந்தேன். அதன் அடிப்படையில் பராசக்தி கல்வி வளர்ச்சி மன்றத்துடன் இணைந்து பணியாற்றுகின்றோம். அதேவேளை வேறு நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம். சமூகத்திற்கு உண்மையாகவும் நேர்மையாகவும் பணியாற்றுவோர்களுடன் சேர்ந்து கைக்கோர்த்து பணயாற்றத் நாம் தயாராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றோம். இதில் எந்தவித அரசியலோ அல்லது தனிப்பட்ட இன மத கலப்போ இருக்கப்போவதில்லை. அதற்கு அப்பாற்பட்டே நாம் செயற்படப்போகிறோம். நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்புவது என்னவெனில், இந்நிறுவனம் அரசியலுக்கு பக்கச்சார்புகளுக்கு அப்பாற்பட்டதொரு நிறுவனம். இந்நிறுவனத்திற்கு யாரும் வரலாம் யாரும் போகலாம். யாருக்குத் தேவை இருக்கிறதோ அவர்களின் இடமாகவே லிட்டில் எய்ட் இருக்கும். அவர்களின் வளர்ச்சியை முன்னிறுத்தியே நாம் சேவையாற்றுகின்றோம். எதிர்காலத்தில் நாம் எமது காலில் நிற்பதற்குரிய வேலைத் திட்டங்களைத் தான் நாம் மேற்கொண்டு வருகிறோம். வெறுமனே நாம் தேவையில்லாத மாயைகளுக்குள் அகப்படாமல் எமது சமூகத்தை நாமே கட்டியெழுப்புவதற்குரிய கடப்பாடு உள்ளவர்களாக பணிபுரிகிறோம். அந்த இலக்கை நோக்கியே நாம் தொடர்ந்தும் செயற்படுகிறோம்.

**தமிழ்க்குரல்:** எமது தாயக உறவுகளுடன் எந்த விடயத்தை வலியுறுத்துகின்றீர்கள்?

**சிவஜோதி:** உண்மையிலேயே சில இடங்களில் அதாவது இம்முறை வந்த வெள்ளப்பெருக்காக இருக்கட்டும் கல்வி உதவிகளாக இருக்கட்டும் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே தொடர்ந்து அவை சென்று அடைவதை காணக்கூடியதாக உள்ளது. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் ஒன்று நீங்கள் இங்கு நேரில் வந்து சில விடயங்களைச் செய்ய வேண்டும். அல்லது அதற்குரியவர்களை அடையாளம் கண்டு செய்ய வேண்டும். முன்னாள் போராளிகளாக இருக்கட்டும் பாதிக்கப்பட்ட மக்களாக இருக்கட்டும் இவர்களுக்கு வாழ்வாதாரங்கள் இன்னுமே சரியாகச் சென்றடையவில்லை. கல்வி, வாழ்வாதாரங்கள், உதவிகள், அவர்களுக்குரிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை. ஏழை ஏழையாகவே இருக்கிறான். வசதி படைத்தவர்கள் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அதேபோல் இன்னும் சிலபேர் கண்டு கொள்ளப்படவில்லை. சிலபேரை நாம் தூக்கிவிட வேண்டிய கடப்பாடு உள்ளது. இன்னும் அவர்கள் புறந்தள்ளப்பட்டு பாராமுகமாகவே உள்ளனர். அநேகமானவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனது அனுபவத்தில் நான் சொல்வதென்னவென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்பட்டவன் தனக்கு கஷ்டமாக இருக்கிறதென்று தானே நேரில் சென்று சொல்லமாட்டான். நாம் தான் அவனைத் தேடிச் சென்று அடையாளம் காண வேண்டும். வாழ்வாதார உதவிகளும் சரியாகச் சென்று போய்ச் சேருவதில்லை. இந்த விடயத்தில் அரசாங்கத்தில் வேலை செய்பவர்களுடன் முரண்படுகிறேன். இங்குள்ளவர்கள் சரியாக அவற்றை கணக்குகள் எடுத்துக் கொடுப்பதில்லை. புலம்பெயர் உறவினர்கள் இங்கு வந்து நேரில் இவற்றை அவதானித்து வழங்க வேண்டும். கிளிநொச்சியில் பதிவில் மட்டுமே கைத்தொழில் நிறுவனங்கள் 57 அல்லது 60 வரை இருக்கின்றது ஆனால் நான் வந்து இரண்டு வருடங்களாகின்றன. யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் ஆகின்றன. எங்களுக்குரிய தேவை எந்தவித அரசியல்வாதியாலோ அல்லது தனிப்பட்ட சமூக சேவையாளராலோ நிறைவேற்றப்படவில்லை. அநேகமானோர் பாடசாலைக் கல்வியைத் தொடரக்கூட கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டம் யுத்தம் நடந்த பிரதேசம் இங்கு காலை உணவின்றியும் தாய் தகப்பன் இன்றியும் குழந்தைகள் சொந்தங்களுடன் இருக்கும் அவலம் காணப்படுகின்றது. அவர்களை அடையாளம் கண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டும். தயவு செய்து இனியாவது நான் சொல்ல வருவது இப்படித்தான். கோயில்களை கட்டுவதைவிட பசித்தவனுக்கு சாப்பாடும் கல்வி அறிவையும் கொடுப்பதுதான் தற்போது எமக்கு தேவையான விடயம். வெளிநாட்டில் இருந்து வந்து ஆடம்பரத்திற்காக மேளக் கச்சேரி வைத்தோ சமா வைத்தோ காசுகளை வீணாக்குவதை விட்டு விட்டு எமது பகட்டை அதில் காட்டாது கஷ்டப்பட்டவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். எமது மக்களை நாமே கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாட்டில் புலம்பெயர் சமூகம் இருக்கிறது. இங்குள்ளவர்கள் யுத்த சூழலின் வடுக்களால் அதில் இருந்து மீள முடியாமல் இருக்கிறார்கள். புலம்பெயர் உறவுகள் ஊரில் உள்ள கோயில்களை புனருத்தாபனம் செய்வதை நிறுத்தி விட்டு எமது மக்களின் உறவுகளுக்குரிய தேவைகளை செய்வதே முதற் கடமையாகக் கொள்ளுமாறு தயைவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாத புரியாத பருவம்

1971 நவம்பர் 18 சிவஜோதியும் அவனை ஒத்தவர்களும் இம்மண்ணில் பிறக்க முன்னரே அவர்களுடைய எதிர்கால வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அரசியல் சக்திகளின் நகர்வுகள் இடம்பெற ஆரம்பித்து விட்டன. அமெரிக்க – ரஷ்ய வல்லரசுகளின் பனிப்போரில் உலகின் மூலை முடுக்கெங்கும் உள்ள நாடுகள் கணை பிரிந்திருந்த காலகட்டம். அதற்கு நாம் பிறந்த மண்ணும் விதிவிலக்காக இருக்கவில்லை. தேசிய இனங்களின் எழுச்சியும் இந்திய உப கண்டத்தில் பங்களாதேஷ் நாட்டின் உருவாக்கமும், பங்களாதேஷ் உருவாக்கத்தில் இந்திய – ரஷ்ய வல்லாதிக்க சக்திகளின் நேரடித் தலையீடும் ஒரு காரணம். தெற்காசியா அமெரிக்க – ரஷ்ய வல்லரசுகளின் றொம் அன் ஜெரி விளையாட்டின் மைதானமானது.

அன்று யாரும் எமது பதின்ம வயதில் இந்திய இராணுவத்திற்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்திருக்க வாய்ப்பில்லைத் தான். இது இந்துமகா சமுத்திரத்திற்கு அப்பால் மட்டுமல்ல. இலங்கையிலும் அவ்வாறு தான். ஜனதா விமுத்தி பெரமுன – ஜேவிபி இன் முதலாவது எழுச்சி தென்பகுதியை ஆட்டிப்படைத்த காலப்பகுதி அது. சிங்கள இளைஞர், யுவதிகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட காலம்.

தென் ஆபிரிக்காவில் நிற ஒடுக்குமுறைக்கு எதிரான நெல்சன் மண்டேலாவின் போராட்டம், லத்தீன் அமெரிக்காவில் 'விடுதலை இறையியல் - A Theology of Liberation' என்ற நூல் அங்கிருந்த தேவாலயங்களையும் அருட்தந்தையர் களையும் போராட்டத்தின்பால் ஈர்த்துக்கொண்டிருந்த காலகட்டம். அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லாதிக்கத்திற்கு அருகில் இருந்த கியூபா, ரஷ்யாவின் நட்பாக இருந்து அமெரிக்காவிற்கு தலையிடி தந்த காலம். பர்மாவில் அரசியல் அலையை ஏற்படுத்திய ஆன் சாங் சூகி தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்த காலகட்டம். திபெத்தில் தலாய் லாமா சீனாவுக்கு எதிரான கிளர்ச்சி செய்துகொண்டிருந்த காலம்.

மொத்தத்தில் உலகில் மூன்றாவது உலகப்போர் வெடிக்கும் அபாயத்தின் மத்தியில் நாங்கள் பிறந்தோம். அந்தப் போர், அணு ஆயுத யுத்தமாக அமையும் என்ற அச்சம் உலகெங்கும் பரவி இருந்தது. பேரழிவுக்கு வலிகோலிய அந்த விபத்து அன்று தவிர்க்கப்பட்டது.

விபத்துக்களை நாங்கள் தேர்வு செய்வதில்லை. அது ஏற்படுத்துகின்ற தாக்கத்திற்கு நாங்கள் எதிர்வினையாற்றுகின்றோம். வாழ்க்கையும் அவ்வாறே. எமது பிறப்பும் இறப்பும் உட்பட. பெற்றெடுக்கும் தாய்க்கும் தந்தைக்கும் கூட பிள்ளை கறுப்பா, சிவப்பா, வேறு நிறமா, ஆணா பெண்ணா, மூன்றாவது பாலினமா என்று தெரிவதில்லை. நாங்களும் இன்னாருக்கு பிறக்கின்றோம் என்று முடிவெடுத்தும் பிறப்பதில்லை. நாங்கள் எல்லோருமே பிறப்பு என்ற அந்தச் சம்பவத்தை, விபத்தை ஆர்ப்பரிப்புடன் கொண்டாடுகின்றோம். அது நிச்சயமான ஒரு மகிழ்ச்சியான தருணமே. பால் மா உட்பட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மிகக் கடுமையாக அமுல் படுத்தப்பட்ட காலத்தில் தாய்பாலையும் பசுப்பாலையும் நம்பிப் பிறந்த தலைமுறை எங்கள் தலைமுறை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டாட்சியில் தன்னிறைவுப் பொருளாதாரத்தில் பிறந்து அதில் தவண்டு விளையாடிய தலைமுறை.

பிரித்தானிய முடியாட்சியின் எச்ச சொச்சங்களையும் கைகழுவி விட்டு 'ஐக்கிய சோசலிச இலங்கைக் குடியரசு' எங்கள் தாய்நாடு. ஆனால் நாங்கள் தடுக்கி விழுந்து எழுந்து நடமாடுவதற்கு முன்னமே பின்னைய இரு சொற்களும் இருக்க முன்னைய இரு சொற்களும் காணாமல் போய்விட்டது.

நாங்கள் இங்கு கள்ளன் பொலிஸ் விளையாட எமது அரசியல்வாதிகள் தேர்தல் விளையாட்டுகளில் குறியாக நின்று, தமிழீழப் பிரகடனத்தை சிவஜோதியின் ஊரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் வடக்கம்பரையில் வெளியிட்டனர். நாங்கள் விளையாடிய கள்ளன் பொலிஸின் அடிப்படையே மாறிவிட்டது. இயக்கம் பொலிஸ் விளையாட்டை நாங்கள் விளையாடினோம். இலங்கை அரசியலில் மீண்டும் ஒரு மாற்றம். ஜே ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. 1977 இனக்கலவரமும் வந்தது. இலங்கையின் தற்சார்பு பொருளாதாரக் கொள்கைகள் கைவிடப்பட்டு உலகச் சந்தைக்கு இலங்கை திறந்துவிடப்பட்டது. உலக நாடுகளில் இருந்து பொருட்கள் மட்டும் இறக்குமதி செய்யப்படவில்லை. ஆயுதத் தளபாடங்களும் இராணுவ ஆலோசனைகளும் பயிற்சிகளும் வந்திறங்கின.

1977 கலவரத்திற்கு முன்னதாக ஜனவரி 27 இல் சிவஜோதியின் வாழ்க்கையை நிர்ணயம் செய்யும் விபத்தொன்று நிகழ்ந்தது. சிலவேளை சிவஜோதிக்கு அப்போது தும்மல் வந்திருக்கலாம். ஆனால் எதற்காக வந்தது என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எமது வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற முக்கியமான தருணங்கள் கூட எமக்குத் தெரியாமலேயே கடந்து சென்றுவிடுகின்றன.

இன ரீதியான தரப்படுத்தல் கைவிடப்பட்டு மாவட்ட ரீதியான தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்பட்டது. அது யாழ்ப்பாணம் தவிர்ந்த மாவட்ட தமிழர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை வழங்கினாலும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எங்களுக்கு பல்கலைக்கழகக் கல்வியை சற்று எட்டத்தில் வைத்துவிட்டது. பாடப் புத்தகத்தைத் தவிர வேறெதையும் வாசிப்பதை வீண்விரயமாக எண்ணும் சமூகத்தின் தலை சிறந்த நூலகத்தை எரித்து பேரினவாத அரசு தனக்குத் தானே முகத்தில் கரி பூசிக்கொண்டது. ஆனால் சிவஜோதிக்கும் எனக்கும் நூல்கள் நல்ல நண்பர்களாகின. பாடப் புத்தகங்களைத் தவிர மற்றைய புத்தகங்கள் எங்களை ஈர்த்தன.

பிறப்பும் - இறப்பும் என்ற இரு பிரதான விபத்துக்களுக்கு இடையே ஏற்படும் இன்னும் பல விபத்துக்களாலேயே எமது வாழ்க்கை கட்டமைக்கப்படுகின்றது. பெற்ற உறவுகள், உடன் பிறந்த உறவுகள், சுற்றம், நண்பர்கள், ஏன் வாழ்க்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையும் கூட ஒரு விபத்துத்தான். '12B' பஸ்ஸை பிடிப்பதும் தவறவிடுவதும் கூட எமது வாழ்க்கையை திசைமாற்றிவிடும் என்பது வெறும் கற்பனையல்ல. இவ்வாறான விபத்துக்கள் நிறைந்த இந்தப் பயணத்தில் பல விபத்துக்கள் எம்மால் உணரப்படாமலேயே கடந்து சென்றுவிடுகின்றன. உணரப்படும் சில விபத்துக்கள் மட்டும் சில சமயங்களில் இன்பமாகவும் சில சமயங்களில் துயரமாகவும் எம்மை ஆட்கொண்டுவிடுகின்றன.

ஆனால் சிவஜோதியோடு எமக்கு ஏற்பட்ட விபத்துக்கள், சந்திப்புகள் காலத்தால் அழிக்க முடியாதவையாக எம்நெஞ்சில் நீங்காமல் நிறைந்துள்ளன. வயீத்தீஸ்வரன் ஹேமசபேஸ்வரி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்து இந்த மண்ணில் தவழ்ந்த சிவஜோதி, இறுதிவரை அவர்கள் எல்லோருக்கும் ஒரு உறவுப்பாலமாக நின்றான் என்றால் அது மிகையல்ல. எப்படியும் வாழலாம், வாழ்க்கையை போகின்ற போக்கில் வாழலாம், சமூகம் போகின்ற போக்கில் வாழலாம் என்று எம்மில் பலரும் ஊரோடு ஒத்துவாழ — சமூகத்தின் மடமைத் தனங்களை, பழமைவாதங்களை பெரும்பாலும் அறியாது, சில சமயங்களில் அறிந்தும் அதனை ஏற்றுக்கொண்டு வாழ்வதே வாழ்க்கை என எமக்கு சமூகம் கற்றுத் தந்திருக்கின்றது. ஆனால் அதுவல்ல வாழ்க்கை என்று உரத்துச் சொல்ல ஆயிரத்தில் ஒருவர் பிறக்கின்றனர். இப்படித்தான் வாழ வேண்டும் என்று சமூகத்திற்கு கோடிட்டுக் காட்டுகின்ற இந்த ஆயிரத்தில் ஒருவன் சிவஜோதி.

சிவஜோதியின் தந்தை போஸ்ட் மாஸ்டராக இருந்ததால் அவருக்கு இடமாற்றங்கள் வருகின்றபோது அவர்களது புதிய புதிய இடங்களுக்கும் மாறிச் செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறு ஒரு கட்டத்தில் வவுனியாவிலும் அவர்களுக்கு இருக்க வேண்டி இருந்தது. மிகுந்த சைவப் பாரம்பரியத்தை பின்பற்றிய இக்குடும்பத்திற்கு அருகில் இருந்தவர்கள் இவர்களின் ஊரவர்கள். சுழிபுரத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால் அவர்கள் சைவம் அல்ல. இவர்களின் அயலில் குடியிருந்த அந்த வீட்டிலும் ஒரு குறும்புக்கார ஆனால் வீம்பு பிடித்த சிறுமி ஒருத்தி இருந்தாள். சிவஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் என்பது தெரிந்து அவனுக்கு முட்டையை வாய்க்குள் திணிப்பது அவளின் விளையாட்டு.

அந்தக் காலத்தில் வந்த பாடல்களில் "விழியே கதையெழுது. கண்ணீரில் எழுதாதே. மஞ்சள்வானம் தென்றல் சாட்சி உனக்காகவே நான் வாழ்கிறேன்...." என்ற பாடல் திரை இசைப் பாடல்களுக்கு பெயர் பெற்ற இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிக்கும். இப்பாடல் வரிகள் அயல் வீட்டு வானொலியில் கேட்டதும் சிவஜோதி பக்கத்து விட்டுச் சிறுமியின் யன்னலடிக்கு ஓடிப் போய் விடுவான். அந்தச் சிறுமியை அழைத்து அந்தப் புரியாத வயதில் அப்பாடல் வரிகளில் தனக்கு அர்த்தம் புரிந்த ஒரே சொல் வரும்வரை காத்திருப்பான். அந்தச் சொல் வேறொன்றும் அல்ல. '...தீபம் எரிகின்றது. ஜோதி தெரிகின்றது...' என்ற வரிகளில் வரும் 'ஜோதி' என்ற தன்பெயர் வந்துவிட்டது என்ற பெருமை. ஆனால் பின்நாட்களில் அவன் பெருமையை எல்லா ஊடகங்களுமே பதிவு செய்கின்ற வகையில் வாழ்ந்து காட்டிச் சென்றான்.

எமது குடும்பக் கட்டமைப்பில் உறவுகளிடம் நற்பெயர் பெறுவது என்பது கல்லில் நார் உரிப்பதற்குச் சமம் என்பார்கள். ஆனால் இந்த உறவுகளின் பதிவுகள் சிவஜோதியின் உறவு எவ்வளவு ஆழமாக வேரூன்றி நிலைத்து நிற்கின்றது என்பதனைக் காட்டுகின்றது. தந்தையின் பதிவில் அவர் குறிப்பிடும் வரிகள்... சமூகம் தனது மகனை அவருக்கு அறிமுகம் செய்து வைப்பதைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார். சகோதரனின் வரிகள் கூட அதனையே கோடிட்டு காட்டுகின்றன. சிவஜோதியின் தாய் மாமன், மாமனுக்கும் மேல். இருவருமே ஒரே அலைவரிசையில் சிந்திப்பவர்கள். அன்றும் இன்றும் லிற்றில் எய்ட்க்கு பல உதவிகளைப் புரிந்துவருபவர். மற்றும் பல பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வருபவர். அவர் சிவஜோதியின் இன்னுமொரு தந்தை என்றால் மிகையல்ல. சிவகணேசன் சித்தப்பாவும் கூட. அரசியல் என்பது பெரிய குடும்பம் என்றால் குடும்பம் என்பது சிறிய அரசியல். அதில் சிவஜோதி ஒரு சிறந்த அரசியல்வாதி. The art of making impossible, possible - இயலாத ஒன்றை, இயலுமாக்கும் கலை தெரிந்த அரசியலாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி. வயித்தீஸ்வரன் (அப்பா)

(நிர்வாக முகாமையாளர், யாழ் ஐக்கிய வியாபார சங்கம்)

### ஜோதி சிவஜோதி

சிவஜோதி எனது இரண்டாவது மகனாவார். அவர் க.பொ.த. உயர்தரம் வரை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் கல்வி பயின்றார். நான் அஞ்சலதிபர் உத்தியோகம் பார்த்தபடியால் பல இடங்களுக்கு மாற்றலாகிச் செல்லும்பொழுது அவர் சுழிபுரத்தில் எனது சகோதரர் சிவகணேசசுந்தரம் சிவஜோதியின் சித்தப்பாவுடனும் யாழ்ப்பாணத்தில் நீராவியடியில் வாழ்ந்த எனது மாமனாரும் சிவஜோதியின் பேரனாருமாகிய அமரர் வித்துவான் பொன். முத்துக்குமாரனுடனும் இருந்தும் கல்வியைத் தொடர்ந்தார்.

சிவஜோதி, சிறு பராயத்தில் இருந்தே சைவ அனுஷ்டானங்ளிலும் இறை வழிபாட்டிலும் விருப்பத்துடனும் அக்கறையுடனும் வாழ்ந்து வந்தார். தமிழை தமிழாக பாவிக்க வேண்டும். நேரத்திற்கு ஏற்ப சொற்பிரயோகங்கள் மாற்றமடையக்கூடாது என்பது அவரது நோக்கு. தினகரன் ஆசிரியர் குழுவில் கடமையாற்றும் பொழுது சிலர் பத்திரிகையில் தமிழைக் கடுமையாக பார்க்கத் தேவையில்லை என்றும் வாசகர்களுக்கு விளங்கினால் போதுமென்றும் விட்டுவிடுவார்கள். ஆனால் சிவஜோதி சரியான சொற்பதங்களைப் பாவிக்க வேண்டும் என்றும் இலக்கணப் பிழை இல்லாமல் விடயங்களை பிரசுரிக்க வேண்டும் என்றும் திடமான நிலைப்பாட்டுடன் பணியாற்றினார். இதனால் இடைக்கிடையே ஏனையவர்களுடன் முரண்பாடு ஏற்பட்டதாகவும் நான் அறிந்தேன்.

அவர் தமிழ் மீது கொண்ட அக்கறைக்கு காலம்சென்ற வித்துவான் பொன். முத்துக்குமாரன் சிவஜோதியின் தாத்தா (அம்மாவின் தகப்பனார்). முற்போக்கு எழுத்தாளர் புத்தகங்கள், பத்திரிகைகள் வெளியீட்டாளர் "வரதர்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் தி.ச.வரதராசன் மற்றும் எமது உறவினர் “சொக்கன்“ என்று அழைக்கப்படும் சொக்கலிங்கம் நாடகக் கலைஞர், எழுத்தாளர், சிறந்த பேச்சாளர் ஆகியோரின் உறவும் தொடர்புகளும் காரணமாக அமைந்தது எனலாம்.

சிவஜோதி ஆரம்பக் கல்வியை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்வுடனும், எனது பதவி உயர்வுடனும் நானும் எனது துணைவியாரும் நுவரெலியா மாவட்டத்தில் பூண்டலுஓயாவுக்கு அஞ்சலதிபராக கடமையேற்று சென்ற போது. நுவரெலியா சென் சேவியர் கல்லூரியில் உயர்தரத்தை கற்றார். தொடர்ந்து கொழும்பு நாவல திறந்த பல்கலைக்கழகத்திலும் கற்றார். City and Guilds Electrical and Electronic முடித்துள்ளார்.

இவர் நாடகத்துறையில் நாட்டம் கொண்டிருக்கும் பொழுது ஜேர்மன் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து மேடைகளில் ஒலி ஒளி அமைப்புக்களை திறம்பட அமைக்கும் பயிற்சியும் பெற்று பல மேடைகளில் செய்தும் வெற்றி கண்டுள்ளார். சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்களுடன் இணைந்து நாடகக் கலைஞர், புகைப்படப்பிடிப்பாளர், ஒப்பனையாளர் அமரர் அரசையா, ஓவியர் இராசையா போன்றோருடன் இணைந்து இலங்கையில் இருந்து ஒரு குழுவினரும், இலண்டன் மாநகரில் கலைஞர் தாசீசியஸ் தலைமையில் ஒரு குழுவினரும், தென்னிந்தியாவில் ஒரு குழுவினருமாக மூன்று குழுக்களும் ஒருமித்து நாராய் நாராய் என்ற நாடகக் குழுவாக பதின்மூன்று மேடைகளில் யாழ்ப்பாண மக்களின் நிலைமையை உணர்த்தும் விதமான கருத்துக்கள் கொண்ட நாடகங்களைச் சிறப்பாக நடத்தியும் இருந்தார். இந்தியாவில் இருந்த நாட்களில் கிராமப்புறங்களில் உள்ள பழமை வாய்ந்த கலைஞர்களுடன் தப்பு மற்றும் பறை போன்ற வாத்தியங்களின் பயன்பாடு பற்றியும் அவர்களுடன் பேட்டிகள் கண்டும் அதனைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கவும் வழிவகுத்துள்ளார். கொழும்பில் இருந்த நாட்களில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்தபோது அமரர் கந்தசாமி மாஸ்டர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தமிழ்ச் சங்க வளர்ச்சியிலும் பாடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கலை இலக்கிய பேரவையில் தானும் இணைந்து கலைஞர்களை எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் அறிவாற்றலை நாம் அனைவரும் பெறும் வண்ணம் ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமி தினத்தில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களையோ வெளியிட்டு வைத்து பங்குபற்றியுள்ளார்.

அத்துடன் நின்றுவிடவில்லை ஜோதி, கிளிநொச்சியில் வந்திருந்து கொண்டு தனது செயற்பாடுகளை தனது எண்ணங்களை நடைமுறைப்படுத்த பல அன்பர்களையும் தொண்டர்களையும் தேடி அணுகி இளைய தலைமுறையினரை சிறப்பாக உருவாக்க பல வகைகளில் ஈடுபட்டிருந்தார். இவையெல்லாம் அவரின் இறுதிக் கிரியையின் போது பல பெரியவர்கள், அன்பர்கள், தோழர்கள் சொல்ல கேட்டேன். பல பத்திரிகைகளில் ஜோதியின் அபிமானிகள் எழுதியதை வாசித்து அறிந்து கொண்டேன்.

சிவஜோதி உறவுகளிலும் அன்பு கொண்டவர்.

ஆயினும் சமூகத்திற்கு செய்த சேவை அளப்பரியது. அவரின் பிரிவு எதிர்பாராத இழப்பு. ஜோதி சிவஜோதியாக திருவாதிரை தினத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்து விட்டார்.

ஓம் நமச்சிவாய

சாந்தி! சாந்தி! சாந்தி!

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சிவகணேசசுந்தரன் (சித்தப்பா)**

(முன்னைநாள் அதிபர். வட்டு. இந்துக்கல்லூரி.)

## யாவரது மனதிலும் ஜோதி

தோன்றின் புகழோடுதோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று – திருக்குறள்

மக்களாய் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டும். அக்குணமில்லாதார் மக்களாய் பிறத்தலின் பிறவாமை நன்று.

வாழ்ந்து மறைந்த ஜோதி இக் குறளுக்கு ஏற்புடையவராகின்றார். இவ்வாறு கூறுவதற்கு அவரிடம் தகுதி இருந்தது. அவரின் சிறந்த தகுதியை பல்வேறு சந்தர்ப்பங்களில் அறியலாம். ஆயினும் நான் எம்முடனான அவரது அனுபவங்களையே குறிப்பிட விளைகிறேன்.

நானும் அவரும் ஒரே குடும்பத்தவர்கள். பிறப்பில் இருந்து இறப்புவரை அவர் எம்முடன் நெருக்கமாகவும் அன்பாகவும் பழகினார். அவர் எம்முடன் சம்பந்தபடாதவிடயங்கள் எதுவும் இல்லை. பஞ்சமாபாதகங்கள் மலிந்த இக்கால உலகத்தில் நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு இவர் ஓர் உதாரணமானார். இந்தக் காலத்தில் நல்ல இயல்பைக் கொண்டிருப்பது சிரமம். அதை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பது இன்னும் சிரமம். ஆனால் ஜோதி பல நல்ல இயல்புகளை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்துள்ளார். பொய், களவு, ஏமாற்று, வஞ்சகம், பேராசை, சுயநலம் எதுவும் இவரிடம் இல்லை. இவர் தனது குடும்பத்திற்குரிய வாழ்க்கை முறையை, இறைவழிபாட்டினைக் கரிசனையோடு இறுதிவரை இயன்றளவு பின்பற்றி தனக்கும், தன் குடும்பத்திற்கும் பெருமை சேர்த்தார். காலமாற்றம் பலரை மாற்றியுள்ளபோதும் அவர் நெருக்கடியான சூழ்நிலைகளிலும் பலகாலம் சைவ அனுட்டானங்களை மேற்கொண்டுவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்ற பேரவா உடையவராக இருந்தார். எச்செய்கை செய்வதாகிலும் எம்மையும் அனுசரித்தே செய்யவேண்டும் என்ற நல்ல மனம் அவரிடம் இறுதிவரை இருந்தது. எவரையும் தவிர்த்து மனம் நோகும்படி செய்ய எண்ணமாட்டார். எல்லோரையும் மதிக்கும் மனம் அவரிடம் இருந்தது. சிறியவர்கள், பெரியவர்கள், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அவர்கள் நிலைக்குச் சென்று அவர்களுக்கேற்ப நடந்து நன் மதிப்பைப் பெற்றார். சிறுவயதில் இருந்து இறக்கும்வரை சித்தப்பாவாகிய என்னிடத்தில் அன்புடனும் பணிவுடனும் பழகியவர். உறவுகளிடையே நெருக்கடி ஏற்படும் போது துணிவுடன் நியாயத்தின் பக்கம் நிற்கும் அரிய பண்பினை கொண்டிருந்தார். உறவினர், நண்பர்கள் தொடர்புகளைப் பேணி நடந்தார்.

பெருந்தன்மை, அடக்கம், பணிவு, பிரச்சினைகளைக் கையாளும் முறை போன்றன இவரது வெற்றிக்கு வழிவகுத்தன. இதனால் எல்லோரிடத்திலும் நல்ல மதிப்பைப் பெற்றார். இக்காலத்தில் எல்லோரிடமும் நன்மதிப்பைப் பெறுவது இயலாத காரியம். இதனால் பலர் ஒன்றிலும் ஈடுபடாது ஒதுங்கியிருப்பதுண்டு. குறுகிய வழியில் சுய இலாபம் தேடும் மனிதர்களிடையே வேறுபட்டவராக எளிமையானவராக பல நற்காரியங்களை சளைக்காது நிறைவேற்றியுள்ளார்.

நல்ல பழக்கவழக்கம், குடும்ப ஒற்றுமை, ஏழைகளின் நலன் என்பவற்றையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் கிளிநொச்சி வாழ் மக்கள், பாடசாலைக் கல்வி நிறைவேற்றிய பிள்ளைகள் என அவர்களிடத்தில் அதிக கவனம் செலுத்தியிருந்தார். எப்போதும் அதைப் பற்றியே சிந்திப்பார், கதைப்பார், செயற்படுவார். எம்முடனும் அவைபற்றிய எண்ணங்களை பகிர்ந்து கொள்வார். இதனால் தன்னைக் கவனிக்கும் பழக்கம் குறைந்து கொண்டே போனது. அவரது பாக்கியம் அவருக்கு நல்ல மனைவி கிடைத்தது. அவரும் ஜோதிக்கு பக்க துணையாக வீட்டிலும் வெளியிலும் இருந்தார். இருவரும் சேர்ந்து பல சமூக செயற்பாடுகளைச் செய்ததைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஈற்றில் ஜோதி நோயுற்றபோது ஜோதியின் நலனுக்காக அவர் அரும்பாடுபட்டதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கூடியதாக இருந்தது. இதில் ஜோதியின் இறைநம்பிக்கை அளப்பரியது. படிப்படியாக உணர்வுகள் அடங்கிக் கொண்டுபோகும்போது ஜோதி தன் மனைவியிடம் இறைநாமத்தைத் தன் காதில் கூறுமாறு சொல்ல அவர் அருகில் இருந்து அதனை இடைவிடாது உச்சரித்தார். அதேவேளை யாவரும் போற்றும் மார்கழித் திருவாதிரை நன்நாளில் இறைவனடி சேர்ந்தார்.

ஜோதியின் மனிதநேயத்தினை அவரது மரணத்தின் பின் உள்ள சான்றுகள் உறுதி செய்கின்றன. யாவரும் தமது உணர்வுகளைப் பலவாறு வெளிப்படுத்த அரும்பாடுபட்டுள்ளனர். நாட்டில் கொவிட் 19 கட்டுப்பாடுகள் அதற்குத் தடையாக இருந்தன.

ஜோதி யாவர் மனதிலும் உன்னத இடத்தைப் பிடித்துள்ளார் என்பது வெளிச்சம். அவரைப் போல் நாமும் வாழவேண்டும் என்ற எண்ணக் கருவை விதைத்துச் சென்றுள்ளார். அவரது இழப்பு எமக்கு பேரிழப்பாகும். அவரது ஆத்மா நிச்சயம் இறைவனிடத்தில் சேரும். அதற்காக நாமும் பிரார்த்திப்போம்.

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல் — திருக்குறள்

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு. தயாநிதி (தாய்மாமன்)**

(பொறியியல் நிபுணர் சிட்னி, அவுஸ்திரேலியா.)

## காவியத் தலைவன் சிவஜோதி

உலகில் பலர் அறநெறியில் நடப்பதாகக் காட்டிக்கொண்டு மனத்தில் மாசுடன் இருப்பர். மனத்தில் அழுக்கு இருந்தால் வெளியில் பேசுவன, செய்வன எல்லாம் வெறும் நடிப்பாகிவிடும். அவை தம்மை அறநெறியாளராகக் காட்டிக்கொள்ள என்று செய்யப்படுவன. மனத்துக்கண் மாசின்றி இருத்தலே அடிப்படை அறமாகும். வள்ளுவப் பெருந்தகை படைத்த குறளில்

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற"

என்று கூறப்பட்ட கருத்துக்கமைய சிவஜோதி தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார் என்றால் அது மிகையாகாது. மற்றவர்களின் வளர்ச்சி கண்டு பொறாமைப்படுதல், தேவைக்கதிகமாகப் பொருள் சேர்த்தல், தமக்கும் பிறர்க்கும் பயன்படாத சொற்களைப் பேசுதல், பொய் பேசுதல், புறங்கூறுதல் போன்ற தீய குணங்களின்றி நல்ல அறநெறியில் வாழவேண்டும் என்ற கொள்கையுடன் சிவஜோதி தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார். எல்லோரும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் இன்புற்று வாழவேண்டும் என்ற திருமூலரின் அருள் வாக்குக்கிணங்கத் தன் வாழ்வை அமைத்துக்கொண்டார்.

சிவஜோதி தம் அறவாழ்க்கையின் அங்கமாக சமூக சேவை, சமூக நலன், சமூக அபிவிருத்தி போன்ற தொண்டுகளில் தம்மை அர்ப்பணித்திருந்தார். அதற்கு உதவியாக லிற்றில் எய்ட் என்ற அமைப்பு அவருக்கு ஒரு நல்ல தளம் அமைத்துக்கொடுத்து உதவியது. தன் உடல் பொருள் ஆவி அனைத்தினையும் அந்த அமைப்புக்குக் கொடுத்து, அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவரைச் சிறுவயதிலிருந்தே நன்கு அறிவேன். சிறுவயதிலிருந்தே, தன் வயதை ஒத்த சிறுவர்களிலிருந்து மிகவும் மாறுபட்டுக் காணப்பட்டார். அவருக்கு ஒன்பது வயதாகவிருந்தபோதே நான் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டாலும், விடுமுறைகளில் வரும்போது அவர் சைவ நெறியை நேர்த்தியாகக் கடைப்பிடிக்கும் பக்குவத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். வெள்ளை வேட்டியில் சைவ சமய அனுட்டானங்கள் செய்வதிலிருந்து, சிரித்த முகத்துடன் யாவருடனும் பழகும் பாங்குவரை அவரது செயல்கள் அனைத்தும் எவரையும் வசீகரிக்கும்.

2019 September இல் நானும் மனைவியும் இலங்கை சென்றபோது கிளிநொச்சியிலிருந்து வந்து எங்களைச் சந்தித்தார். அதுதான் எங்கள் கடைசி நேரடிச் சந்திப்பு, அதன்பின் சமூக வலைத்தளம் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் என்னை அடிக்கடி தொடர்புகொண்டு தன் வேலைகளைப் பற்றியும் தனக்கு உதவும் அரசாங்க மற்றும் சமூக ஆர்வலர்களைப் பற்றியும் மிகுந்த அக்கறையுடன் குறிப்பிடுவார். தன் மாணவ மாணவிகளுக்கு ஒரு சிறப்பான கல்வி மட்டுமல்லாமல் அவர்கள் எதிர்காலம் சிறப்பாக அமையத் தேவையான வேலைப் பயிற்சிகள் கொடுக்க வேண்டிய அவசியத்தையும் மிகவும் உணர்ந்து பேசுவார். Welding, Lathe Machine போன்ற பொறியியல் பட்டறைகளை அமைத்துப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்பது தன் கனவு என்று கூறினார்.

2021 பொங்கலுக்கு ஒரு விழா அமைத்துக் கிளிநொச்சி வாழ் மக்களையும் கலந்துகொள்ள அழைக்கவேண்டும் என்று எண்ணியிருந்தார். ஆனால் அவர் கனவு பலிக்கும் முன் இறைவன் தன்னுடன் சிவஜோதியை அழைத்துக்கொண்டான்

சிவஜோதியின் வாழ்க்கை ஒரு காவியம். சிவஜோதி ஒரு காவியத் தலைவன்!!

அன்பே சிவம். அன்பே சிவஜோதி .

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ. சிவப்பிரகாஷ் (அண்ணா)**

(கட்டார்)

## ஜோதி - மறைந்த பின் எனக்கு ஒளி காட்டிய தம்பி

இதை ஜோதியே வாசிக்க வேண்டும் என்ற ஆவலில் எழுதுகிறேன். இது அவனது 50 வயது அண்ணனின் எழுத்து. என் தம்பி. டிசம்பர் 30 ம் திகதி ஒரு புதிய ஜோதியை எனக்கு அறிமுகம் செய்துவிட்டு மறைந்துவிட்டான். நானும் அவனும் சேர்ந்திருந்த காலங்களில், எமது 5-7 வயது காலம் தான் நாம் மிகவும் சந்தோசத்தையும் சுதந்திரத்தையும் அனுபவித்து வாழ்ந்த காலமாகும்.

வவுனியாவில் இருக்கும் போது குரங்குகளை விட அதிகம் தாவித் திரிந்தோம். வீட்டை ஒட்டியிருந்த ஸ்ரீமுருகன் சினிமா தியேட்டரில் தான் எமது பெரும்பகுதி பகல் வாழ்க்கை. படங்களுக்கான Poster, Cut Out வரைவதை, வண்ணம் தீட்டுவதை வேடிக்கை பார்ப்பது, ஆளில்லாத தியேட்டரில் இருக்கைகளை எண்ணுவது என்று பொழுது கழித்தோம். சுழிபுரத்துக்கு வந்தபின் வளவு முழுக்க ஓடியது, வைக்கோற் போரில் குதித்தது, மணலிலும் வெள்ளத்திலும் விளையாடியது எல்லாம் பொற்காலம்.

வளர வளர அவன் பல விடயங்களை ஆராய நினைத்திருப்பான் போலும். கையில் என்ன பொருள் கிடைத்தாலும், அதைத் திறந்து அல்லது உடைத்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கும் ஆவல் அவனுக்கு. அதனால், வீட்டில் பல பொருட்களைப் பழுது பார்க்கும் ஆற்றலும் அவனுக்கு வளர்ந்தது. அவனது செம்மை கலந்த வெள்ளை மேனி, பொன் போன்ற மினுங்கும், நெளி நெளியான தலைமுடி, கரு விழிகள் என்று தோற்றத்தால் எல்லோரையும் கவர்ந்தான்.

பள்ளிக்கூடம் போகும் வயது வர அவனுக்கு நெருக்கடி ஆரம்பித்தது. அவனது ஆர்வத்திற்கும், ஆராய்ச்சிக்கும் அழுத்தங்கள் கிடைத்தன. எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அவன் எதையும் சொல்லியோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தோ நான் அறிந்ததில்லை. தனக்குப் பிடித்ததை, தன்னால் இயன்ற பாணியில் சொன்னான் செய்தான். நான் பார்த்த ஜோதி, வாழ்க்கையின் பெரும்பகுதியை விமர்சனங்களுடனும், வினாக்களுடனுமே கழித்தவன். அவனுக்கு மற்றவரிடத்தில் நல்ல அங்கீகாரம், அபிமானம் கிடைக்க வேண்டும் என்றுதான் நான் எப்போதும் விரும்பினேன்.

ஆனால், டிசம்பர் 30 ம் திகதிக்குப் பிறகு என் தம்பியைப் பற்றி அறிபவை எல்லாம், எனக்கு ஒரு புதிய ஜோதி கிடைத்ததாகவே தோன்றுகிறது. சந்திரனின் மறு புறம் ஒளி இருக்க, பிறைச் சந்திரன் என்று இதுவரை காலமும் எண்ணியிருக்கிறேன்.

ஒருவரைப் பற்றி அறிய வேண்டுமானால், அவர் நட்பு வட்டாரத்தைத் தெரிந்து கொண்டால் போதும் என்பார்கள். ஜோதியுடன் கூடப் படித்தவர்கள், மற்றும் நண்பர்களின் அறிமுகம் எனக்கு இப்போது தான் கிடைக்கிறது. அவர்கள் அவனைப் பற்றிச் சிலாகிப்பதைக் கேட்கும்போது, அவன் எண்ணங்களை செயல்களை, ஏற்றுக்கொள்ளும், வரவேற்கும் ஒரு உலகம் இருந்திருக்கிறது என்று பிரமிப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

கணனிகள் திருத்துவது, மின்சாரம் தொடர்பான வேலைகள், மொழிபெயர்ப்பு, புத்தக வெளியீட்டு விழாக்கள், தமிழ்ச்சங்கம், நாடகம், வானொலி (ஐபிசி), என்று பல விடயங்களில் ஈடுபாடுள்ளவன் என்று தெரிந்தாலும் அந்தந்த துறைகளில், இவ்வளவு முத்திரை பதித்து, தனது ஆளுமைத் திறன், ஒழுக்கம், தலைமைத்துவம், நிர்வாகத் திறன், திட்டமிடல், ஒத்துழைக்கும் மனப்பாங்கு என்று பல பண்புகளை வெளிக்காட்டி, பலரின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறான் என்று இப்போது தான் தெரிந்து கொள்கிறேன்.

குறிப்பாக, கடந்த 3 வருடங்களாக கிளிநொச்சியில் “லிற்றில் எய்ட்” நிறுவனம் மூலம் தனக்கும் மற்றவர்க்கும் பிடித்ததைச் செய்து வந்திருக்கிறான் என்று அறியும் போது, மிகவும் புளகாங்கிதமாக இருக்கிறது. ”என் குறைகளை என்னிடமே சொல்லுங்கள் - நான் திருந்த முயற்சிக்கிறேன். என் நிறைகளை என் முன்னே சொல்லாதீர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தலைக்கனம் வரக்கூடும்" என்பது யாரோ ஒருவர் கூற்று. ஜோதி, தன் பெருமைகளை மற்றவர் சொல்லும்போது, தான் பார்க்கவோ, கேட்கவோ கூடாது நாங்கள் மட்டும் அறிந்தால் போதும் என்று தான், தன் கண்களையும், காதுகளையும் இறுக்க மூடிக் கொண்டானோ?

"......ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்!"

இது இளம் வயதில் இறந்து போன பூம்பாவையை உயிர்ப்பிக்க திருஞானசம்பந்தர் பாடியது, அரை நூற்றாண்டு காணமுதல் ஆவி பிரிந்த ஜோதியை மீட்க நான் திருஞானசம்பந்தரைத் தேடுவேனா, அல்லது, அந்த அருமையான ஆதிரை நாளில் அரன் அடி அடைந்தான் என்று பெருமை கொள்வேனா?

என் அப்பாவின் அப்பா, மாசி மகம் அன்றும், அம்மாவின் அப்பா கார்த்திகைக் கார்த்திகை அன்றும் இறையடி சேர, என் தம்பி தனக்கென ஒரு சிறப்பான தினம் பார்த்துச் சென்று விட்டான். ஜோதி விட்டுச் சென்ற ஒளி, அவனோடு தொடர்பாயிருந்த அனைவர் வாழ்விலும் மிளிர வேண்டும் என்பதே என் அவா.

என் தம்பியின் மகிழ்வான உலகத்தைச் சேர்ந்தவர். அவன் வளர்ச்சியில் பங்கெடுத்தவர், அவன் சுகவீனமாக இருந்த கடைசி 40 நாட்களிலும் பல விதத்திலும் தம் நட்பையும், அன்பையும் காட்டிய அனைவருக்கும், வைத்தியர் மற்றும், வைத்தியசாலை ஊழியர் எல்லோருக்கும், என் மனமார்ந்த நன்றி கலந்த வணக்கங்கள்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. அனுமேஹா (மருமகள்)

### மாமா

அன்பும் அறிவும் ஊட்டி
பண்புடன் வளர்த்த மாமா.. !
இன்பம் மட்டுமே எனக்கு என்றும் தந்த மாமா...!
பள்ளிப் பாடங்களையும்
பக்குவமாய்ப் போதித்த மாமா...!
விளங்காத கேள்விகளை விளக்கித் தந்தவர் மாமா...!
கணினி அறிவை எனக்குக் கற்றுத் தந்தவர் மாமா..!
என்னை விட்டுச் சென்றாலும்
என் இதயமெல்லாம் அவரே....!

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை (கலை இலக்கிய நண்பர்)

(ஓய்வு நிலை அதிபர், இளவாலை)

### உலகு பயனுற வாழ்ந்த உத்தமர் சிவஜோதி

சைவத்தமிழ் பண்பாட்டில் குலம் விளங்க வந்தோன்
சால்புக்கு அணியாக வாழ்ந்திட்ட சான்றோன்
என் இதயம் குடிகொண்ட என் இனிய நண்பன்
எல்லோருக்கும் நல்லசெய்யும் இயல்புடைய நல்லோன்
முகத்தழகு போலத்தான் அகத்தழகும் கொண்டோன்
முத்தமிழும் வல்லபெரும் கவினுடைய கலைஞன்
உலகு பயன்பெற வாழும் இலட்சியத்தில் நின்றோன்
உத்தமனென்றுலகுபுகழ் சொல்லிடவே வாழ்ந்தோன்
கொழும்பினிலே தமிழ்ச்சங்கம் உயரத்தோள் கொடுத்தோன்
குலவுபுகழ் எழுத்தாளன். தினகரன் உதவி ஆசிரியன்
ஒன்றேதான் குலம்என்னும் உயர் குணத்தின் குன்றம்
ஒன்றுமின்றி நலிந்தோரை வாழ வைத்த தெய்வம்
உதவியெங்கு தேவையோ அங்கோடிச் சென்று
உதவுகின்ற உயர் குணத்தோன் உத்தமன்நல் தொண்டன்
உளம் விரும்பி கௌரியைத்தன் துணையாகக் கொண்டே
உயர்ந்தோர்கள் வாழ்த்திடவே இல்லறத்தில் இணைந்தோன்
இலட்சியநல் தம்பதியர் என்றெவரும் போற்ற
உலகுபயன் உறவாழ்ந்தே தவவாழ்வில் வென்றோன்
சிவசோதி இன்றுசிவ சிவசோதியிலே கலந்தார்அவர்
தவவாழ்வு உலகுள்ள காலம்வரை நிலைக்கும்

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வை. இரகுநாதமுதலியார் (மாமா)

(நம்பிக்கைப் பொறுப்பாளர், ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம், நீராவியடி, யாழ்ப்பாணம்.)

### திருவாதிரை ஜோதியுடன் ஐக்கியமான சிவஜோதி

ஒரு விதைக்குள் புதைந்துள்ள வீரிய சக்தி விழித்து, முளைத்து தன்னை காண்பிக்கும்போதுதான் அதன் ஆற்றல் மற்றவர்களுக்கு தெரிய வருகின்றது. தனக்குள் இருக்கின்ற வீரியத்தை - ஆற்றலை - கண்டுபிடித்தவர்களே மற்றவர்கள் தன்னை மொய்க்கும்படியான ஆற்றலில் உயர்ந்து நிற்பார்கள்.

ஆசாரம் மிக்க சைவ சமய அனுஷ்டானங்கள், இறைவழிபாடுகளைக் கொண்டு வாழ்ந்த குடும்பத்தில் பூர்வபுண்ணியப் பலனாகத் திருவாளர்கள் பொன். முத்துக்குமாரன், தி.பொன்னம்பலவாணர், சொக்கலிங்கம் (சொக்கன்), தி.ச.வரதராசன் (வரதர்) மற்றும் வயித்தீஸ்வரன் மரபு வழியில், உறவினர்களாகப் பெற்றுப் பிறந்தவரே, இலைமறைகாயாக வாழ்ந்து மறைந்த செம்மனச்செம்மல் சிவஜோதி அவர்கள். இறைவன் பணித்த பணிகளை ஆற்றப் பூலோகம் வந்தவர், அப்பணிகள் ஓரளவு பூர்த்தியானதும், இறைவன் அவரது நாற்பத்து ஒன்பதாவது வயதில் தன்னிடம் அழைத்துக்கொண்டார்.

கனிகள் தனக்குக் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பை விடுத்து, வருங்காலச் சந்ததியின் நன்மை கருதி மரங்களை நடும் மனிதர்களே, ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவை. அவ்வாறான ஒரு மாமனிதரே பல்துறை வித்தகர் சிவஜோதி அவர்கள்.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தியில் பெரியவர். ஆன்மீகம், இறைபக்தி, தமிழ்ப்புலமை, முற்போக்குச் சிந்தனைகள், கலைகளில் நாட்டம், இலக்கியப் பிடிப்பு, சமூக அக்கறை போன்ற பல பல துறைகள் இவருள் பொங்கிப் பிரவாகித்தன. பெற்றுக்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு, கற்றுக்கொண்ட அனுபவங்கள், பரந்த மனப்பாங்கு என்பன இவரை வழிப்படுத்தின. குடத்தில் இட்ட விளக்காக ஆரவாரம் இன்றி, தனக்கென சில கடமைகளை பொறுப்பு ஏற்று வாழ்ந்தார்.

மகிழ்ச்சி என்பது பிறரையும் மகிழ்வாக வைத்திருப்பதுதான் என்பதை மரணத்தின் துரத்தலில், திடீரென்று காணாமல் போய்விட்ட நேரத்தில் இவரது இதயத்தின் தூய மொழிகளைப் புரிந்து கொண்ட நண்பர்களின் இரங்கல் உரைகளில் உணரக் கூடியதாக இருந்தது.

எத்தனை ஆண்டுகள் வாழ்வது என்பது பெரிது அல்ல. எப்படி வாழ்ந்தார் என்பதுதான் பெருமையும் சிறப்பும். தன் நலம் கருதாத தொண்டுள்ளம் இவருடையது. சமூதாயத்திற்குத் தன்னால் இயன்ற தொண்டுகளை, தனித்தும், நண்பர்களுடன் இணைந்தும் ஆற்றினார். தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்புத் தமிழ்ச் சங்கம், பல பல நாடகக் குழுக்கள், கிளிநொச்சி கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், மக்கள் சிந்தனைக் களம், நூலகம், ஆவணமாக்கல் பிரிவு, லிற்றில் எய்ட் நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனர் போன்ற பல தொண்டு ஸ்தாபனங்களில் தன்னை இணைத்துக் கொண்டு, தன்னாலான பணிகளை சிறப்பாக ஆற்றி பலராலும் பாராட்டப்பெற்றார்.

முன்னோரிடமிருந்து மரபணு வழிவந்த சமய அனுஷ்டானங்கள், தமிழ் அறிவு, தமிழ் ஆர்வம் என்பன இயல்பாகவே கை வந்த கலையாக இவரிடம் பொலிந்தன. இலங்கையில் புகழ்பெற்ற நாளிதழான "தினகரன்" பத்திரிகை ஆசிரியர் குழுவில் பணியாற்றி, பத்திரிகையை இலக்கணப் பிழைகள் இன்றி, பல பல சுவையான இலக்கியச் செய்திகளுடன் வெளிவர காரண கர்த்தவாக இருந்தார்.

எங்கு புத்தக வெளியீடுகள் இடம்பெற்றாலும் அங்கு தவறாது பிரசன்னமாகி முதற் பிரதியை வாங்கி தனது நூலகத்தில் அலங்கரிப்பதில் தவறுவதில்லை.

தமிழ் ஆர்வம் காரணமாக "இருக்கிறம்" என்னும் தமிழ் சஞ்சிகையிலும் தன்னை இணைத்து பணியாற்றினார். தமிழ் நூல்களை வெளியிடும் எழுத்தாளர்களுக்கு தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பை நல்கினார். தமிழில் பற்றுக்கொண்டவர்களுக்கு இலவசமாகவே தனக்குக் கிடைக்கும் ஆக்கங்களை கொடுத்து அவர்களை மகிழ வைப்பார். தமிழ்ச் சங்கத்தில் இவரது பணிகளை விதந்து பாராட்டி, எனது நண்பர் பண்டிதர் சு.செல்லத்துரை அவர்கள் பல முறை எனக்குச் சொல்லியுள்ளார்.

மனுஷ உறவு தூரத்தையும், நெருக்கத்தையும் வைத்து மலர்வது அல்ல, அது மனதோடு ஊற்றெடுக்கின்ற அன்பு-உணர்வு. இவருக்கு ஏராளமான நண்பர்கள். தன்னை மற்றவர்களுக்கு பின்னே வைத்து, மற்றவர் உணர்வுகளை முன்னிறுத்தி, மலர்ந்த புன்னகை பூத்த வதனத்துடன், உள்ளத்தில் பணிவும், உரையாடலில் இனிமையுமாக வாழ்ந்தவர். நாடகக் கலையில் தணியாத ஆர்வம் இவருக்கு. பல பல நாடகக் குழுக்களில் இவருக்கென்றே ஒரு தனி இடம். ஐபிசி வானொலி ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் அதன் கொழும்பு நிருபராக இருந்தார். ஊடகத் தொழிலில் பணிபுரியும் போது, பலரைப் பேட்டி கண்டு, தனது ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தார். அறிவின் வழி சென்று மெய்யைக் கண்டவர் எனலாம்.

சொர்க்கம் கிடைக்காத குறையை ஈடுசெய்ய இறைவன் அவருக்கு கொடுத்த அரிய பரிசு காதல் மனைவி கௌரி. நல்ல கணவனை உருவாக்கும் மனைவி ஒரு சிறந்த மேதை என்பர். காதலால் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து, கணவனின் சாதனைகட்குப் பின்புலமாக இருந்த பெருமை மனைவி கௌரிக்குரியது.

கிடைத்த சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி வாழ்ந்து இறைவன் அழைப்பை ஏற்றுச் சென்ற திருவாளர் சிவஜோதியின் வாழ்க்கை, இளஞ்சந்ததியினர் வாழ்க்கைக்கு ஒரு தூண்டுகோலாக, முன் உதாரணமாக, கண்ணாடியாக அமையும் எனலாம்.

"நெரு நல் உளன் ஒருவன் இன்(று) இல்லை என்னும்
பெருமை உடைத்(து) இவ் உலகு."

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி. பொன்னம்பலவாணர் (மாமா)

(பண்டிதர்)

### நல்லவாரிசு சோதி

என் சித்தப்பா பொன்முத்துக்குமாரன் 1989ல் உடலை விட்டு மறைந்த போது பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். அவர்களுள் சித்தப்பாவின் முன்வீட்டுக்காரரும் தொழிலதிபரும் சைவத்தமிழ் அபிமானியுமான திரு சண்முகலிங்கம் உரையாற்றும்போது சித்தப்பாவின் வாரிசாக அவர் பேரன் சிவஜோதி இவ்வீட்டிலேயே இருக்கிறார் என்று கூறினார். அவர் கூறியதுபோல் ஜோதி சித்தப்பாவின் வாரிசாக மட்டுமில்லாமல் தன் பேரன் சிவசிதம்பரம் தன்பூட்டன் முருகேசபிள்ளை ஆகியோரின் வாரிசாகவும் விளங்கியதாகக் காண்கின்றேன்.

மிக இளமையில் சமய தீட்சை பெற்ற நாளிலிருந்து அனுட்டானம் பார்ப்பதிலும் பின் தன் வழிபாட்டில் மலர் கொண்டு பூசித்தலிலும் ஜோதிக்கு இந்த ஈடுபாடு ஜோதியின் பூட்டன் முருகேசபிள்ளையின் பண்புகள் என்று கருதுகின்றேன். இதேபோல தாயில் பாசமாயிருந்ததால் தாயின் தேவைகளை அக்கறையுடன் கவனித்தல் போன்றவற்றில் தன் பேரன் சிவசிதம்பரம் அவர்கள் போல் இருந்திருக்கிறார்.

தமிழ் மொழி ஆர்வம் தமிழ்மொழியைப் பத்திரிகைகளிலும் பிற இடங்களிலும் காலத்துக்கு காலம் ஏற்றவகையில் மரபு பிறழாமல் விளங்கச் செய்தல் என்ற விடயத்தில் திரு சண்முகலிங்கம் கூறியது போல் சித்தப்பா பொன் முத்துக்குமாரன் போல் இருந்திருக்கிறார்.

ஜோதியின் தெய்வபக்தி பற்றி ஜோதியின் சித்தப்பா சிவகணேசன் குறிப்பிடும் போது ஜோதி குருபூசை மடம் பிள்ளையாரில் மிக ஈடுபாடுடையவர் என்றும் அவ்வப்போது விளக்குக்கு எண்ணெய் வாங்கிக் கொடுக்கும் வழக்கமுடையவர் என்றும் கூறியிருக்கிறார். இலக்கியம், நாவல், சிறுகதை, வரலாறு போன்றவற்றில் ஜோதிக்கு ஈடுபாடு அதிகம் என்றே கருதுகின்றேன். இவை தொடர்பான பல புத்தகங்களை வாங்கிப் படித்ததையும் அவற்றில் எனக்கு ஆர்வம் உள்ளவற்றை வலிந்து தந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியதையும் நினைத்துப் பார்க்கின்றேன். தன் பொருளாதார வசதிக்கு அதிகமாகவே புத்தகங்களை வாங்கியதைக் கண்டிருக்கின்றேன்.

சமூகசேவைகள் எதிர்காலத்தை ஆளும் இளைஞர், சிறுவர் விடயத்தில் ஜோதி கொண்ட அக்கறையையும் செயற்பாட்டின் விளைவையும் இறுதி அஞ்சலியின்போது கண்டு வியந்து கவலைப்பட்டேன்.

இவரது இழப்பு இவரது தாய் தந்தைக்கும் மனைவி முதலியோருக்கும் மட்டுமன்றி நம் ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் பெருநட்டத்தை உண்டு பண்ணியுள்ளதைக் காண முடிகின்றது.

உலக வரலாற்றில் இப்படியான பல இழப்புக்களை உண்டாக்கி நம்மவர் இழப்புக்களைப் பழக வேண்டும். ஆறுதலடைய வேண்டும். ஈடுசெய்யவதற்கான சிந்தனை முயற்சி சமூகத்தில் இருக்க வேண்டும்மென்பதை அறியமுடிகின்றது. விவேகானந்தர், ஆறுமுகநாவலர் போன்ற பலர் தீர்க்க ஆயுளுடன் வாழாது மறைந்தாலும் இன்றும் நம்மிடையே தம் சாதனைகளால் வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர். இப்படியான தன்மை ஜோதிக்கும் அமையும் என ஆறுதலுறுவோம்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடித் திரிந்த காலம்

ஒரு சராசரி மனிதன் தனது வாழ்க்கையை எவ்வாறு வாழப்போகின்றான் என்பது அவன் சிறுபிராயத்தினனாக இருக்கும் போதே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது என பழைய எண் கணித பஞ்சாங்கமோ, திருக்கணித பஞ்சாங்கமோ சொல்லவில்லை. விஞ்ஞான ஆய்வுகள் சொல்கின்றன. அப்படியானால் எமது வாழ்க்கையில் நாம் எதனையும் கற்றுக்கொள்வதில்லையா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. நிச்சயமாக கற்றுக் கொள்கின்றோம். எமது புறச்சூழல் எம்மில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது தான். ஆனால் அந்தப் புறச்சூழலுக்கு நாம் எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றோம் என்ற நுண்ணறிவு எம்மில் கணிசமான அளவு கட்டமைக்கப்பட்டு விட்டிருக்கும். அதன் அடிப்படைக் கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவருவது தனித்துவமான இயல்பு.

அன்று புறச்சூழல் கடுகதி வேகத்தில் மாறிக்கொண்டிருந்தது. 1977 இனக் கலவரத்தின் போது நாம் பள்ளிக்குச் செல்லத் தயாரான பருவம். எதனையும் புரிந்து கொள்ள முடியாத குழந்தைப் பருவம். ஆனால் 1983இல் பதின்மத்தை எட்டிப் பிடிக்க முயன்றுகொண்டிருந்த காலம். அன்றைய இனக்கலவரத்தின் தாக்கத்தை நாங்களும் உணரத் தொடங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 வெலிக்கடைப் படுகொலைகளையடுத்து இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தை நோக்கித் தள்ளப்பட்ட காலம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு இயக்கங்களில் சேர்ந்தனர். றலி, லுமாலா, ஹீரோ சைக்கிள்கள் என இயக்க இளைஞர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ற சைக்கிள்களில் விலாசம் எழுப்பிய காலம் அது. தமிழ்ச் சமூகமே அரசியலின்பால் அள்ளப்பட்ட காலம். மரணத்தின் பீதி கவ்விய காலங்கள் அவை. மூலை முடுக்குகளில் எல்லாம் கோயில் கட்டிய ஆன்மீகச் சமூகத்தின் புத்திரர்கள் படுகொலையாளர்களாக மாறினர். ஒரு புறம் புத்தரின் காவலர்கள் மறுபுறம் சிவனின் அவதாரங்கள். சகோதரப் படுகொலைகளில் தமிழ்ச் சமூகம் தன் ஆன்மாவைத் தொலைத்தது. மரண தண்டனைகளுக்குக் கூட காரணங்கள் தேவைப்படாத ஒரு கலிகாலம். அரசியல் விரோதிகளுக்கு மரண தண்டனை தீர்வானது. பொன்னாலை கிருஷ்ணனைக் கும்பிடச்சென்ற கிறிஸ்தவரான அல்பிரட் துரையப்பாவுடன் ஆரம்பமான படுகொலைக் கலாச்சாரம் அந்தக் கொலைக்கு காரணமானவரின் படுகொலை வரை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்தது.

நாம் பதின்மத்தை எட்டிப் பிடிக்கவும் அமைதிப் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கை ஆக்கிரமிக்கவும் சரியாக இருந்தது. சொந்த மண்ணில் அகதியான வரலாறு. இராணுவ நடவடிக்கைகளால் பெரும்பாலும் நேரடியாகப் பாதிக்கப்படாத பகுதிகளில் வட்டுக்கோட்டை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் வட்டுக்கோட்டைக்கு அண்மையாக இராணுவ முகாம்கள் எதுவும் இல்லை. வான்வெளித் தாக்குதலும் பெரும்பாலும் நடைபெற்றிருக்கவில்லை. ஆனால் இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த போது நாங்களும் அகதியானோம்.

இந்தியப் படைகளின் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைகளால் சிவஜோதி உட்பட எமது O/L பரீட்சைகள் 1987 டிசம்பரில் நடைபெறவில்லை. 1988 ஜூலையிலேயே நடைபெற்றது. எனது A/L படிப்பிற்கு விக்ரோரியாக் கல்லூரிக்குச் சென்றேன். சிவஜோதியுடன் மட்டுமல்ல விக்ரோரியாக் கல்லூரியின் நட்பு எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்ததே 1989இல் தான். சகோதர இயக்க மோதலில் எனது அண்ணன் கொல்லப்பட்ட செய்தி அறிந்து சிவக்குமார், சிவஜோதி, சுவேந்திரன் மற்றும் நண்பர்கள் வந்திருந்தனர். அதே மோதலில் எனது சகோதரியின் சினேகிதியின் சொந்த தம்பி மற்றைய அமைப்பைச் சார்ந்தவரும் கொல்லப்பட்டு இருந்தார். விக்ரோரியாக் கல்லூரியின் வைற் அன் வைற் யுனிபோர்ம் எனக்கு பிடித்திருந்தது. பெரும்பாலான பாடசாலைகளில் ஆண்கள் வைற் சேர்ட்டும் கறுப்பு கால்சட்டையும் அணிவர்.

சிவஜோதி அந்த காலகட்டங்களிலேயே பொறுப்புகளை துணிந்து ஏற்றுக்கொள்ளும் இயல்புடைய இளைஞன். எதனையும் சினேகபூர்வமாகக் கையாளக்கூடியவன். அதனால் பாடசாலையில் நாங்கள் செய்கின்ற திருகுதாளங்களில் எல்லாம் நாங்கள் சிவஜோதியை கூடச் சேர்த்துக்கொள்ளத் தவறுவதில்லை. ஏனென்றால் பிரச்சினை என்று வந்தால் பேச்சுவாரத்தைக்கு சிவஜோதியை அனுப்பிவிடலாம். அந்தச் சிரித்த முகத்தைப் பார்த்து யாரும் கோபிப்பதற்கு வாய்ப்பிருக்காது. சிவஜோதி எங்களுக்கெல்லாம் ஒரு பசுத்தோல்.

ஒரு தடவை சிவஜோதியே ஒருவருக்கு அடி போட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அவ்வளவுக்கு அவன் சிவஜோதியயை சீண்டியிருக்கிறான். எங்களுக்கோ யாரோடாவது பிடுங்குப்பட வேண்டும். எங்களுக்கு அது அல்வா கிடைத்த மாதிரி. அடி போடுவதற்கு சிவகுமாரை ஏற்பாடு செய்துவிட்டு சிவஜோதி சற்றுத் தொலைவிலேயே நின்றுவிட்டான். அவனை நையப்புடைத்து நாலு கேள்வியும் கேட்டு இரண்டு அடியும் போட சிவஜோதி வாறமாதிரி வந்து, எல்லாரையும் சமாதானப்படுத்துகிற மாதிரி சமாதானப்படுத்தி தன்னை சீண்டியவனை 'பெரும்தன்மையாகக்' காப்பாற்றி அனுப்பி வைத்தான். இவ்வாறு அன்றைய நாட்கள் பன்பலாகக் கடந்தன. விக்ரோரியாக் கல்லூரி கன்ரீனில் கடனுக்கு ரீயும் வடையும் வாங்கி அடிபட்டு பிரித்துண்ட காலம். அப்பொழுதெல்லாம் பாடசாலையில் சமைத்த உணவும் வழாங்கப்பட்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ வயதில் எங்களுக்கான வயதுக் கோளாறுகளும் மிகுந்திருந்த காலகட்டம். அப்போது எங்கள் உயிரியல் பிரிவில் சிவஜோதி, சிவக்குமார், ஜெயக்குமார், சுவேந்திரன், நான். எங்களுடன் கலைவாணி, கிருஜா, திரிசா என்று மூன்று பெண்கள். சிவஜோதியின் வாய்க்குள் அன்று முட்டையயைத் திணித்த அந்த உயர்ந்த உள்ளம் வேறுயாருமல்ல இந்த கலைவாணி என்ற 'உயர்ந்த' பெண் தான். கலைவாணிக்கும் திரிசாவுக்கும் வாய்க்கு எந்தக் குறைச்சலும் கிடையாது. யார் யாரைச் சைட் அடிக்கிறது என்ற பட்டியல் அவர்களிடம் இருக்கும். கிருஜா ஒரு வாயில்லா ஜீவன். மெல்லிய புன்சிரிப்பு ஒன்று தான் அவளுக்கு தெரிந்த மொழி. ஆனால் இந்த மூவரும் இல்லை என்றால் வகுப்பு சோபையிழந்து போகும்.

சிவகுமார் நல்ல நாள் பெரிய நாட்களுக்கு பாடசாலை வருவான் எஞ்சிய நாட்களில் பொன்ட் மாஸ்ரர் வீட்டில் தான் அவனைப் பார்க்க முடியும். அவன் எதற்கும் தயங்காமல் முன்நின்று செயற்படுவான். அவனை நம்பி என்ன திட்டமும் போடலாம். முழு மூச்சாகச் செயற்படுவான். அன்று ஜெயக்குமார் பெண்களைக் காட்டிலும் வெட்கப்படுவான். யாரையும் நோகடிக்கும் தைரியம் அவனிடம் கிடையாது. ஆபத்தான விடயங்களில் இறங்கப்போகிறோம் என்றால் அவனைக் காணக்கிடையாது. எந்த விடயத்திற்கும் முன்னுக்கு வரமாட்டான். சுவேந்திரனுக்கு நக்கல் நளினமாகப் பேசுவது ஒரு கலை. திட்டம் போட்டு உசுப்பேத்தி விடுவதில் நான் சுவேந்திரனோடு சேர்ந்துவிடுவேன். எங்கள் எல்லோருடைய ஒட்டுமொத்த பிரதிநிதியும் சிவஜோதி. நாங்கள் எடுக்கின்ற முடிவுகளில் எங்களோடு முரண்பட்டாலும் சிவஜோதி உடன்கட்டை ஏறத் தயாராகிவிடுவான். தன்னால் இயன்றவரை சிரித்து கெஞ்சிப் பார்க்கும் சிவஜோதி முடியாது என்று வந்ததும் தலையையும் சொறிந்துகொண்டு புன்சிரிப்புடன் வந்துவிடுவான். எங்களுக்குள் என்னதான் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் எடுத்த காரியத்தில் பின்வாங்குவதில்லை.

அப்பொழுதெல்லாம் எங்கள் எல்லோருக்குமே செல்வி ரீச்சர் மீது மிகுந்த அன்பும் மதிப்பும் இருந்தது. அவர் விலங்கியலும் தாவரவியலும் கற்பிப்பவர். அவர் எங்களுக்கு பாடம் எடுப்பதற்கு முன்னரே நாங்கள் என்ன படிக்க விரும்புகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை கேட்டு, ரியூசனில் நாங்கள் படிக்காததை அல்லது அங்கு எங்களுக்கு விளங்காததைக் கற்பிப்பார். மேலும் எங்களில் எங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாத போதும், அவருக்கு எங்கள் மீது இருந்த நம்பிக்கை எங்களைப் படிக்க வைத்தது. எங்களுக்கு பௌதீகவியல் கற்பித்தவர் ஆசிரியர் குமார். அவர் இயல்பு தனித்துவமானது. சிறந்த ஆசிரியர். வகுப்புகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இராசாயனவியல் எங்களில் பலருக்கு பிடித்த பாடம். அதைக் கற்பிக்க புதிய இளம் ஆசிரியை ஒருவர் வந்திருந்தார். அவர் அப்போது தான் பல்கலைக்கழகம் முடித்து வந்திருக்க வேண்டும். அவர் கற்பிக்கின்ற இரசாயன பாடம் விளங்கியதோ இல்லையோ அவருக்கும் எங்களுக்கும் இடையே இருந்த கெமிஸ்றி - இரசாயனம் நன்கு வேலை செய்தது. அவரை நாங்கள் யாரும் பெயர் சொல்லி ஞாபகம் இல்லை. 'இளசு' ரீச்சர் என்று தான் எங்களுக்குத் தெரியும். சுவேந்திரன் 'இளசு' என்று உச்சரிக்கும் போதே இளகிப் போவான்.

நாங்கள் ஏ.எல். 1990 இல் எடுக்க வேண்டியவர்கள். எங்கள் O/L பரீட்சைகள் பின் போடப்பட்டு A/L படிக்கச் சென்றபோது அதில் ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. எங்களுக்கு படிப்பில் கவனம் செலுத்தும் அளவிற்கு நாட்டுச் சூழலோ, எங்கள் குடும்பச் சூழலோ இருக்கவில்லை. ஹர்த்தால், பகிஸ்கரிப்பு, கடையடைப்பு எங்கள் நாளாந்த வாழ்க்கையின் அம்சம். சனி, ஞாயிறு காலைகளில் யாழ்ப்பாணம் ரவுனுக்கு ரியூசன் சென்றால் மண்டையன் குழுவினால் தலை துண்டிக்கப்பட்ட உடல்கள் சந்தியில் கிடக்கும். மின்சாரக் கம்பிகளில் துரோகிப் பட்டம் வழங்கப்பட்டு உடல்கள் தொங்கும்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்   - குறள் 260 – துறவியல்

என்று சொல்லும் தமிழுலகின் நிதர்சனங்கள் இவை. சிங்கள அரசிடம் இருந்து விடுதலை கேட்கும் தமிழினம் தம் சொந்த மக்களை சாதி, பிரதேசத்தைச் சொல்லி அடக்கி ஒடுக்குவதைப் பார்த்து வேதனையுற்ற சம்பவங்கள் நிறையவே இருந்தன. இன்று வரை எங்களில் யார் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது பற்றி யாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறையிருக்கவில்லை. எங்களில் சிவஜோதி மட்டும் சைவப்பாரம்பரிய பின்னணி என்பது தெரியும். ஆனால் சிவஜோதிக்கு ஒரு போதும் அந்த அடையாளம் தேவைப்பட்டு இருக்கவில்லை. சுவேந்திரனும் சிவஜோதியும் பாலர் வகுப்பு முதல் ஒன்றாகப் படித்தவர்கள். சிவஜோதி வீட்டுக்கு விளையாடச் சென்றால் சிவஜோதியின் பெற்றோர் உணவு பரிமாறாமல் அவர்களை அனுப்புவதில்லை என அடிக்கடி சுவேந்திரன் சொல்வான். அதே போல் சிவஜோதியும் எங்கு சென்றாலும் சைவமாகச் சாப்பிட்டு எல்லோருடனும் சங்கமித்துவிடுவான்.

அப்போது யாழ்ப்பாணத்தில் எமது பகுதிகளை நோக்கி மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். வறுமையின் பிடியில் வாழ்ந்த அம்மக்களுக்கு ஒரு நேரச் சாப்பாடாவது வழங்க வேண்டும் என்ற துடிப்பில் நாங்கள் எல்லோருமே மும்மரமாக இயங்கினோம். எங்களோடு மற்றைய பிரிவு மாணவர்களும் இணைந்து கொள்வார்கள். அதில் கிருபா, சிவரூபன், கணேசமூர்த்தி, குணபாலா, அனந்தி ஆகியோர் முக்கியமானவர்கள். நாங்களும் ஒரு அமைப்பாகச் செயற்பட வேண்டும் என்ற கருத்தை சிவஜோதி முன்வைத்திருக்க வேண்டும். அந்த அமைப்பிற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கான மாணவர் அமைப்பு – Students Organization for Affected People (SOAP) என்ற பெயரும் வைக்கப்பட்டது. சிவஜோதியின் நிர்வாகத் திறனும் ஆளுமையும் இவ்வாறு வெளிப்பட ஆரம்பித்தது. வீடு வீடாகச் சென்று மக்கள் தருவதை வாங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினோம். ஆனால் அது போதவில்லை. அக்காலத்தில் எனக்கோ சிவக்குமாருக்கோ கடவுள் மீது நம்பிக்கை இருக்கவில்லை. எமது அடுத்த இலக்காகப்பட்டது ஆலயங்கள். ஆலயங்களின் தர்மகத்தாக்களை அணுகுவதற்கு சிவஜோதி 'குருக்களை'விட சிறந்த நபர் யாரும் இருக்க முடியாது. ஒரு குழுவாகச் செல்வோம். பேச்சுவார்த்தைக்கு எங்களுடைய ட்ரம்காட் சைவப்பழம் சிவஜோதியின் 'சிவந்தமேனியும் பால் வெந்நீறும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்' தான். நாங்கள் அணுகிய எல்லா ஆலயங்களும் உணவை வழங்குவதற்கு முன்வந்தன. பரீட்சைகள் நடைபெறுமா இல்லையா என்ற நிலை தொடர எமது கவனம் முழுமையாக பொதுவேலைகளில் திரும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பது இயக்கங்கள் நான்காகி இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒட்டுமொத்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் மொத்த குத்தகைக்கு எடுத்தனர். மாணவர்கள் படிக்கப் போனால் போராட வரமாட்டார்கள் என்ற கணக்கும் அன்று இருந்தது. 1990 பரீட்சைகளை பகிஷ்கரிக்குமாறு இயக்கம் மெல்ல மெல்ல கோரிக்கையை உயர்த்தியது. யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி தென்னிலங்கைக்குச் சென்று சிலர் பரீட்சைகள் எழுதிவிடலாம் என்பதால் கொழும்புக்குச் செல்லும் வாகனங்களில் பதின்ம வயதினர் செல்கின்றனரா என்று கண்காணிப்பதில் இயக்கம் தீவிரமாக இறங்கியது. அதுவே பிறகு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதற்கு இயக்கத்திடம் அனுமதி பெற வேண்டும் என்ற நிர்ப்பந்தமாக மாறியது.

எங்களைப் பொறுத்தவரை பரீட்சை எடுத்தால் சித்தியடைய மாட்டோம் என்பது உறுதி. ஆனால் அடிப்படையில் பரீட்சைகளை பகிஷ்கரிப்பதில் யாருக்கும் பெருமளவு உடன்பாடு இருக்கவில்லை. மேலும் பரீட்சைகளை பகிஷ்கரிக்க சொல்லப்பட்ட காரணமும் பொருத்தமில்லாமல் இருந்தது. கிழக்கு மாகாணத்தில் மாணவர்கள் பரீட்சை எழுத முடியாது யுத்தம் நடக்கின்றது. அதனால் வடக்கில் பரீட்சை நடத்தக் கூடாது என்பது ஏற்புடையதாக இருக்கவில்லை. இயக்கத்தில் இணைந்து போராடும் அளவுக்கு எமக்கு இந்த விடுதலைப் போராட்டத்தின் மீது எவ்வித நம்பிக்கையும் இருக்கவில்லை. எங்களுடைய சகோதரர்களுக்கு நடந்த அனுபவங்களினூடாக நாங்கள் போராட்டம் பற்றிய மாயைக்குள் வீழ்ந்துவிடவில்லை. பரீட்சைகள் பகிஷ்கரிக்கப்பட்டமை எமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியது. வடக்கு கிழக்கில் இந்த பரீட்சைப் பகிஷ்கரிப்பு எங்களுடைய வாழ்வியல் தளத்தில் ஒரு பண்புநிலை மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல.

நாங்கள் ஒவ்வொருவராக யாழ் மண்ணை விட்டு வெளியேற ஆரம்பித்தோம். வடக்கு கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்கு நாடுகளுக்கு மிக அதிகப்படியான புலம்பெயர்வு நிகழ்ந்தது 1990 காலப்பகுதிகளில் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் சிவகுமார் (பள்ளித் தோழன்)
(பல் மருத்துவ கலாநிதி)

### அன்பு நண்பனுக்கு...

உன்னை வழி அனுப்பி வைக்கக் கூட எம்மால் முடியவில்லை, உணர்வுகளை அடக்கியே பழக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்த நான் ஒன்றும் விதிவிலக்கல்ல. என்று, எப்போது உன்னைச் சந்திப்பேன் என்று காத்திருந்த போது தான் உனது செய்தி வந்தது, சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளாய் என அறிந்தேன். உன்னுடன் உரையாடக் கூட முடியாத நிலையில் இருந்தபோது தொடர்பு கொண்ட சொற்ப நிமிடங்களில் கூட அதே சிரிப்புடனும், உத்வேகத்துடனும் நீ பேசிய வார்த்தைகள் என்னை ஆறுதல் படுத்தியது. நீ மீண்டும் வருவாய் என்று உன்னைக் கவனித்த தாதியில் இருந்து வைத்தியர் வரை அடுக்கடுக்காய் நீ சொன்ன பெயர்கள் எனது எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் வலுவாக்கின. நினைத்துக் கூட பார்க்க முடியாத உனது பிரிவுச் செய்தி கேட்டபோது பொய்யாகக் கூடாதா என்று இருந்தது. கடைசி உனது ஊர்வலத்தைப் பார்த்தபின் தான் மனம் சிதைந்து போனது நண்பா! உன்னை எத்தனையோ பேர் புகழ்ந்து கூறுவது ஒன்றும் புதிதல்ல. 'நீ புகழின் புகழ்'. 'செய்யும் செயலே தெய்வம்' என்று நினைப்பவன் நீ. பாடசாலையிலும் சரி, பாடசாலை முடிந்த பின்னும் சரி நீ எப்போதும் எங்கள் மகான்.

நண்பனே! இப்போது கூட எனக்கு இருக்கும் அவா, மீண்டும் உன்னைப் பார்த்து நிறைய விடயங்களைக் கலந்தாலோசிக்க வேண்டும், அத்துடன் செயற்படுத்த வேண்டும். நண்பா! நீ மீண்டும் வருவாயா? சிறு சிறு சந்தோசங்கள், சண்டைகள் எல்லாம், உன்மேல் கொண்ட அன்பை நிர்க்கதியாக்கியது, எனது மனதை வாட்டுகின்றது தோழனே!

என் மனம் சொல்லுகின்றது உன்னை அறியாமலேயே இருந்திருக்கலாமென்று தோன்றுகிறது. மனிதன் இறுதியாக இறப்பதற்கிடையில் மனதால் பலமுறை இறந்து விடுகிறான். சில நேரம் சில மாற்றங்களினால், சில நேரம் சில நல்ல உறவுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினால். உயிரியில் படிப்பிலும் சரி, கல்லூரி இல்ல விளையாட்டுக்களிலும் சரி நீயும் நானும் ஒன்று சேர்ந்தே தெரிவு செய்யப்பட்டோம். அது எப்படி நீ மட்டும் தனித்துச் செல்ல அனுமதிக்கப்பட்டாய்?

சில காலம் உன் தொடர்புகள் அற்று இருந்தபோது ஜெயபாலன் உன்னைக் கண்டதாகவும், உன்னைப்பற்றி சொன்னபோது எனக்குள் வந்த அடக்கமுடியாத மகிழ்ச்சி இப்படிக் குறுகிய காலத்தில் இல்லாமல் போகும் என்று யார் நினைத்தார்கள். மன்றாடிக் கேட்கிறேன். மீண்டு வா நண்பா! எந்த வடிவத்திலாவது சரி, உன்னிடம் நான் நிறையச் சொல்லவேண்டும் தலைவனே. விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் குழுவில் உன்னைக் கண்டபோது உள்ளம் பூரிப்படைந்தது. அந்தக் குழுவில் பராபரன், குணபாலன், கிருபாகரன், சுவேந்திரன், பரமலிங்கம், சரூபன், கமல், துரை.... என்று பட்டியல் நீண்டு கொண்டே போனது. அது எல்லோரையும் உற்சாகப்படுத்தியது. தலைமுறையின் ஒன்று கூடலுக்காக எதிர்பார்த்த வேளையில் தான் மீளமுடியாத இப் பிரிவுத் துயர் நம் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

உயரங்களை எட்டுவதற்கு உதவும் நண்பர்களைப் பெற்றிருப்பது சிறந்தது. ஆனால் நீ எம்மை விட்டு நீங்கும் போது உன்னை மீட்டெடுக்காதது எமது குற்றமோ என என் மனம் தவிக்கிறது. உன்னிடம் இருந்து கற்றுக் கொண்டது எண்ணிலடங்காது. விடாமுயற்சி, கடமை தவறாமை, உத்வேகம், புன்சிரிப்பு, சேமிப்பு, கருணை, பொறுமை என்று உனது பாதை பெரிது. நண்பனே எம் இளமைப்பருவ நிகழ்வுகள் என் மனதில் மீண்டும் மீண்டும் வந்து என்னை இன்னும் வாட்டுகின்றன....

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா.கலைவாணி, கெ.சுமதி, எம்.ராஜ்குமார், ஆர்.சுவேந்திரன்**

(நண்பர்கள், விக்ரோரியாக் கல்லூரி, கனடா)

## அன்பு நண்பனுக்கு...

பார்த்த நாள் முதல் இந்த ஆயுள் காலம் முடியும் வரையிலும் நட்பு என்பது ஒரு பிரிக்க முடியாத பிணைப்பு. அந்த வகையில் தான் ஜோதியுடனான வவுனியாவில் தொடங்கிய எனது நட்பு 45 வருடங்களாகத் தொடர்ந்தது என்றால் நம்பவே முடியவில்லை.

டேய் வாடா போடா என்ற உரிமையோடு கூப்பிடும் ஒரு நண்பன் தான் ஜோதி. உரிமையாகப் பேசுவது, ஒருவரை ஒருவர் கலாய்ப்பது, எதிர்பார்ப்புக்கள் இன்றி பழகுவது, குற்றம் குறைகள் இருந்தாலும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அன்பினால் அளவளாவி மகிழ்வது, மனதில் பட்டது எதுவாக இருந்தாலும் நேருக்கு நேர் வெளிப்படுத்துவது, உதவி என்றால் உயிரைக் கொடுக்கும் அளவிற்கு ஆதரவு அளிப்பது என அனைத்துமே கொண்டவன் தான் ஜோதி.

பெயருக்கு ஏற்றாற்போல ஜோதியாகவே வாழும் காலம் வரை விளங்கினான் எம் நண்பன். ஒரு நல்ல மனிதன், நண்பன், சமூக சேவையாளர் என பல முகங்களைக் கொண்டவனை நாம் இழந்து தவிக்கின்றோம். ஜோதி நீ என்றும் என் மனதிலும், நம் நண்பர்களின் மனதிலும் நீங்காமல் வாழ்வாய்.

சுழிபுரத்தின் சொத்தே, எங்கள் விக்டோரியாக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ தலைவனே சிவஜோதியே, நீ சிவனின் ஜோதியில் கலந்து விட்டாய் என்பதை ஏற்க முடியவில்லை நண்பனே! பள்ளிப்பருவ நாள் முதல், பாசமுடன் பழகிய நண்பனே ஆண்டுகள் ஐம்பதின் நிறைவை ஆனந்தமாய்க் கொண்டாட விரும்பி எம்முடன் இணைந்த இனியவனே, சொல்லாமல் கொள்ளாமல் சென்றதேனோ நண்பனே!

காதலித்துக் கைப்பிடித்துக் காலமெல்லாம் கண்கலங்காமல் காத்திட விரும்பிய கௌரியைக் கதிகலங்க விட்டுப் பறந்ததேனோ நண்பனே! ஊடகத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரனில் உதவியாசிரியராய் உன் நாமம் என்றும் ஒளி வீசிக் கொண்டிருக்க நீ மட்டும் இருளாய் மாறியதேனோ நண்பனே! லிற்றில் எய்ட் நிறுவனத்தில் தன்னலமில்லாப் பணி புரிந்த நண்பனே இன்று நீ எங்கே?

கல்வியில் உயர்ந்தவனே
கலைகளில் சிறந்தவனே
தமிழை உயிராய் நேசிப்பவனே
அன்பே உருவானவனே
இனிய இதயமுடையவனே
ஈகைக் குணம் கொண்டவனே
உயர்ந்த உள்ளமுடையவனே
ஊருக்குழைத்த உத்தமனே
அன்புக்கு இலக்கணமாய்
ஆற்றலின் புகலிடமாய்
பண்பிற்கு பொக்கிஷமாய்
அரவணைப்பில் இங்கிதமாய்
எம்மத்தியில் நண்பனுமாய்
திகழ்ந்த உனை
அன்னை தந்தையின்
தவம் என்பதா
சுழிபுரம் சூழ்ந்தெடுத்த
முத்தென்பதா
எம் அகல்விளக்கா
கூடி வாழ்ந்த எம்மிடையில்
ஊடுருவி உன்னை உருவி
சென்றானே காலனவன்
கலங்குகிறோம் நொறுங்கும்
கூடித்திரிந்த நாட்களை எண்ணி
மீண்டும் ஒரு பிறப்பு உண்டு என்றால்
எம்முடன் இணைவாய்
என இறைவனை வேண்டி விடை கொடுக்கும்
உன் அன்பு தோழர்கள்

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ந. சியாமினி (பள்ளித் தோழி)**

(விக்ரோரியாக் கல்லூரி பழைய மாணவி ரொறண்டோ, கனடா)

## பள்ளி நினைவுகள்

பாடசாலைக் காலம் என்பது என்னைப் போன்றே சகல மனிதரும் தமது வாழ்நாளில் மீள அனுபவிக்க முடியாத ஓர் இன்பமான அனுபவம். அறிவுடையார் நட்பு பிறைச்சந்திரன் போலும் நாள்தோறும் வளர்ந்து வளர்ந்து பெரும் பயன் தரக்கூடியது. நட்புக் கொள்வதற்கு நீண்ட காலத் தொடர்பும் பழக்கமும் அவசியமில்லை. ஒத்த அன்பு உணர்ச்சியே நட்புக்கொள்வதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி கற்ற போது இவ்வாறான உறவு தான் அமரர் சிவஜோதிக்கும் எனக்குமானதாக இருந்தது. இருவரும் ஒரே வகுப்பின் வேறு வேறு பிரிவுகளில் கல்வி கற்றோம்.

பார்க்கின்ற போது குறுகுறு கண்கள், எப்போதும் சமயப்பற்றை வெளிப்படுத்தும் வெளித்தோற்றம், ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான செயற்பாடுகள். ஆசிரியர்களிடம் பணிவு. சக மாணவர்களுடன் நட்புறவுடனான தோழமை, கல்வியில் ஆர்வம் போன்ற பண்புகளால் நிறைந்திருந்த நண்பன் சிவஜோதி எங்கள் அனைவர் மனதிலும் தனித்துவமான ஒரு இடத்தைப் பெற்றிருந்தார். பாடசாலைக்காலம் நிறைவு பெற்றதும் வாழ்வின் அடுத்த நிலைக்கு நாங்கள் சென்று விட்டோம்.

'மருவுக மாசு அற்றார் கேண்மை...' என்ற வள்ளுவனின் வாக்குக்கு ஏற்ப நல்ல உறவு நிலை கொண்ட நண்பர்கள் எல்லோரும் மீள ஒன்று கூடினோம். 2020 ஆம் ஆண்டு 'விக்ரோறியன் 1990' என்ற குடும்பத்தின் மூலம் நாங்கள் அனைவரும் மீள ஒன்றிணைந்தோம். எமது அமைப்பின் பொருளாளராகப் பதவியை வகித்து பல செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தார். நல்ல நிர்வாகியாகவும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் நல்ல மனிதராகவும் அவர் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பற்றுக் கொண்ட கொள்கையில் அசையாது நின்றார். மனிதத்தைத் தேடிய பயணத்தில் மனைவி கௌரி அவர்களுடன் இணைந்து பயணித்தார். இவ்வாண்டு நவம்பர் 18 ஆம் திகதி அவரின் பிறந்த நாள். நாங்கள் அனைவரும் வாழ்த்து தெரிவித்தோம். திடீர் சுகயீனம் அவரின் வாழ்வை மாற்றிப்போட்டது. நெஞ்சம் வெதும்பி துயருற்றோம். டிசம்பர் 30ஆம் திகதி நண்பரின் உயிர் உடலைவிட்டு நீங்கியது.

அவர் உடல் மறைந்தாலும் அவரின் செயல்கள் ஒவ்வொன்றும் நண்பனின் பெயரை ஓங்கி உச்சரிக்கும். அவரின் இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கு புதுமைப் பெண்ணாய் அவரின் மனைவி கௌரி அவர்கள் ஆயத்தமாக உள்ளார்கள். நாங்களும் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து நற்காரியங்களில் நண்பர்களாவோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயரத்தினம் குணபாலா (பள்ளித்தோழன் நண்பன்)

(சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை.)

### நெஞ்சில் நிறைந்த சமூகப்போராளியை நினைவிடை தோய்தல்...

ஒரு மனிதனின் வாழ்வியலில் பாடசாலைக்காலம் என்றும் மறக்கவியலாத நினைவுகளைக் கொண்டது. எவ்வித எதிர்பார்ப்புகளுமற்ற பள்ளிக்கூட காலத்து உறவின் வலிமை மிகக் காத்திரமானது. ஆணியடித்தது போன்று என்றும் ஆனந்தத்தை அள்ளி வழங்கக்கூடியது. ஆழப்பதிந்து ஆயுள் வரைக்கும் அழியாமல் எம்முடன் நிழலாக வருவது. இக்காலத்தின் சகபாடி நட்புகள் படிக்கும் போது மட்டுமல்ல பார்க்கும் இடமெங்கும் பரவசத்தையும் இன்பத்தையும் இரட்டிப்பாக வழங்கக்கூடிய ஆற்றல் மிக்கதாக விளங்குகின்றன.

எங்கள் வாழ்வில் மாணவப்பருவம் தொடக்கம் ஒவ்வொரு பருவங்களிலும் பலவிதமான மனித உறவுகளுடன் மகிழ்ந்து பழகி உறவாடி பின் கடந்து செல்கின்றோம். நாம் பழகும் ஒவ்வொரு உறவுகளும் பன்மைத்துவமான பண்புக்கூறுகளுடன் எங்கள் நினைவுகளில் நிலைத்து விடுகின்றனர். காலச்சக்கர சுழற்சியில் அப்பண்புக்கூறுகள் எம்முடன் இசைந்ததாகவோ அல்லது எதிர்நிலைப்பட்டதாகவேர் அமைந்துவிடலாம். எவ்வாறெனிலும் வாழ்க்கைப் பயணத்தின் சக பயணியாக நட்புடன் கடந்து செல்வதில் இணைப்புப் பாலமாக இருப்பதில் பால்ய நட்பின் செல்வாக்குக்கு நிகரேதுமில்லை எனலாம்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 1983ஆம்ஆண்டு 06ஆம் வகுப்புக்கு புகுமுக மாணவனாக இணைந்து கொள்கின்றேன். C-பிரிவில் அமர்த்தப்பட்டேன். ABCDE என பிரிவுகள் இருந்தன. சுமார் 180 மாணவர்கள் ஐந்து பிரிவுகளிலும் கல்வி கற்றார்கள். நண்பர் சிவஜோதி B பிரிவில் இணைந்திருந்தார். எப்போதுமே ஏனையவற்றில் இருந்து வேறுபடுபவை, வித்தியாசமானவை அதிகம் கவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பைப் பெறுவதும் உற்று நோக்கப்பட்டு கவனத்தை பெறுவதும் சமூக அசைவியக்கத்தின் தவிர்க்கவியலாத பண்பு ஆகும். தலைமுடியின் நிறம் செம்மஞ்சள் நிறமாயிருக்கும், அவனின் உடலமைப்பு மேல்நாட்டவரின் உடலமைப்பை ஒத்திருக்கும். துறுதுறுத்த விழிகள். காலையும், மத்தியானமும் நெற்றி நிறைய வெண்ணீறு நீக்கமற நிறைந்திருக்கும். விளையாட்டுக்களில் ஆர்வம், கல்வி, ஒழுக்கம், பணிவு, கனிவான பேச்சு போன்ற பண்புகளால் நிறைந்தவன். சைவ ஆசார குடும்பத்து பிள்ளை. இத்தகைய பன்மைத்துவ பண்புக்கூறுகள் அவனை ஏனையோரின் கவனத்தைப் பெறுவதற்கு ஏதுவான காரணிகளாக விளங்கின.

சாதாரண தர கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் 1988ஆம் ஆண்டு பிற்பகுதியில் உயர்தரத்தில் அவர் விஞ்ஞானப் பிரிவிலும் நான் கலைப்பிரிவிலும் கல்வி கற்றோம். நாங்கள் கல்வி கற்ற காலத்தில் போரும் அதன் விளைவான இடப்பெயர்வும் எமது வாழ்வியலின் ஒரு அங்கமாக மாறியது. மின்சாரம் இல்லை. குப்பி விளக்கில் கல்வி கற்க வேண்டிய கட்டாயம். இவற்றுக்கு மத்தியிலும் கல்வி சாரா செயற்பாடுகளில் வினைத்திறனுடன் ஈடுபட்டோம். விளையாட்டுப் போட்டியில் இல்லத் தலைவனாக, மாணவ முதல்வனாக நண்பனின் ஆளுமை வீரியத்துடன் வெளிப்பட்டது. தொண்ணூறுகளின் மத்தியில் பாடசாலைக் கல்வி நிறைவு பெற்றது. கூடு கலைந்த குருவிகளாக திசைக்கொருவராக நாங்கள் பறந்து சென்றோம்.

நீண்ட தசாப்த கால இடைவெளியில் 2011ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டில் சிவஜோதியை சந்தித்தேன். அதே புன்னகை, நிதானமானதும், ஆழமானதுமான உரையாடல். அரங்கியல், கலை இலக்கியவாதிகள் மற்றும் கலை இலக்கியப் போக்குகள் மாற்றமுறும் சமூக ஊடாட்டம் என மகிழ்வைத் தந்தது அந்த மீளிணைவு. கொழும்பில் வசிப்பதாகவும் பிரபல ஊடக நிறுவனமொன்றில் பணியாற்றுவதாகவும் கூறினார். தொலைபேசி மூலமான துறைசார் உரையாடல்கள் நலம் விசாரிப்புக்கள் எனத் தொடர்ந்தது எங்கள் நட்புவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014ஆம் ஆண்டு பிற்பகுதியில் தொலைபேசியில் அழைத்தார். திருகோணமலைக்கு குடும்பத்தினருடன் வருகை தருவதாகக் கூறினார். மிக்க மகிழ்வுடன் குடும்ப சமேதராய் திருகோணமலையின் இயற்கை எழில்களை ஒரு ஆர்வமுள்ள மாணவனைப் போலவும், சிலவேளை துறைசார் ஆராச்சியாளனாகவும் அவரது பார்வை விரிந்து சென்றது. செல்லும் இடமெல்லாம் குறித்த பிரதேசங்களின் வரலாறுகளையும் தற்போதைய நிலையையும் ஒப்பிட்டபடி எமது கலந்துரையாடல் நகர்ந்தது. ஒரு சமூக உணர்வுள்ள சிறந்த ஊடக ஆளுமையாளன் அவனது உரையாடலில் இருந்து வெளிப்பட்டான். சமூகத்திற்கு நற்செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருந்த நண்பனுக்கு மக்களுக்கும், மாணவர்களுக்கும் சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது. கொழும்பில் இருந்து அவனது வாழ்வு கிளிநொச்சிக்கு இடம்மாறியது.

“விக்ரோறியன்” நண்பர்களான ஜெயபாலன்,சிவகுமார் மற்றும் சமூக அக்கறையுள்ள நண்பர்களினால் வழிநடத்தப்படும் “லிற்றில் எய்ட்” மொழிக்கல்வி மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான தலைமைப் பொறுப்பை இணையர் கௌரியின் பங்களிப்புடன் திடத்துடன் ஏற்றார். நண்பனின் வருகையானது அமைப்புக்கு மீளெழுச்சியை வழங்கியது. கற்றறிந்த அரங்கியல் அறிவைப் பயன்படுத்தி வினைத்திறனுடன் தானும் இயங்கியதுடன் பிறரையும் இயக்குவித்தார். கலந்துரையாடல், கருத்துப் பரிமாற்றம் என்பவற்றின் மூலம் சக பணியாளர்கள் மற்றும் பெற்றோரையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்தினார். நூற்கல்வியோடு கலை கலாசார பண்பாட்டிலும் மாணவர்களை வழிப்படுத்தினார். பரிசில்கள், கௌரவங்களை வழங்கி சகலரையும் ஒன்றிணைத்து அழகுபார்த்தார்.

2020ஆம் ஆண்டு மீளிணைந்த விக்ரோறியன்-1990 குடும்பத்தின் பொருளாளராக பதவியை அலங்கரித்தார். சமுதாய மலர்ச்சிக்கான மாற்றத்திற்காக துடிப்புடன் செயற்பட்டார். “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் என் உள்ளம் வாடியது” என்ற வள்ளலாரின் உணர்வுப் பகிர்வைப்போல ஏற்றத்தாழ்வு ஏதும் பாராமல் ஏனையோரின் துன்பங்களைக் கண்டு துவண்டுபோவார். சொல்லும் செயலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றித்துப் பயணிப்பது அபூர்வம். ஆனால் நண்பர் தன் வார்த்தையை, சிந்தனையை, சொல்லை செயலாக்கினார். அதன் நம்பிக்கையில் வாழ்ந்தும் காட்டினார். எதிர் கருத்துருவாக்க சிந்தனையாளர்களை ஒன்றிணைப்பதில் நண்பர் ஒரு மையப் புள்ளியாகத் திகழ்ந்தார்.

காலனின் கணக்கு தவறியதோ தெரியவில்லை. நண்பனின் உயிர் உடலை விட்டு பிரிந்தது. துவண்டோம், துயருற்றோம். அவர் காட்டிய வழி, அவர் பயணித்த வழியில் நாமும் நம்பிக்கை ஒளியின் பிரவாகத்தில் நடப்பதற்கு உறுதி பூணுவோம். விடை தர மனமில்லை ஆனாலும் தந்தோம்.

சென்று வா நண்பனே சென்று வா.

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

விக்ரோறியன்-1990 நண்பர்கள் சார்பாக என்றும் உன் நினைவுகளுடன்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆரம்பம்

இப்பொழுது நாங்கள் மாணவர்கள் மட்டுமல்ல. வாழ்க்கையின், சமூகத்தின் சுமைகளை சுமக்க வேண்டியவர்கள் ஆனோம். முடிவு தெரியாத யுத்தத்தின் அன்றைய அரசியலின் திறந்தவெளிக் கைதிகள் நாம். அடுத்த கட்டம் என்ன? எதிர்காலம் இருட்டாகிக் கிடந்தது. திசைக்கு ஒருவராகப் பிரிந்தோம். சிவகுமார் ஒருவனைத் தவிர எல்லோருமே விஞ்ஞான பாடத்தைக் கைவிட்டனர். யாழ்ப்பாணத்து வேலியைத் தாண்டி தென்னிலங்கைக்கும் அதற்கு அப்பால் மேற்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தோம். புதிய பிரதேசங்கள், புதிய நட்புகள், புதிய உறவுகள், புதிய ஆரம்பம்.

அதேசமயம், யுத்தம் தொடர்ந்தது. யாழ் இடப்பெயர்வும் பின் யாழ்ப்பாணம் அரச படைகளின் கைகளில் வீழ்ந்ததும் வரலாறு. மரணங்கள், அழிவுகள் அதிகரித்தது. ஆனால் பண்பியல் மாற்றங்கள் எதுவும் குறிப்பாக இடம்பெறவில்லை. வளைகுடாவில் அமெரிக்கா தலைமையிலான நேசநாடுகள் தாக்குதல் நடத்தின. அணு ஆயுத யுத்தமொன்றுக்கான சூழல் தவிர்க்கப்பட்டு வந்தது.

இந்தியப் படைகளை வெளியேற்றுவதில் ஜனாதிபதி பிரேமதாஸ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கூட்டுச் சேர்ந்தார். பிரபாகரனை சகோதரர் என்றார். இந்தியப் படைகள் இலங்கை மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டனர். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்தியாவும் தனது வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அயல்நாடுகளில் நேரடியாக தலையீடு செய்வதை இந்தியா தவிர்க்க ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸாவும் படுகொலை செய்யப்பட்டார். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியானார். தீர்வுப்பொதி என்று பேச்சுக்கள் நடந்து ஒரு முன்னேற்றமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. யாழப்பாணத்தைக் காட்டிலும் தெற்கில் தமிழர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு தமிழர்களே வடக்குக் கிழக்கில் வாழ்கின்றனர். மற்றைய மூன்றில் ஒரு பங்கு தமிழர்கள் தென்னிலங்கையில் வாழ்கின்றனர். இறுதி மூன்றில் ஒரு பிரிவினர் மேற்கு நாடுகளில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணத்தின் சனத்தொகை 50 சதவீதத்திலும் குறைவாக வீழ்ச்சி அடைந்தது. யாழ்ப்பாணம் தவிர்ந்த வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை 300,000 வரை இருக்கும். அதேயளவு சனத்தொகைத் தமிழர்கள் ரொறொன்ரோவின் ஸ்காபரோ பகுதியில் உள்ள பிரதான சாலையின் இரண்டு சந்திகளுக்கு இடையே வாழ்கின்றனர்.

சிவஜோதியும் பல கஷ்டங்களைத் தாண்டி தென்னிலங்கை வந்தான். கல்விக்கும் அவனது பன்முக ஆற்றலுக்கும் யாழ்ப்பாணத்து வேலிகளுக்கு அப்பால் ஒரு இடம் இருந்ததை அவன் வெகு சீக்கிரத்தில் கண்டுகொண்டான். ‘உன் நண்பனைப் பற்றிச் சொல். உன்னைப்பற்றிச் சொல்கிறேன்’ என்ற பிரெஞ்ச் பழமொழியைப் போல் தன்னையொத்த பலரை சிவஜோதி இனம் கண்டான். அவ்வாறான பலர் சிவஜோதியை இனம் கண்டனர்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாமல் மண்ணெண்ணெய் விளக்கில் படித்த எமக்கு, கணணி பற்றிய அறிமுகம் ஏற்பட்டது இப்போது தான். திறந்த பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் பொறியியல் கற்கையில் சிவஜோதி தனது பட்டப்படிப்பைத் தொடங்கினான். சிறுவயதிலேயே விளையாட்டுப் பொருட்களை பிரித்து மேயும் சிவஜோதி தன்னைத் தானே அடையாளம் கண்டுகொள்ள ஆரம்பித்தான். அத்துடன் நின்றுவிடவில்லை. அங்கு திறந்த பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கம் அமைத்து கலை, இலக்கிய செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டான். அவனோடு கூடப்படித்தவர்களில் கலாவும் ஒருவர். உறவுக்காரி ஒருத்தி நட்பாகவும் இருப்பது அரிது. ஆனால் சிவஜோதியும் கலாவும் நட்பாகவும் உறவாகவும் உறவாடினர். தேசிய கலை இலக்கியப் பேரவையின் சோ.தேவராஜாவுடன் நட்பு ஏற்பட்டது. அந்நட்பு அவரோடு மட்டுமல்ல அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருடனும் சிவஜோதி மிக நெருக்கமானான். ஏற்கெனவே தாய்வழி உறவினூடாக சிவஜோதி பெற்றிருந்த சமூக உணர்வுகளை சோ.தேவராஜா இனம்கண்டு சிவஜோதியை மேலும் செதுக்கினார். இளம் பிராயத்திலேயே பொதுவுடமைக் கருத்துக்களைக் கொண்டிருந்த சிவஜோதி அக்கருத்துக்களின்பால் மிகவும் ஈர்க்கப்பட்டான். அவனுடைய முற்போக்குத்தன்மை அவனை அடுத்த, அடுத்த தளங்களுக்கு இட்டுச்சென்றது. கருத்துக்களையும் மனிதர்களையும் பிரித்துப் பார்க்க சிவஜோதியால் முடிந்ததால் முற்றிலும் மாறுபட்ட கருத்தாளர்களுடனும் சிவஜோதியால் நல்லுறவைப் பேண முடிந்தது.

தமிழ் குறும் தேசியவாத அலைக்குள்ளும் சிக்காமல், மத அடிப்படை வாதத்திற்குள்ளும் தன்னை குறுக்கிவிடாமல் சிவஜோதி தனிவழியமைத்து தன் பயணத்தைத் தொடர்ந்தான். சாதி, மத, இன பேதங்கள் ஒரு போதும் அவனது எல்லைகளாக இருக்கவில்லை. மனிதத்துவத்தின்பால் அவன் கொண்ட காதல் கடைசிவரை தொடர்ந்தது.

தனது கருத்துக்களைக் கொண்டு செல்வதில் தனக்கு கிடைத்த வாய்ப்புகளை சிவஜோதி தவறவிடவில்லை. ஊடகங்கள், மேடைப் பேச்சுக்கள் இவற்றைக் காட்டிலும் நாடகம் என்ற கலை வடிவத்தை சிவஜோதி மிகவும் நேசித்தான். இது இப்போதும் என்னை நெருடுகின்ற விடயம். லிற்றில் எய்ட் இல் நாடகப் பயிற்சிகளை ஊக்குவிக்க சிவஜோதிக்கு விருப்பம் இருந்தது. ஓரிரு தடவைகள் என்னோடு பேசுகின்ற போது இது சம்பந்தமாகக் கதைத்து இருந்தான். அப்போது லிற்றில் எய்ட் இருந்த நெருக்கடியில் சிவஜோதியை அதை நோக்கி உற்சாகப்படுத்த முடியவில்லை. அடுத்த கட்டமாக அதனைச் செய்யலாம் என்று சொல்லி தட்டிக்கழித்துவிட்டேன் என்று இப்போது வருந்துகிறேன். இந்தக் காலகட்டம் தான் சிவஜோதியை இலங்கைத் தமிழ் உறவுகளுக்கு எடுத்துக்காட்டிய காலகட்டம். இப்பொழுதெல்லாம் சிவஜோதி கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் குறிப்பாக ஈடுபாடு காட்டினான். அது தமிழில் இருந்த ஈடுபாடா? தமிழ்ச் சங்கத்தில் இருந்தவளில் இருந்த ஈடுபாடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள்

(Faculty of Engineering Technology (Batch 92 - 95)
The Open University of Sri Lanka, Nawala, Colombo.)

### நீங்காத நினைவுகளுடன் ...

அன்பு நண்பா !
ஆருயிர் தோழனே !
எங்கள் சிவஜோதியே !

காலத்தின் கட்டாயத்தில்
விதியின் விளையாட்டில்
காலனவன் அழைத்திட
நோயை காரணமாக்கி
எம்மை விட்டு சென்றாயோ

பெற்றோருக்கு அருந்தவப் புதல்வனாய்
அண்ணனுக்கு அருமைத் தம்பியாய்
எங்கள் தங்கை கௌரிக்கு
அன்பும் பாசமும் காதலும் நிறைந்த கணவராய்
உறவுகளுக்கு உதாரணமாய் வாழ்ந்து காட்டினாய்
அது மட்டுமா.....

உற்றவர்கள் சுற்றத்தார் என்று
அனைவரையும் அன்பினால் அணைத்தாய்
நட்பிற்கும் இலக்கணம் தந்து
நம்மை வியக்க வைத்தாய்
பணிவும் பண்பும் நிறைந்த
உன் நற் குணத்தை
பாராட்டி நிற்கின்றோம் ,

பல்கலைக்கழகத்தில் பயிலும்
நாட்களில் உனது சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு பொட்டலத்தை (பார்சலை)
நண்பர்கள் நாம் ஒன்று கூடி
உண்டு மகிழ்ந்திருந்தோமே
உனது பொரியலுக்காய்
சண்டையிட்டோமே
மாதாந்த கணிப்பீட்டு
வினாத்தாளிற்கு
நீ எழுதிய விடைத்தாள்களை எடுத்து
ஒளித்து வைத்து உன்னை
கோபப்படுத்திப் பார்த்தோமே
நண்பர்கள் கூடி நாம்
ஒருவரை ஒருவர் கலாய்த்து
கூடி மகிழ்ந்திருந்தோமே
இன்னும் எத்தனை எத்தனை
மகிழ்வான தருணங்கள்
இவை யாவும்
உன் நினைவுகளை மீட்க
ஒவ்வொன்றாய் வருகிறதே
பகிர்ந்து மகிழ்ந்திட இன்று
நீ எம்மோடு இல்லையே
என்று உணருகையில்
எம் இதயம் கனக்கின்றதே நண்பா !

கலையாத உன் சிரிப்பு ( சிரித்த முகம் )
கண் முன்னே நிற்கிறதே
சிந்தையும் எண்ணமும்
உன்னைச் சுற்றி சுற்றி வருகிறதே
விழித்துப் பார்த்தால்
நின் விம்பம் தெரிகிறதே

நட்பு கொண்ட நாள் முதல்
ஆறுதல் தந்து தோள் கொடுத்தாய்
அழகிய தருணங்கள் தந்து மகிழ்வித்தாய்
இன்புற்று மகிழ்ந்திருந்தோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு நீயே காரணம்
இன்று நின் பிரிவால்
நிரந்தர சோகத்தையும் தந்தாய்
இதற்கும் நீயே காரணம்

நினது கடமை உணர்ச்சியையும்
மக்களுக்காய் செய்த
பொதுப் பணியையும்
" நாராய் நாராய் " நாடக குழுவினரை
இந்தியாவின் தமிழ் நாட்டிலும் மேடையேற்றி
அழகு பார்த்த நினது சிறப்பையும்
கலை இலக்கியத்தில்
நினது பங்களிப்பையும் பாராட்டி
நினது பிறந்த நாள் பொன் விழாவில்
வாழ்த்துப்பா படிக்க
நண்பர்கள் நாம் காத்திருந்தோமே
இவற்றிற்கு இடம் தராமல்
இறையடி தேடி சென்று விட்டாயே !

நட்பின் சுடரொளியே
எமது நண்பனே சிவஜோதியே
நின் பிரிவால் கண்கள் குளமாகி
கனத்த இதயத்துடன்
மீளாத் துயரில் கல்லாய் நிற்கின்றோம்

என்றும் உனது நட்பு
எம்மோடு நிழலாய் தொடர
உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.
நின் பிரிவுத் துயரால் விழி நீராய் நிற்கும் நண்பர்கள் ,

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலா ஆனந்தகுமார் (உறவுக்காரி, உற்ற தோழி)**

(Faculty of Engineering Technology (Batch 92 - 95) The Open University of Sri Lanka, Nawala, Colombo.)

## நட்பின் சில துளிகள்...

நண்பா! நண்பா!
ஜோதியே! சிவஜோதியே!

உனது திடீர் சுகவீனம்
என் நெஞ்சை இறுக்கியது
சற்று முன்னேற்றமாய்
உன் குரல் கேட்டேன்
"சாப்பிட்டேன் கலா, இப்போ பரவாயில்லை" என்று.
இறுக்கம் சிறிதாய் இளகியது
இறைவன் மீது நம்பிக்கை கூடியது
தொடர்ந்து வேண்டினேன் உனக்காக
இல்லை் எனது சுய நலத்திற்காக
எனது ஆருயிர் நண்பன்
என்றும் எனக்கு வேண்டும் என்பதற்காக.

திடீர் அதிர்ச்சி செய்தி கேட்டேன்
நீ இறையடி சேர்ந்து விட்டாய் என்று.
செய்வதறியாமல் கதறியழுதேன்
யாருடைய ஆறுதலும்
என்னைத் தேற்ற முடியவில்லை
இன்றும் இன்னும் வலிக்கிறது நண்பா
மீள முடியவில்லை நண்பா
எல்லாம் இறைவன் திருவிளையாடல் தானோ நண்பா!

நண்பனாய் மட்டுமன்றி
எனக்கும் அக்காமாருக்கும்
அன்புச் சகோதரனாய்
எங்கள் வீட்டு இன்ப துன்ப நிகழ்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது பங்களிப்புகளை
தவறாமல் முன்னின்று செய்தாய்
எங்கள் தந்தையின் இறுதிச்சடங்கில்
எங்கள் குடும்பத்தின் ஆண் மகனாய்
உரிமையுடன் உதவி நின்றாய்
இத்தனையும் உனது உயர்ந்த குணத்தையும்
பண்பையும் உணர்த்தி நிற்கிறது.

சொந்தங்களுக்கு பாலமாய் நின்று
உறவுகளை புதுப்பித்தாய்
எல்லோரையும் அன்பினால்
அரவணைத்து அழகு பார்த்தாய்,
ஆனால் இன்று
உனது சொந்த உறவுகளையும்
நீ தேடிய உறவுகளையும்
நிரந்தரமாய் விட்டு
இறைவன் அழைப்பினால்
இறையடி சேர்ந்து விட்டாய் .
உறவின் வழியில் உனக்குத் தங்கையாய்
சக மாணவனாய் கற்கும் போது
உருவான தூய்மையான நட்பினால்
எனக்கு நீ நண்பனாய் கிடைத்தாய் நண்பா!
நீ என்னுடன் பயின்ற நாட்களை மீட்கவா
பேசிய கதைகளை மீட்கவா
பகிர்ந்த கருத்துகளை மீட்கவா
நீயும் கௌரியும் தந்த விருந்தோம்பலை மீட்கவா
நண்பனாய் எனக்கு தந்த பரிசுப் பொருட்களை மீட்கவா
எவை என்று நான் சொல்ல ...
கடைசி ஞாபகமாய்
நீ தந்த பரிசுப் பொருளை மீட்டுப் பார்க்கிறேன்
எனது பிறந்த நாளிற்கு (2018 ல்)
நீ பரிசாக தந்த புதிய ஆடை (சல்வார்)
இன்றும் அந்த நாளை மீட்டுப் பார்க்க வைக்கிறது நண்பனே ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பா!
உனக்காக எழுதிட
உனது சிறப்பினை எழுதிட
எத்தனை எத்தனை சிறப்புகள் உன்னிடம்
எதை என்று நான் எழுத
அத்தனையும் எழுத முடியவில்லையே…
நெஞ்சம் கனக்கின்றதே நண்பனே

உனது பாராட்டு மலருக்கு என்றால்
மகிழ்ந்திருப்பேன் நண்பனே
ஆனால் நினைவு மலருக்கு எழுத வைத்து விட்டாயே …
நெஞ்சம் வலிக்கிறதே நண்பனே.
உன் நட்பின் நினைவுகள்
என்றும் உதிரா பூக்களாய்
என் நெஞ்சத்தில் நிரந்தரமாய்ப் பூத்திருக்கும்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ. ப. அல்பிறேட் (திறந்த பல்கலைக்கழகம் நண்பன்)**

(பதிவாளர், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, கிளிநொச்சி)

## நினைவின் மடல்

நான் திறந்த பல்கலைக்கழகத்தில் 91-92 காலப்பகுதியில் தொழில்நுட்ப மாணவனாக இணைந்த போது எமது சகமாணவராக இணைந்து கொண்டவர்களில் அமரர் திருவாளர் ஜோதியும் ஒருவர்.

அந்த நேரத்தில் அநேகமானவர்கள் வடக்குக் கிழக்கில் இருந்துதான் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கு வருவார்கள். திருவாளர் ஜோதி அவர்கள் கொழும்பில் வசித்து வந்ததன் காரணமாக அனைத்துத் தமிழ் மாணவர்களுக்கும் கல்வி நடவடிக்கைகளைத் தொடர உதவி புரிபவராகக் காணப்பட்டார். ஆய்வக நடைமுறை (Lab Practical), மதிப்பீடு (Assessment) என்பன திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளில் முக்கிய பகுதிகள் ஆகும். ஆய்வக நடைமுறை (Lab Practical), மதிப்பீடு (Assessment) என்பவற்றைதான் முதலில் முடித்துவிட்டு நாங்கள் அவற்றை செய்ய செல்கின்றபோது எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை எங்களுக்கு அவர்தான் கற்றுத் தருவார்.

திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைச் செயற்பாடுகளில் பாடங்களுக்கான ஒப்படை என்பது பிரதான பங்கை வகிக்கின்றது. சிலவேளைகளில் சிலபாடங்களின் ஒப்படைகளை நாம் பூர்த்தி செய்வது கடினமாக இருக்கும். இவ்வேளைகளில் ஜோதி அவர்கள் சிங்கள மாணவர்களுடன் கலந்தாலோசித்து பாடவிதானங்களுக்கான ஒப்படைகளைத் தாம் பூர்த்தி செய்துவிட்டு எங்களிடம் அவற்றை கொண்டு வந்து தந்து நாமும் அவற்றைச் செய்வதற்கு உதவுவார். தமிழ் மாணவர்கள் மட்டுமல்ல சிங்கள மாணவர்களுடனும் சிறந்த நட்பை பேணி வந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதி அவர்கள் சிங்களத்தில் சரளமாக பேசக்கூடியவராக இருந்த காரணத்தால் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களுடன் பழகுவதற்கு, நட்புக் கொள்வதற்கு ஒரு பாலமாக தொழிற்பட்டார். இதன் மூலமாக சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களை அந்நியராகப் பார்க்கின்ற நிலைமைகள் மாறி நண்பர்களாகப் பழகுகின்ற நிலைமைகளை உருவாக்கியிருந்தார். அவருடைய தோற்றமும் சாயலும் சிங்கள மாணவ மாணவியர் அவருடன் கூடுதலாக நட்புக் கொள்வதற்கு உதவியாக அமைந்திருந்தது.

திறந்த பல்கலைக்கழகத்தில் மூன்றுமொழிகளிலும் சரளமாக பேசக்கூடியவராக இவர் காணப்பட்டார். அத்துடன் சகோதர இன நண்பர்களால் விரும்பப்பட்ட ஒரு நபராக இவர் இருந்தார். அத்துடன் இவர் தனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்கு ஆர்வங் கூடியவராகக் காணப்பட்டார். தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மற்ற மாணவர்களுடன் தனது அறிவை பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

சக மாணவர்களால் மட்டுமல்ல கல்விசார் கல்விசாரா அலுவலகர்களினாலும் மிகவும் விரும்பப்பட்டவராக காணப்பட்டார். சைவசமயத்தில் அதீதபற்றுடையவரான இவர் சகல தமிழ்க் கலர்சார நிகழ்வுகளை திறந்த பல்கலைக்கழகத்தில் முன்னின்று சிறப்பாக நடாத்தினார். மிகவும் சாதுவாக சகலருடனும் பண்புடன் பழகுகின்ற பழக்கமுடையவர். எந்தக் காரணத்தினாலும் மற்றவரை புண்படுத்தாது பொதுநல நோக்குடைய ஒரு சிறந்த மனிதன். சுயநலம் பாராது காலநேரமின்றி சக மாணவ மாணவியர்களுக்கு உதவி செய்வதில் மிகவும் ஆர்வமுடையவர்.

சிலவேளைகளில் சிங்களமாணவர்களிடம் தமிழ்மாணவர்கள் தொடர்பாக இருந்த ஐயப்பாட்டை நிவர்த்தி செய்வதில் இவரது பங்கு போற்றுதற்குரியது. இவர் திறந்த பல்கலைக்கழகத்தில் தனது கூடுதலான நேரத்தை தனது சகநண்பர்களுக்கு உதவி செய்வதில் செலவழித்து வந்தார்.

தோள்கள் சாய்ந்து தோழமையாய் இருந்த தோழனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எங்கள் தோளில் உன்னைச் சுமக்கின்றோம்
நீ அமைதியாய் உறங்கும்போது விளையாட்டாய்
உன்னை எழுப்பிடுவோம்
இன்று நீ விளையாட்டாய் விளையாடி
அமைதியாய் உறங்குகிறாய் ...!
உன்னை எப்படி எழுப்புவது எனத் தெரியவில்லை ...
நம் நட்புக்கெனப் பூக்கள் தூவ வாழலாம் என்று
தானே எண்ணினோம் ....
உன்னைமட்டும் பூ வாகத் தூவ விட்டாயே ...!
நாம் அழுதபோதெல்லாம் கண்ணீர்துடைக்க
உன்கைகள் இருக்குமே ...!
இன்று நாம் அழுகின்றோம் , ஏன் கண்ணீர்
துடைக்கவரமறுக்கின்றாய் ...!
நடந்தது நாடகம் போல் எங்களுடன்,
வாழ்ந்து சென்றாய் ...!
நினைவுகளிடம் உறவாடி எங்களையும் அழைத்துச்
சென்றாயே ...!
எங்கள் நண்பனே...!

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்லத்துரை ஸ்ரீகணேஷா (ஆருயிர் நண்பன்)**
(Faculty of Engineering Technology, Open University of Sri Lanka)

## சிவஜோதி ஒரு மகத்தான மனிதர். என் உற்ற நண்பன்.

ஜோதியிடம் இல்லாத நற்பண்புகள் என்று ஒன்றுமில்லை நேர்மை, தன்னலமின்மை, பொறுமை, இரக்க குணம், நட்பு, மற்றவர்களை மதித்தல், மனம் நோகாமல் பழகுதல். ஏற்றத்தாழ்வு பார்க்காமை, எடுத்த காரியத்தைக் கச்சிதமாக செய்து முடித்தல் என்று அடுக்கி கொண்டே போகலாம்.

சிவஜோதியும் நானும் 1992 ஐப்பசி மாதத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் அறிமுகமானோம். முதல் தடவை பார்த்த போதே, அவரின் சாதுவான முகமும், மென்மையான பேச்சும் என்னைக் கவர்ந்தன. எங்கள் நட்பு ஆழமாக வெகுநேரம் எடுக்கவில்லை. அன்றிலிருந்து எங்கு போனாலும், என்ன செய்தாலும் இருவரும் ஒன்றாகவே இருப்போம். கோயிலுக்கு போனோம், திரைப்படங்கள் பார்த்தோம், விழாக்களுக்குச் சென்றோம். பல்கலைக்கழக செயல்முறைகளை ஒன்றாகச் செய்வோம். பல்கலைக்கழக நண்பர்கள் சிலவேளைகளில் விளையாட்டாக கிண்டல் கேலி செய்தால் ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருந்து மனம் நோகாமல் பார்த்துக்கொண்டோம்.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

எமது நட்பு சிரித்து மகிழ மட்டும் என்று இல்லாமல், சிலவேளைகளில் என்னிடம் ஏதாவது தவறுகள் இருக்கக் கண்டபோது மெதுவாக கண்டித்துப் புத்தி சொல்வார்.

ஜோதி எல்லோருக்குமே நண்பனாய் இருந்தார். சிங்கள மொழி நன்றாகப் பேசினார். இன, மொழி, சமய மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் என்று ஒன்றும் ஜோதிக்கு இருந்ததில்லை. ஒரு மனிதனாக மட்டும் எல்லோருடனும் பழகினார். அவரின் வெளிப்படையான பேச்சினால், எல்லோருடனும் நண்பனாகி இலகுவாக நியாயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைப்பார். நாட்டில் 90களில் நடந்த போர்ச் சூழலால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களை சிங்கள மொழி பேசும் நண்பர்களுக்கு நிதானத்துடனும் ஆணித்தரமாகவும் விளக்கி கூறுவார். பல சிங்கள மொழி பேசும் நண்பர்கள் ஜோதியின் நியாயமான பேச்சைக்கேட்டு தங்கள் அரசியல்வாதிகள் செய்யும் தவறுகளை உணர்ந்தவர்களாக மன்னிப்பு கேட்டதை நான் பார்த்தேன்.

பெண்ணியம் பற்றிய விழிப்பு ஜோதியிடம் நிறையவே இருந்தது. பெண்கள், ஆண்கள் என்று வேறுபாடு பயனற்றது என்று அடிக்கடி கூறுவார். எல்லோரும் சமனானவர்கள் என்பதில் எப்போதும் ஆணித்தரமாக இருந்தார். அதைத்தான் செயலிலும் காட்டினார்.

காலம், நாட்டுச் சூழ்நிலை காரணமாக நான் இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படடபோது, இருவர் கண்களும் கலங்கின. நான் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவுபடுத்துவார். விமான நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

நாங்கள் தூர இருந்த போதும் எமது நட்பு தொடர்ந்தது. நான் வெளிநாட்டில் வாழ்ந்தபோது, எனக்கு ஜோதி ஒரு பெரிய தூண். என்ன தேவையென்றாலும், அழைப்பது ஜோதியைத்தான். எனது அம்மாவுக்கு உதவி தேவைப்படும் போதெல்லாம், மனமுவந்து செய்வார். நான் நாட்டுக்கு வந்த வேளைகளில், விமான நிலையம் வந்து அழைத்துச்செல்வார். நான் இன்று உயிருடன் இருப்பதற்கு ஒரு காரணம் ஜோதி என்றே கூறலாம். சில நாட்கள் ஜோதி வீட்டில் தங்கி இருக்கிறேன். எனது திருமணத்தை முன்னின்று நடத்தியதில் ஜோதியின் பங்கு மிகப்பெரியது. பின்பு எனது மனைவி இலங்கையை விட்டு குடி பெயர்ந்தபோது, தேவையான எல்லா உதவிகளும் செய்து கொடுத்தார்.

ஜோதியும் துணைவியாரும் கிளிநொச்சிக்கு குடி பெயர்ந்த பிற்பாடு, இரண்டு தடவைகள் அவர்களின் வீடுக்குச் சென்றிருக்கிறேன். தம்மை முழுமையாக லிற்றில் எய்ட் என்ற தொண்டு நிறுவனத்துக்கு அர்ப்பணித்து செயற்பட்டு வந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேன். அந்த நிறுவனைத்தை மென்மேலும் வளர்க்க வேண்டும் என்றும், அதன்மூலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்றவற்றைச் செய்து அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றவேண்டும் என்றும் எப்போதும் சொல்லுவார். என்னை அந்த நிலையத்துக்கு கூட்டிச் சென்று காட்டினார். பல தரப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செய்துகொண்டிருந்தார். எதிர்காலத்தில், மேலும் பல செயற்பாடுகளைச் செய்ய திட்டமிட்டுள்ளதாக விளக்கினார். என் அறிவுரைகளையும் வேண்டி நின்றார்.

உண்மையில், அவர் செய்து கொண்டிருந்த வேலை மிகப்பெரியது. எதிர்கால நோக்கங்கள் ஆழமானவையாகவும் பாரியவையாகவும் எனக்குத் தோன்றின. அவரின் அர்ப்பணிப்பை வியந்து மெச்சியதோடு, அவருக்கு என்னால் இயன்ற உதவிகளை வழங்கவும் உறுதியளித்தேன். அதேவேளை, வேறும் பலரையும் சேர்த்து ஆளணியை பெருக்கவும் அறிவுரை கூறினேன். என் நண்பனை, தனதும், தன் குடும்பத்தினரின் உடல்நிலையிலும் போதிய கவனம் செலுத்தும்படியும் நினைவு படுத்திக்கொண்டேயிருந்தேன்.

எதேச்சையாக ஒரு முறை தொடர்பை ஏற்படுத்தியபோது, நண்பன் ஜோதி சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாக அறிந்தபோது மிகுந்த வேதனையடைந்தேன். என் நண்பன் விரைவாக சுகமடைந்து வீடு திரும்பிவிட வேண்டும் என்று இங்கு எல்லோரும் இறைவனை வேண்டிக்கொண்டிருந்தோம்.

அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும், ஜோதியின் துணைவியாரிடம் நிலைமைகளை அறிந்து எனக்குத் தெரிந்த வைத்தியர்கள் மூலமாக அக்கறை எடுக்கும்படி வேண்டிக்கொண்டிருந்தேன். எப்படியாவது இந்த உன்னத மனிதனைக் காப்பாற்றி விடவேண்டும் என்று துடித்தேன். இது போல அவரின் நண்பர்கள், உறவினர்கள் என பலரும் எம் ஜோதி திரும்பி சுகதேகத்துடன் இன்னும் பலருக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்று கடின முயற்சி செய்தனர். ஏதோ காரணத்துக்காக இறைவன் ஜோதியை எம்மிடமிருந்து எடுத்துச் சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு விரைவாக நான் ஜோதியைப் பிரிவேனென்று எதிர்பார்க்கவில்லை. தாங்க முடியவில்லை. நிறைய கனவுகள் கண்டேன். ஜோதி வந்த பின் அவரோடு பேசவென்று நிறைய வைத்திருந்தேன். நண்பா, இவையெல்லாம் என் மனதில் என்றும் இருக்கும், அடுத்த முறை உன்னைப் பார்க்கும் வரை. நாம் மீண்டும் பேசுவோம். அதுவரை, அமைதியாக உறங்கு இறைவன் காலடியில்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரமுத்து பவன் (திறந்த பல்கலைக்கழக நண்பர்)

(Faculty of Engineering Technology, Open University of Sri Lanka. IT Engineer, UK)

### என்றும் ஒளிரும் ஜோதி

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து, திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்துக்கு 1992ஆம் ஆண்டு புதிய மாணவர்களாக நுழைந்தோம். தெரியாத தேசம், புரியாத மொழி, அறியாத நண்பர்கள். இவர்களில் ஒரு நண்பன் மட்டும் சற்று வித்தியாசமாக தெரிந்தான். ஆம். உருவத்தில், தோற்றத்தில், அன்பில், நட்பில், சிநேகபூர்வத்தில் என்று எல்லாவற்றிலும் அவன் வித்தியாசம்தான். என்றும் முகத்தில் தவழும் ஒரு புன்சிரிப்பு, அதிர்ந்து பேசாத, அதேவேளை அதிகம் அலட்டிக்கொள்ளாது பொறுமையாக எவற்றையும் கிரகிக்கும் ஆற்றல் அவனது தனித்தன்மை. ஆம் அவன்தான் ஜோதி. நாம் அவனது ஆளுமையை அன்றே அடையாளம் கண்டுகொண்டோம்.

காலையில் நாம் திறந்த பல்கலைக்கழகம் வரும்போது ஒவ்வொரு நாளும் அவன் பல்வேறு பீடங்களைச் சேர்ந்த புதுப்புது மாணவர்கள் பலரிடமும் பேசிக்கொண்டிருப்பான். நாமும் விஷயம் புரியாமல் அவனை, மக்கள் நலத்துறை அமைச்சர், மகளிர் விவகார அமைச்சர் என கேலி பேசியபோதும் ஒரு புன்சிரிப்புடன் தனது கருமமே கண்ணாக இருப்பான். பிறகுதான் புரிந்தது மும்மொழிகளிலும் தான் கொண்டிருந்த ஆற்றலால் தன்னை நாடிவரும் பல புதிய மாணவர்களுக்கு மொழிபெயர்ப்பாளனாக, ஆலோசனை கூறுபவனாக, நல்லாசானாக பல உதவிகள் புரிந்திருக்கிறான் என்று. ஆயினும் அவன் அவற்றை வெளியில் சொல்லி பெருமை பேசுபவன் அல்ல.

கல்வியோடு மட்டும் நிற்காது எமது பண்பாட்டு விழுமியங்களையும் வளப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கோடு தமிழ் மேல் காதல் கொண்ட நாம் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்து பல்கலைக்கழகத்தில் நாடக பயிற்சிப் பட்டறைகளை மேற்கொண்டோம். இவற்றில் எல்லாம் ஜோதியும் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டான். பின்னாளில் எமது ஆற்றலை மேலும் மேம்படுத்த, அப்போது தலைநகரில் பிரபலமாக இருந்த 'அரங்காடிகள்' எனும் நாடகக் குழுவில் இணைந்து பல மேடைகளை நாம் கண்டபோது அவை அனைத்திலும் ஜோதி தனது காத்திரமான பங்களிப்பினை வழங்கினான்.

காலவோட்டத்தில் நாட்டில் அதிகரித்த பிரச்சினைகளால் நண்பர்கள் அனைவரும். பல திக்குகளாகப் பிரிந்தனர். பலர் வெளிநாடுகளுக்குச் சென்றனர். தொடர்புகள் குறைந்தன. ஆயினும் ஜோதியுடனான எமது தொடர்புகள் தடையுறாது நீடித்தன.

நான் 2003-ம் ஆண்டு UKஇலிருந்து எனது திருமணத்துக்காக இலங்கை வந்தபோது எனது திருமணத்துக்குக் குடும்பமாக யாழ்ப்பாணம் வந்து வாழ்த்திச் சென்றான். எனது திருமணம் மட்டுமல்ல அனேகமாக நண்பர்கள் அனைவரது திருமணத்திலும் அவன் பங்குபற்றினான். பின்னர் நண்பர்கள் எல்லோரும் மலையகச் சுற்றுலா சென்றபோது அவனும் எம்மோடு இணைந்து எமது நாட்களை இனிமையாக்கினான்.

பிற்காலத்தில் ஜோதி கணினி தொழில்நுட்பவியலாளனாக, இதழியல் மாணவனாக, தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக, Little Aid நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக தனது எல்லையில்லாத ஆற்றலை மேலும் விருத்தி செய்து வந்ததை அறிந்து மனம் பூரித்தோம். அந்தோ.. எமது மகிழ்ச்சி நீண்டநாள் நீடிக்கவில்லை. எம்முடன் கூடப்படித்த அனைத்து நட்புக்களையும் மீள இணைக்கும் பணியில் ஒரு Whatsapp Group இனை ஆரம்பித்து அனைவரையும் ஒரு குடைக்குள் மீண்டும் கொண்டுவந்தோம். ஜோதியையும் இணைத்தோம். எல்லோரிடமும் மீண்டும் அதே மகிழ்ச்சி. அதே ஆரவாரம். மீண்டும் 25 வருடம் பின்னோக்கிப்போய் இளைஞரானது போல ஓர் உணர்வு. ஆனாலும் ஓர் நெருடல். ஜோதியிடம் இருந்து பதில் ஏதும் வரவில்லை. தீர விசாரித்ததில் யாழ்.மருத்துவமனையில் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக அறிந்து கலங்கினோம். நண்பர்கள் பலரும் தாம் அறிந்த மருத்துவர்களை அணுகி ஆலோசனை கேட்டனர். சிலர் மருத்துவர்களையே அங்கு அனுப்பினர். சிலர் ஆண்டவனை வேண்டினர். என்ன விலைகொடுத்தும் அவனைக் காக்க பணம் அனுப்பினர். என்ன விதியோ அவன் எம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்து விட்டான் என்ற செய்தியே கடைசியில் Whatsapp இல் வந்தது. அருமை நண்பனே நீ விட்ட இடத்தை யாராலும் அடைக்கமுடியாது. உன்னை எம்மால் மறக்கவும் முடியாது. எம் இதயங்களில் என்றும் நீ வாழுவாய்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் (கலை இலக்கிய நண்பர்)

### நெஞ்சகலா நினைவில் சிவஜோதி

நண்பன் சிவஜோதியின் இழப்புச் செய்தியை கொழும்புத் தமிழ்ச் சங்க நண்பர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நீர்கொழும்பிலிருந்து தொலைபேசியில் என்னிடம் தெரிவித்த போது சில விநாடிகள் அதிர்ச்சியில் உறைந்து போனேன்.

ஒரு நல்ல நண்பனை நான் இழந்து போனேன் ஒரு நல்ல மனிதனை இம் மண் இழந்துவிட்டது என்ற ஏக்கத்திலிருந்து இன்னும் நான் விடுபடவில்லை.

2000ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். ஏற்கெனவே கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும், தலைவராகவும் விளங்கிய இலங்கைத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் நண்பர் சட்டத்தரணி சோ.தேவராசா அவர்களின் ஊக்கப்படுத்தலில் தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த கலை இலக்கிய நண்பர்கள் சிலர் கொழும்புத் தமிழ்ச்சங்க உறுப்பினர்களாகினர். என் நினைவில் உள்ளவரை பேராசிரியர் சி.சிவசேகரம், அமரர் மாவை வரோதயன், கலாநிதி.ந.இரவீந்திரன், இரா.சடகோபன் ஆகியோருடன் சிவஜோதியும் ஒருவராகிறார். இவ்வாறுதான் சிவஜோதியின் அறிமுகமும் நட்பும் எனக்கு வாய்த்தது.

அன்றிலிருந்து, 1990இல் நான் ஆரம்பித்த கொழும்பு வாசத்தை முடித்துக் கொண்டு 2010இல் குடும்பத்தினருடன் ஊர் (மட்டக்களப்பு) திரும்பும் வரை தேசிய கலை இலக்கியப் பேரவையும், கொழும்புத் தமிழ்ச் சங்கமும் முன்னெடுத்த கலை இலக்கியச் செயற்பாடுகளில் நாமிருவரும் இணைந்து பல வேலைகள் செய்தோம். சிவஜோதி அவர்கள் உண்மையும் நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் சாந்தமும் அதேவேளை சமூக அநீதிகளைக் கண்டு கொதிக்கும் உள்ளமும் ஒடுக்கப்படும் மக்களுக்காக உணர்வுபூர்வமாகச் சிந்திக்கும் மனப்போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவர். விளம்பரத்தையோ புகழையோ நாடாது அமைதியாக இருந்து தன்னால் முடிந்தவரை உற்சாகமாகக் கலை இலக்கிய சமூகப்பணி ஆற்றியவர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அலுவலராகக் கடமையாற்றிய கௌரியை விரும்பி அவரையே வாழ்க்கைத் துணையாகவும் ஆக்கிக் கொண்டவர். இவர்களுடைய திருமணத்தில் நானும் கலந்து கொண்டு வாழ்த்தியமை இப்போதும் எனது நினைவில் எழுகிறது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி இடம்பெற்ற "சுனாமி" அனர்த்தத்தைத் தொடர்ந்து கொழும்புத் தமிழ்ச் சங்கம் சேகரித்த உலர் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அம்பாறை மாவட்டத்திற்கு எடுத்துச் சென்று விநியோகம் செய்வதில் என்னுடன் வந்து உற்சாகமாக ஈடுபட்டு உழைத்தவர்.

கலை இலக்கிய சமூக செயற்பாடுகளில் எந்தவிதமான சுய எதிர்பார்ப்புகளும் இல்லாமல் எடுத்த பணிகளில் மிகவும் விசுவாசமாக ஈடுபடும் தன்மை கொண்டவர். இவருடைய இந்தக் குணவியல்பு தான் என்னை அவருடன் மேலும் இறுக்கமாக்கியது. மட்டக்களப்பிற்கு வந்து எங்களது வீட்டில் தங்கி விருந்தோம்பிச் செல்லுமளவிற்கு எமது குடும்ப நண்பராகவும் உறவில் உயர்ந்தார்.

அவருடைய இழப்பின் துயரம் இன்னும் நீங்கவில்லை. இயமன் இவ்வளவு கொடியவனா என எண்ணத்தோன்றுகிறது. அன்னாரை அஞ்சலித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரது மனைவி கௌரிக்கும் அவரது ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் ஆறுதல்களைக் கூறி அமரர் சிவஜோதி அவர்களை நெஞ்சகலா என் நினைவில் பதிக்கிறேன்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள்

(Opent University of Sri Lanka)

### ஜோதி மறைந்தாலும் மறைவில்லாத நண்பரே போய் வருக ....

உனக்காகவே இந்தச் சமூகம் காத்திருக்கிறது....

எதைச் சொல்வது எதை விடுவது எங்கிருந்து தொடர்வது எனத் தெரியவில்லை.

உனது இழப்பு பலரை துயர் கொள்ளவைக்கும்.

ஒரு இனிய மனிதனை சந்தித்த நாட்கள் அவை...

ஒரு புன்சிரிப்பு, இனிய பேச்சு , தீட்சண்யம், கண்ணியம், மனித நேயம், மனித மாண்புகள் நிறைந்த மனிதன் நீ.....

எதைச் சொல்வது எதை விடுவது என்பது தெரியவில்லை ....

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் சைவப்பின்புலத்தில் இருந்து வந்தாலும் இனம், சமயம், மொழி, பிரதேசங்களுக்கு அப்பால் மனிதம் குறித்த சுவாசிப்புக்குரியவன் நீ....

மும்மொழிப்புலமை, கலை இலக்கிய ஈடுபாடு, சமூகச் செயற்பாடுகள் என ஒரு பல்துறை ஆளுமையை வெளிப்படுத்தி நின்ற மனிதர்.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்கள் மட்டுமின்றி அனைத்து விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் உனது நட்பு வட்டத்துக்குள் இருந்தார்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, இதழியல் துறை, என எங்கும் அறியப்பட்டவராக இருந்தார்.

பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், கலை இலக்கிய வட்டாங்கள் என பல்வேறு அரங்கச் செயல்பாடுகளில் உனது பங்களிப்பு இருந்தது.

பல்கலைக்கழகத்தில் அனைவருடனும் பேசிப் பழகும் ஒரு மனிதராக, நண்பனாக ஜோதி இருந்தாலும். அவருக்கு ஒரு வட்டம் இருந்தது ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறை விடயங்களை, அரசியலை, சமூகங்கள் குறித்த பேசு பொருளை பேசுவதற்கு.... அந்த வட்டத்தில் பலரும் இருந்தனர்.

எல்லோருடனும் உரிமையோடு பழகக்கூடியவர். எல்லோரும் இவருடன் உரிமையோடு பழகினர். ஒரு வெள்ளைக்காரன் போல வலம் வந்த அந்த நினைவுகளை மறக்க முடியாது.

இவை எல்லாவற்றையும் தாண்டி நீ ஒரு சமூகப் போராளியாகவும் இருந்தாய்.... நண்பரே சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை.....

சமூகப் பணிக்காக நீ உன் உடல் நிலமையைக் கூட சரியாக கவனிக்காமையால் தான் உனக்கு இந்த நிலை வந்தது என நண்பர்கள் கூறும் போது வேதனையாக உள்ளது.

விட்டு விடுதலை வேண்டி நின்ற எங்கள் வீட்டு குருவி தன் குரல் இழந்து நிற்கிறது. நண்பனே போய் வருக உனக்காக இந்தச் சமூகம் காத்திருக்கிறது.......

**###**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செ. சக்திதரன் (கலை இலக்கிய நண்பர்)

(அத்தியட்சகர், இலங்கைச் சுங்கம்)

### அணையா சிவஜோதி

வைத்தீஸ்வரன் சிவஜோதி (1971-2020) அவர்களை 1990களின் ஆரம்பத்தில் ஓர் உற்சாகம் மிக்க இளைஞனாக கொழும்பில் சந்தித்தேன். அரங்காடிகள் என்ற அமைப்பின் மூலம் தமிழ் நாடகங்கள் சிலவற்றைக் கொழும்பில் நாங்கள் மேடையேற்றி வந்த காலமது. அவர் தேசிய கலை இலக்கியப் பேரவையிலும் இணைந்து செயற்பட்டிருந்தார். எல்லோரிடமும் பழகக்கூடிய ஆற்றல் கொண்ட சிவஜோதி வெள்ளைக்காரத் தோற்றம் மட்டுமன்றி வெள்ளை உள்ளம் கொண்டவரும் கூட. கண்டி மற்றும் ஹற்றன் போன்ற இடங்களில் நாங்கள் நாடகங்களை மேடையேற்றிய பொழுது அவரும் கூட வந்ததாக ஞாபகம்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் தொழில்நுட்பத் துறையில் பட்டப்படிப்பை முடித்த சிவஜோதி கணனித் துறையில் ஈடுபாடு கொண்டிருந்தார். அத்துறையிலேயே இறுதி வரை பணியாற்றினார். கொழும்பிலும் பின் கிளிநொச்சியிலும் இவரது பணிகள் தொடர்ந்திருந்தன. 90களின் நடுப்பகுதியில் லண்டன் சர்வதேச வானொலி நிலையம் ஒன்றிற்காக கொழும்பில் சட்டத்தரணி திரு சோ.தேவராஜா அவர்களின் இல்லத்தில் வைத்து நாடகங்கள் சிலவற்றை ஒளிப்பதிவு செய்து அனுப்பிய போது சிவஜோதியே முன்னின்று அப்பணிகளைச் செய்தார். எடுத்த பொறுப்பை நேர்த்தியாகச் செய்து முடிப்பதில் சிவஜோதி எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்.

இக்காலப்பகுதிகளில் கொழும்பில் நிறுவன ரீதியாக இயங்கிய திருமணப் பொருத்துனர்களையும் வெள்ளவத்தைக் கடற்கரையில் விடுமுறை நாட்களில் உல்லாசமாகப் பொழுது போக்கும் காதல் ஜோடிகளையும் பேட்டி கண்டு ஒரு நிகழ்ச்சியினை ஒளிப்பதிவு செய்தோம். இதில் சிவஜோதி மிக உற்சாகமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டார். அப்போது சந்தித்த சிலர் சிவஜோதியின் தோற்றத்தைப் பார்த்து அவர் ஒரு வெளிநாட்டவர் என நினைத்து ஆங்கிலத்தில் உரையாடிய சம்பவங்களும் இடம் பெற்றன.

கணனி சம்பந்தமான இவரது பணிகள் கொழும்பில் பல இடங்களிலும் தொடர்ந்தன. கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் கணனி தொழில்நுட்பத்தை விஸ்தரிப்பதில் சிவஜோதியின் பங்கு முக்கியம் பெற்றிருந்தது. அங்கு தான் அவரது வாழ்க்கையின் முக்கிய சந்திப்பும் ஏற்பட்டதாக நண்பர்கள் கூறுவதுமுண்டு. சிவஜோதியின் திருமண நிகழ்வில் கலந்து கொண்டிருந்த போது கலைஞர் "சோக்கல்லோ" சண்முகம் அவர்கள் இது தேசிய கலை இலக்கிய பேரவைக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்குமான திருமணப்பந்தம் என வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்தது இன்னமும் ஞாபகத்தில் உள்ளது. ஆனால் சிவஜோதி இன்று எம்மத்தியில் இல்லை. நினைவுகளில் தோய்கின்ற போது அவரது பிரிவு நெஞ்சை நெருடுகிறது. நல்லதொரு கலைஞனை, தொழில்நுட்பவியலாளனை, ஒரு சிறந்த உழைப்பாளியை, நல்ல நண்பனை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதாபிமானம் நிறைந்த ஒரு மானிடனை நாம் எல்லோரும் இழந்து தான் விட்டோம். சிவஜோதியின் மறைவுச் செய்தியை அறிந்து என்னுடன் தொடர்பு கொண்ட அவரது பல்கலைக்கழக நண்பர் ஒருவர் நாம் ஒலிப்பதிவு செய்த பேச்சுத்திருமணம் - காதல் திருமணம் சம்பந்தமான நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து சிவஜோதியின் மறைவை நம்ப முடியவில்லை என வருத்தத்துடன் கூறினார்.

ஆம் அவரைத் தெரிந்து அவருடன் பழகிய யாராலும் அவரது பிரிவு நம்பமுடியாத ஒன்றாகத் தான் இன்னமும் இருக்கிறது. சிவஜோதி தான் வாழ்ந்த காலத்தில் பழகிய முறைமையினாலும் ஆற்றிய பணிகளாலும் எமது மனங்களில் அணையாத ஜோதியாக நிலையான இடத்தைப் பிடித்து விட்டார் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த சிவஜோதி எப்போதும் எம் நினைவுகளில் வாழ்கிறார். வாழ்வார் என்பது நிச்சயம்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிலாஷா தேவராஜா (உடன் பிறவாத சகோதரி)**
(ஆசிரியர்)

## நிம்மதி உலகு தேடியா சென்றீர்கள்...

எம் அன்புக்கினிய சிவஜோதி அண்ணா அன்றலர்ந்த தாமரை வதனம் என்றும் புன்முறுவலான அந்த முகம், பிறர் மனம் நோக பேசியதை என்றும் கண்டதில்லை நாம்.

அண்ணாவிற்கும் எம் குடும்பத்திற்குமான உறவு 25 வருடங்களுக்கு மேற்பட்டது. கலை, இலக்கியம், பண்பாடு என அனைத்தாலும் ஒன்று பட்டிருந்தோம்.

அண்ணாவை என் மூன்றாம் வகுப்பில் கண்டதாய் சிறு ஞாபகம், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எம்மோடே அண்ணா என் உடன் பிறந்தவர் போலாகினார்.

Telecommunication Engineering படித்திருந்தாலும் அவர் மக்களோடு சேவை புரிவதிலேயே பெரு விருப்பம் கொண்டிருந்தார். சிவஜோதி அண்ணாவின் துணைவி கௌரி அக்காவினை நான் முன்பே கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிந்திருந்தேன். இருவரிடையே மலர்ந்த காதல் திருமணமாய் நடந்தேறியது. அன்றிலிருந்து இறுதித் தருணம் வரை சிவனும் பார்வதியும் போலவே எப்போதும் ஒன்றாய் எந்நிகழ்வுகளிலும் காணலாம்.

சிறிது காலங்களின் பின்பு எம் அயல் வீட்டில் வந்ததன்பின் மேலும் எம் உறவு வலுப்பெற்றது. எம் இன்பத்திலும் துன்பத்திலும் தோளோடு தோள் நின்றனர்.

இரத்த உறவைத் தாண்டி ஒரு நட்பு சகோதர உணர்வை வலுப்படுத்தியதற்கான காரணம் அண்ணாவின் இயல்பான நடத்தையே ஆகும்.

நடிப்புச் சுதேசிகள், சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காதவர்கள் வாழுகின்ற இவ்வுலகில், சமதர்மத்தையும், சமத்துவத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிச சிந்தனைகளின் வெளிப்பாட்டையும் அவர்களின் குடும்ப வாழ்வியல் வெளிப்படுத்தியிருந்தது.

பால்நிலை சமத்துவத்தை, பெண் விடுதலைச் சிந்தனையை வெறும் ஏட்டளவில் பேச்சளவில் செய்பவரல்ல ஜோதி அண்ணா. தன் மனைவியின் கற்றல் செயற்பாடுகளுக்கும், அவரின் வழி காட்டியுமாய் திகழ்ந்திருந்தார். தன் மனைவி மீது அளவு கடந்த அன்பைப் பொழிந்து லௌகீக வாழ்வைச் சிறப்பாய் மேற்கொண்டிருந்தார் அண்ணா.

அண்ணாவின் சமூக அக்கறை அவரைக் கிளிநொச்சிக்கு நகர்த்தியது. அங்கே அவர் செய்த சேவைகள் அளப்பரியவை. செய்வன திருந்தச் செய்பவர். குற்றம் பொறுக்காதவர். பொய் உரையாதவர். நீங்கள் செய்த சேவைகள் உங்கள் ஆன்மாவை பூரணப்படுத்தியதால் நிம்மதி உலகு தேடி சென்றீர்கள் அண்ணா.

இங்கு நாம், கௌரி அக்காவுடன் உங்கள் நினைவுகள் என்றும் மகிழ்வு தரும் அண்ணா.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவை. எஸ். தில்லைநடராசா (கலை இலக்கிய நண்பர்)

## எப்போதும் சிரித்த முகத்துடன் எல்லோருக்கும் உதவும் சிவஜோதி

சில நேரங்களில் கேள்விப்படும் செய்திகள் நம்ப முடியாதிருப்பது ஒரு புறமிருக்க- அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தரும் செய்திகளாகி விடுவதுமுண்டு. அப்படியானதொரு செய்தி தான் தனக்கான எதிர்பார்ப்பு எதுவுமின்றி மற்றவர்களின் நலன்களுக்காகவும் தேவைகளுக்காகவும் பரவலாகப் பணிபல புரிந்த நண்பர் வைத்தீஸ்வரன் சிவஜோதி குறித்த பிந்திய அறிவித்தல்.

சில தினங்களுக்கு முன் கிளிநொச்சியிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட நண்பர் சிவஜோதி மிகவும் நல்ல முறையில் பயனுள்ள பணிகள் பல செய்யும் அரசு சார்பற்ற நிறுவனமான கிளிநொச்சி லிற்றில் எய்ட் நிறுவனம் தொடர்பாகவும் 2021 ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ள வேலைத்திட்டங்கள் சில தொடர்பாகவும் கலந்துரையாடினார். உரையாடி ஒரு மாதம் கூட இருக்காது, அவர் தீடீரென நோய்வாய்ப் பட்டிருந்ததாகவும் உயிர் பிரிந்து விட்டதாகவும் கேள்விப்பட்டதும் நம்பமுடியவில்லை. பின்பு சிலர் உண்மையென உறுதிப்படுத்திய பின்தான் நம்ப முடிந்தது.

எனக்கு அறிமுகமான ஆரம்பத்தில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் அப்போதைய பொதுச் செயலாளர் தமிழவேள் கந்தசுவாமியுடன் சேர்ந்து பல பொதுப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். தமிழறிஞர் சைமன் காசிச்செட்டியையும் அவர் சமூகத்துக்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிய தொண்டுகளையும் பலர் மறந்திருந்த நிலையில் மீண்டும் அவற்றை பலர் அறியச்செய்தவர். தமிழவேள் கந்தசுவாமி, சைமன்காசிச் செட்டியின் நினைவு தொடர்பாக மாணவர் மத்தியில் போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கவும் உதவியதுடன், கற்பிட்டி புத்தளம் ஆகிய இடங்களுக்கு பல தடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று சைமன் காசிச் செட்டியை நினைவு கூர்ந்து மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் பலவற்றில் கலந்துகொண்டார். தமிழவேளுக்கு பக்கத்துணையாக நின்று பணியாற்றியவர்.

அமரர் சிவஜோதி சிறந்த மேடை நாடக நடிகராகத் திகழ்ந்ததோடு, சிக்கலான காலகட்டத்தில் பல கலைஞர்களையும் மட்டக்களப்புக்கு அழைத்துச்சென்று நிகழ்வுகளை நிகழ்த்தியவர்.

தேசிய தமிழ்த் தினசரியான தினகரனிலும் சிறப்பாகப் பணியாற்றியதோடு, பலருக்கு கைத்தொலைபேசி கணனி அறிவைப்புகட்டுவதிலும் அவை தொடர்பாக ஆலோசனை வழங்குவதிலும் தன்னை அதிகம் ஈடுபடுத்தியவர்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல பின்தங்கிய கிளிநொச்சியில், கடந்த கால யுத்தத்தின் விளைவாக பல குடும்பங்கள் பெண்களின் உழைப்பில் வாழ வேண்டிய நிலை உருவான போது, பெண்கள் கௌரவமான தொழில்களைச் செய்யவும், இளம் பெண்கள் மொழியறிவு தொழிலறிவு கணினிக்கல்வி போன்றவற்றை பெற்றுக்கொள்ளவும் திட்டமிட்டுச் செயலாற்றியவர் சிவஜோதி. அவர்களுக்கான பயிற்சி நிறைவின்போது பெறுமதியான சான்றிதழ்கள் மற்றும் பரிசிகள் வழங்க ஒழுங்கு செய்ததுடன் பயிற்சி பெற்ற பெணகள் தயாரித்த பொருட்களை கண்காட்சியூடாக பலருக்கு அறிமுகம் செய்ததுடன் விற்பனைக்கான சந்தை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தவர்.

மற்றவர்களைக் குறை சொல்லாமல் குறைத்து மதிப்பிடாமல் எந்நேரமும் சுறுசுறுப்பபாக சிரித்த முகத்துடன் எல்லோருக்கும் உதவும் சிவஜோதியின் இழப்பு பேரிழப்பு தான்.

சிவஜோதியின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த. சிவசுப்ரமணியம் (தம்பு சிவா – நண்பர்)

(முன்னாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், தாயக ஒலி பிரதம ஆசிரியர்)

### மாசில்லா மாணிக்கம்

பிறந்து வளர்ந்து நல்வாழ்வு வாழ்ந்து சமுதாய நலனில் அக்கறை கொண்டு உழைத்த உத்தமர்கள் மக்கள் மனங்களில் என்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். அந்த வகையில் அமரர்.வை.சிவஜோதி அவர்கள் சமூகத் தொண்டனாக, தமிழ்மொழிப் பற்றாளராக, பத்திரிகையாளராக, இலக்கியவாதியாக, தொழில் நுட்பவியலாளராக, நாடகவியலாளராக மேலும் பல்துறை விற்பன்னராக இருந்து செயலாற்றிய செம்மல். தமது சமூதாயத்திற்குத் தன்னாலான சேவையை வழங்க வேண்டும் என்ற இலட்சியத்துடன், பண்பாளனாக வாழ்ந்த பெருமைக்குரியவர். இத்தகைய ஆற்றல் மிக்க செயல் வீரன் எமையெல்லாம் விட்டுப் பிரிந்தமை எமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

கொழும்புத் தமிழ் சங்கத்தின் உறுப்பினராகவும், தேசிய கலை இலக்கிய பேரவையின் அங்கத்தவராகவும் இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றினார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து சங்கத்தின் முன்னேற்றத்துக்காக பல பணிகளை முன்னெடுத்தவர். தமிழுவேள் இ.க.கந்தசாமி அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக இருந்தவேளை அவருடன் இணைந்து பல விழாக்களை முன்னெடுத்தவர்.

தமிழுவேள் அவர்கள் ஈழத்துப் பூதந்தேவனார் மன்றத்தை நிறுவி செயற்பட்ட வேளையில் அதன் முக்கிய செயற்பாட்டாளராக இருந்தவர் என்ற வகையில் பலரின் நன்மதிப்பைப் பெற்றார். தமிழ் பெரியார் என்று போற்றப்பட்ட சைமன் காசி செட்டியினது 200ஆவது நினைவு தினத்தை அவரது சொந்த இடமான கற்பிட்டியில் சிலை நிறுவி விழா எடுத்தபோது சிவஜோதி அவர்கள் முன்னின்று நடத்தி வைத்தார். மேலும் இந்திய அறிஞர்களை அழைத்து வந்து கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக நடத்திய சிலப்பதிகாரப் பெருவிழாவை தமிழுவேளுடன் இணைந்து நடத்திய பெருமை இவரையே சாரும். அத்துடன் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கொண்டாடிய தொல்காப்பிய விழாவுக்கும் இவரது பங்களிப்பு பெருமைக்குரியது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்ட வகையில் நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், சொற்பொழிவுகள், விமர்சனங்கள் ஆகியவற்றில் முன்னேற்றத்துக்கு உழைத்தவராக இருந்துள்ளார். இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற நாடகக் குழுவுடன் இணைந்து பல நாடகங்களை அங்கு மேடையேற்ற பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த இவர், அத்துறை சார் செயலாக்கத்தில் தமது மேலான பங்களிப்பை வழங்கி வந்துள்ளார். முற்போக்குச் சிந்தனையாளரான இவர் எழுத்துத்துறையிலும் தடம் பதித்தவராவார். இலக்கியச் சஞ்சிகைகளில் தனது ஆக்கங்களை வெளியிட்டு வந்துள்ளார்.

பழகுவதற்கு இனியவராகவும், எல்லோரையும் மதிக்கும் பண்பாளராகவும், சாதி மத வேறுபாடுகளைக் கடந்து நின்று எல்லோரையும் அரவணைக்கும் உத்தமராகவும் வாழ்ந்து காட்டியுள்ளார். இல்லற வாழ்க்கையில் இணைந்து ஹம்சகௌரியுடன் அவர் வாழ்ந்த காலம் பொன்மயமானது. ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்து நல்லறம் கண்டவர்கள். அவரின் மறைவு கௌரியைப் பெரிதும் பாதித்திருந்தாலும் ஒரு நல்ல மனிதருக்குத் துணைவியாக இருந்துள்ளேன் என்ற பெருமிதம் அவரை என்றும் வாழவைக்கும் என்று இறைவனைப் பிரார்த்திப்போம். நண்பர் சிவஜோதி அவர்கள் நல்லதை நினைத்து நல்லதையே செய்து நல்ல மனிதராக வாழ்ந்து காட்டியவர். எல்லோரையும் அன்பால் அரவணைக்கும் மனிதநேயம் கொண்ட மாசற்ற பெருமனிதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

பெருமையாகிய ஒழுக்கத்தைக் காக்கும் தன்னம்பிக்கை உடையவர்கள் எந்த ஒரு காரியத்தையும் ஊக்கமுடன் செய்து முடிப்பார்கள். என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைவாக சிவஜோதி அவர்கள் தமது செயலால் நிருபித்துள்ளார். அவர் நாமம் என்றும் வாழும். வேதனை நிரம்பி நிற்கும் நிலையில் அவர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சகோதரி கௌரிக்கும் உற்றார் உறவினர், நண்பர்களுக்கம் எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. குகமூர்த்தி (நண்பர்)

(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று தெய்வமாகிவிட்ட அமரர் சிவஜோதியின் இழப்பு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி உள்ளது. கிளிநொச்சியில் உள்ள லிட்டில் எயிட் தொண்டுநிறுவனத்தின் முகாமையாளராகப் பணியாற்றி வந்ததுடன் தன்னாலான பல சமூகத் தொண்டுகளையும் சேவை மனப்பான்மையுடன் ஆற்றிவந்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடனான அவரது உறவு என்பது ஆத்மார்த்தமானது. கொழும்புத் தமிழ்ச் சங்கம் இக்கட்டான காலகட்டங்களில் இருந்தபோது அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து தன்னுடைய பாரிய பங்களிப்பை சங்கத்திற்கு நல்கியவர். அமரர் தமிழவேள் கந்தசாமி அவர்கள் செயலாளராக இருந்தபோது அவருடன் இணைந்து பணியாற்றினார். இயல், இசை, நாடகம் என முத்தமிழின் வளர்ச்சிக்குத் தன்னாலான உழைப்பை நல்லூக்கத்துடன் வழங்கியவர். என்றும் சிரித்தமுகம், இனியசொல் பேசும் முகம், பண்பாய்ப் பேசும் மனம், பணிவாய் கேட்கும் குணம், தமிழ்ப்பற்று, கடமையில் உறுதிமனம், நல்லவர் போற்றும் மனம் இப்படி எத்தனையோ நல்லியல்புகளைக் கொண்ட அவர் இன்று எம்மிடையே இல்லை என்னும் போது இதயம் கனக்கிறது.

வாழ்க்கைத் தத்துவங்கள் பல எமக்கு விளங்கினாலும் சிலருடைய இழப்பு எம்மைப் பாதிக்கவே செய்கிறது. நம்மை மட்டுமல்ல நாம் சார்ந்த சமூகத்தையும் பாதிக்கிறது அந்தவகையில் சிவஜோதி அவர்களின் மறைவு தமிழ் உலகத்திற்கும், தமிழ்ச் சங்கத்திற்கும் பேரிழப்பாகும். எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை அவரது ஆத்மா அமைதி பெறவேண்டுமென இருகரம் கூப்பி தமிழ்ச் சங்கம் சார்பாக பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி ஓம் சாந்தி**

**###**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகேஸ்வரன் பிரசாத் (ஊடகத்துறை நண்பர்)**
(Media Officer, Parliament of Sri Lanka)

## தினகரன் முன்னாள் உதவி ஆசிரியர் சிவஜோதி அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்...

நாம் கடந்து வந்துள்ள 2020ஆம் ஆண்டு பல்வேறு இழப்புகளைத் தந்துள்ளது. இலங்கையில் தமிழ்ப் பத்திரிகை உலகில் இந்த இழப்புகளில் பேரிழப்பாக நண்பன் சிவஜோதியின் மறைவு அமைந்துள்ளது. ஊடகவியலாளர், இலக்கியவாதி, சமூக அக்கறையாளன், கலைஞன் என பல்துறை ஆளுமை நிறைந்த சிவஜோதியின் திடீர் மரணம் அவரது நண்பர்களாகிய எம்மையெல்லாம் மனத்துயரடைய வைத்துள்ளது.

யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் பிறந்த சிவஜோதி யாழ் விக்டோரியாக் கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து பின்னர் கொழும்பில் தனது மேற்படிப்புகளை மேற்கொண்டார். தொழில் நிமித்தம் கொழும்பில் அதிக காலம் வாழும் நிலை அவருக்கு ஏற்பட்டது. இலக்கியம் மற்றும் கலைத்துறை மீது கொண்டிருந்த ஆர்வம் காரணமாக கொழும்பிலிருந்த காலப் பகுதியில் தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் என்பவற்றுடன் நெருங்கிய ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். தமிழ்ச் சங்கத்துடன் அன்றைய காலத்தில் மிகவும் நெருக்கமாக இருந்தவர்களில் ஒருவர் சிவஜோதி.

நண்பன் சிவஜோதி 2010ஆம் ஆண்டே எனக்கு அறிமுகமாகினார். நானும் அவரும் தினகரன் ஆசிரிய பீடத்தில் ஒன்றாக இணைந்தவர்கள். வயதில் மூத்தவராக இருந்தாலும் அனைவருடனும் இயல்பாகப் பழகும் அவருடைய குணம் என்னை நண்பனாக மாற்றியது. ஊடகத்துறைக்கு அவர் அப்போது புதிதாக இருந்தாலும் விடயங்களைக் கற்றுக் கொள்வதற்குக் காண்பித்த ஆர்வம் மற்றும் அங்கிருந்த சக சிரேஷ்ட ஊடகவியலாளர்களிடமிருந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதில் அவர் காண்பித்த அக்கறை பல தடவைகள் என்னை வியப்படையச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளது. எந்தவொரு நபரையும் நோகடிக்காமல் பேசும் குணம் சிவஜோதியின் அடையாளம் என்றே கூற வேண்டும். அவருடைய இந்த இனிய பண்பினால் லேக்ஹவுஸில் சகோதர இனத்தைச் சேர்ந்த பலர் அவருக்கு நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். ஏதாவது ஒரு விடயத்தைப் பொறுப்பெடுத்து அதனை முன்னின்று செயற்படுத்துவதில் முழுமையான அர்ப்பணிப்பைக் கொண்டு செயற்படுவது அவரின் மற்றுமொரு விசேட அம்சம் என்றே கூற வேண்டும்.

என்னை விட வயதில் மூத்தவராக இருந்தாலும் தொழில் ரீதியாக ஏதாவது ஆலோசனைகள் வழங்கினால் சிறுபிள்ளை போன்று அவற்றை சிரித்த முகத்துடன் ஆமோதித்து ஏற்றுக் கொள்வது அவருடைய சிறந்த பண்பாக அமைந்தது. எத்தனை நெருக்கடிகள், அழுத்தங்கள் வந்தாலும் எவருடனும் கடுமையாகப் பேசவோ அல்லது வாதிடவோ செய்யாத பண்பாளன் ஜோதி. ஊடகத்துறைக்கு அப்பால் இலக்கியத்துறை மற்றும் கலைத்துறை குறிப்பாக நாடகத்துறையிலும் அவருக்கு அதிக ஈடுபாடு காணப்பட்டது. புத்தக வெளியீடுகள் உள்ளிட்ட தமிழ்ச் சங்கத்தின் பிரதான நிகழ்வுகளில் ஜோதி தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். நாடகங்களிலும் அவர் அரங்கேறியுள்ளார். குறிப்பாக நிகழ்வுகளை ஒருங்கிணைக்கும் பணிகளில் அவர் முன்னின்று உழைத்ததைக் காணக் கூடியதாகவிருந்தது. காதலித்துத் திருமணம் செய்து கொண்ட துணைவியார் கௌரி மீது அவர் கொண்டிருந்த அன்பு, பிரியம், நெருக்கம், அக்கறை விபரிக்க முடியாதது. தனிப்பட்ட காரணத்தினால் தினகரன் ஆசிரிய பீடத்திலிருந்து விடைபெற்று கிளிநொச்சி 'லிட்டில் எயிட்' நிறுவனத்தில் இணைந்து பணியாற்றினார். அங்கு மாணவர்களுக்கு சிறந்த கல்வியை மாத்திரமன்றி தலைமைத்துவப் பண்புகள் என பல்தரப்பு ஆளுமைகளை வளர்ப்பதற்கு உறுதுணையாகவிருந்தார். திடீரென ஏற்பட்ட சுகவீனம் அவரை வீழ்த்தியது. யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனளிக்காமல் காலமானார். அவருடைய நினைவுகள் என்றும் எமது மனங்களில் ஜோதிவிட்டு ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (கலை, இலக்கிய நண்பர்)

### அகாலத்தில் இறைபதமடைந்த அன்பன் சிவஜோதிக்காம் அஞ்சலிப்பா
### இறைபதம் நீ சென்றனையோ இளைய நண்பா!

எல்லோர்க்கும் நல்லவனாய் இருந்தாய் யார்க்கும்
எள்ளளவும் மனம்நோக நடந்தா யில்லை
சொல்லிலிலே இனிமைகொஞ்சக் களங்க மற்ற
சிரிப்போடு முகம்மலர உரைப்பாய் என்றும்
நல்லனவே செய்தாய்நீ நாடிச் செய்தாய்
நட்புக்கும் இனியவனாய் வாழ்ந்து நின்றாய்
வல்லவனே செய்கருமம் அனைத்தும் தூய்தாய்
வழங்கியவன் சிவஜோதி விடைபெற் றானே!

கொழும்புத்தமிழ்ச் சங்கத்தின் உறுப்பாய் ஆட்சிக்
குழுவினிலும் பணிசெய்தாய் கடமை யோர்ந்தே
தொழில்செய்தாள் நின்மனையாள் ஆங்கே யுச்சத்
தமிழ்த்தொண்டாய் யாகுமது நலத்தில் மேலாம்
எழுவானின் கதிரொக்க இணைந்தெ முந்தீர்
இடையிலென்ன காலனுக்கென் றிணைந்த கோபம்
அழையாத விருந்தினனாய் வந்தான் நின்னை
அகாலத்திற் கவர்ந்தனனே அழியாச் சோகம்

சமூகத்தொண் டாற்றுவதில் தனித்த வன்நீ
தமிழ்த்தொண்டும் பிறவும்நீ தொடர்ந்தே செய்தாய்
அமைதியான சுபாவத்தைக் கட்டி யாண்டாய்
அழகனுமாம் தோற்றத்தில் ஐய! னேயேன்
சுமையாகச் சோகத்தைக் கௌரி ஏற்கச்
சென்றடைந்தாய் தெய்வபதம் கௌரி யோடே
எமையுந்தான் துயரத்தில் ஆழ்த்தி விட்டாய்
எந்நாளும் இதயத்தில் வாழ்வாய் நம்பி!

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு. சிவலிங்கம்**

(எழுத்தாளர், மலையகம்)

## அமரத்துவம்...

அமைதி நிறைந்த தோற்றம்..
ஆழமான சிந்தனைப் பார்வை..
வசீகரம் நிறைந்த முகம்..
பாசம் நிறைந்த... பண்புகள்...
இவையனைத்தும் நிறைந்தவர்
சிவ ஜோதி என்ற சகோதரன்...!
உடன் பிறவா உறவினன்..!
எனது நூல் வெளியீடுகளுக்கு
தமிழ்ச் சங்க மண்டபத்தில்
தவறாது வந்து
அமர்ந்திருப்பார்.. அம்சமாக..!
2008 ம் ஆண்டு....
5008 ம் தொல்காப்பியர் ஆண்டு...
கொழும்பு... தமிழ்ச் சங்கத்தில்
சிலப்பதிகார முத்தமிழ்க்
காப்பியப் பெரு விழாவுக்கு
தமிழவேள்
இ.க.கந்தசாமி
பெருந் தகை
கழகச் செயலாளருடன்
இணைந்து சிறப்புடன்
பணி புரிந்த
பெருமகன் சிவஜோதி...!
அங்கே எனக்கும்
"தமிழ்ப் புரவலர்" என்ற
பட்டயம் வழங்க
காரணமாக இருந்தவர்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சங்கத்தில்
ஒரு முறை
துணைவியாரின்
பரீட்சைக்கான
சில தகவல்களை
என்னிடம் கேட்டறிந்தார்..!
சிவா..! சிவம்.. "இருக்கிறம்"
சஞ்சிகையில்
செயற்பட்ட போது,
எனது
"உத்தியோகம் புருஷ லட்சணம்"
கதையை வாசித்து...
தொலை பேசியில்
தனது விமர்சனக் கருத்தைக்
கூறி.... பாராட்டி
மகிழ்ந்த நினைவு
பசுமையாக இருக்கின்றது.!
சிவம் அன்பு நிறைந்தது.
அன்புதான் சிவம்...
அதில் ஜோதியும்
ஒளிக்கும் நாமத்தை...
வழங்கியப் பெற்றோர்கள்தான்
என்னே... பெருமை கொண்டவர்கள்..!
பெற்றோர்- உற்றோர்- மனைவி-
பந்தங்களுக்குள்.. சிவா..
ஜோதியாகவே மிளிர்வார்..!
அவரது அமரத்துவம்
புனிதம் நிறைந்தது.......

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்தான ஜெயவீர (தெற்கின் கலை இலக்கிய நண்பர்)**
(ஊடகவியலாளர். கலைஞர்.)

## சிவஜோதி : சகோதரத்துவத்தின் பாலம்

சிவஜோதி வடக்கைச் சேர்ந்தவர் ஆனால் அவர் நீண்டகாலம் வாழ்ந்து கல்வி கற்றது தெற்கில் தான். அவரின் நண்பர்களில் பெரும்பாலானோர் தெற்கைச் சேர்ந்தவர்கள். தெற்கில் எவ்வளவு காலம் வாழ்ந்து வந்தாலும் தான் வடக்கிற்கு சொந்தமானவர் என்று நினைத்திருப்பார். அதனால்தான் அவர் செய்து கொண்டிருந்த தொழில் மற்றும் சமூக தொடர்புகளையும் விட்டு விட்டு வடக்கிற்கே நகர்ந்து சென்றார். நான் சிவஜோதியைச் சந்தித்தது 25 வருடங்களுக்கு முன்னர். கொழும்பு நாடகம் மற்றும் இலக்கியச் சங்கத்தின் பிரபல உறுப்பினராக இருந்தமையினால் எமது நட்பு அங்கு ஆரம்பமானது. பின்பு நான் தேடிப் பார்த்ததில் அவர் வாழ்ந்து வந்தது பொரளை தபால் அலுவலகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லத்தில் என்பதை அறிந்து கொண்டேன். அந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் தமிழ் குடும்பம் ஒன்று வாழ்ந்து வருவதை அறிந்த பின்பு நான் ஆச்சரியப்பட்டேன். பணிவான நபரான தபால் அதிபர் இவரின் தந்தை என்பதை மேலதிகமாக கேட்டறிந்த போது தெரியவந்தது.

கடுமையான யுத்தம் காரணமாக நம்மைப் போலவே சிவஜோதி போன்ற தமிழர்களும் பயத்துடனேயே வாழ்ந்தார்கள். எவரோ ஒருவரின் யுத்தம் காரணமாக தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் நம்மைவிட அதிகமாக பயத்துடனேயே வாழ்ந்து வந்தார்கள் என்பதை பொதுவாகக் கூற முடியும். அவரின் முகத்திலும் இந்தப் பயம் இருந்ததை நான் உணர்ந்தேன். சிவஜோதியின் தோற்றம் அதிகமாக வெளிநாட்டவரை போன்று இருந்தது. அவரின் தோல் செந்நிறத்திலும் கேசம் பொன்னிறத்திலும் இருந்தது. சிங்களமும் கொஞ்சம் சிரமப்பட்டே பேசுவார். இதனால் தெற்கு சமூகம் அவரை சந்தேகத்தில் பார்த்திருக்கக்கூடும். இருப்பினும் அவர் தென் பகுதி சமூகத்தினரை வைராக்கிய உணர்வுடன் பார்க்கவில்லை. அவர் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களுடனும் சிங்கள நாடகக் கலைஞர்களுடனும் இணைந்து நிறைய நாடகத் தயாரிப்புக்களில் ஈடுபட்டார். ராஜினி திராணகமையின் கடைசி சகோதரியான பேராசிரியை சுமதி சிவமோகன் இயக்கிய நாகமண்டலம் (2000) மற்றும் விஜித்த குணரத்னவின் மொழிப்பெயர்ப்பான ஆரியவன்ச தர்மகே உருவாக்கிய யுத்தகளத்தில் ஒரு சவாரி என்ற நாடகத்தின் நினைவில் நிற்கும் பாத்திரமொன்றில் காட்சியளித்தார். அந்தக் காலக்கட்டத்தில் நிறைய தமிழ் நாடகங்களுடன் இணைந்திருந்த போதிலும், இந்த நாடகங்கள் இரண்டு நாடகங்களும் எனக்கு நன்றாகவே நினைவிருக்கிறது. எமது நட்பை பலப்படுத்தியது.

இலக்கிய மற்றும் நாடகக் கலையில் இருந்து விலகி அரசியலில் ஆர்வம் காட்டினார். தமிழ் அரசியல் முன்னணியான தேசிய கலை இலக்கியப் பேரவையில் அவர் பிரபல செயற்பாட்டாளராக இருந்தார். தீவிரமான அரசியல் முன்னுரிமைக்கான காரணம் அவரின் மனதில் உறங்கிய நிலையில் சமூகத்தில் சேவை செய்யும் நோக்கில் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். கலை இலக்கிய சமூகத்தில் இருந்து விலகியதுடன் சிவஜோதியுடனான எனது தொடர்பு தூரமாகியது. மீண்டும் அவர் சந்தித்தது வேறுபட்ட இடத்தில் வேறுபட்ட உலகத்தில்.

நான் ஊடக நிறுவனத்தின் ஆசிரியர் குழாம் உறுப்பினராக இருந்தமையால் அவர் அங்கு தமிழ்மொழி பத்திரிகை ஊடகவியலாளராக இருந்தார். நான் நீண்டகாலமாக பணிப்புரிந்து வந்தமையால் நான் அவருக்கு தொழில் ரீதியாகத் ஆலோசனைகளை வழங்கி வந்தேன். கடுமையான நபராக இல்லாதபடியால் அவர் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக என்னிடம் குறிப்பிடுவார். தான் கூடுதலாக ஆர்வம் காட்டும் இலக்கியத்துறை பிரிவுண்டு இருந்ததை ஒவ்வொரு முறையும் கவலையுடன் பேசினார். தான் முன்னெடுத்துச் செல்லும் கலை நடவடிக்கைகளை செய்துகொண்டு போகும்படியும் தொழிலையும் முன்னெடுத்துச் செல்லும்படியும் எனக்குத் தெரிவித்தார். இறுதியில் அவர் அந்நிறுவனத்தில் இருந்து விலகிச் செல்வதாக அறிவித்தார். அவ்வாறே அவர் கூறியவாறு எம்மிடம் இருந்து விலகிச் சென்றுவிட்டார். மீண்டும் எமது சந்திப்பு அழிந்து போய்விட்டது. மீண்டும் அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்தை கண்டது கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி. அன்றைய தினம் ஒரு போஸ்டரில் அவரின் உருவத்துடன் செய்தியைக் கண்ட எனக்கு கை விரல்கள் ஒரு நிமிடம் இயங்காமல் நின்றுவிட்டது. அந்தச் செய்தியை தொடர்ந்தும் தொடர்ந்தும் வாசித்தேன். கடைசியில் எனது இதயம் ஒரு நிமிடம் நின்றே விட்டது. அதில் சிவஜோதி யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்று விட்டதாகவும் அவரின் இறுதிக் கிரியைகள் முதல் நாள் யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் இடம்பெற்றதாகவும் எழுதப்பட்டிருந்து. சிவஜோதி வடக்கிற்கு பாரிய எதிர்பார்ப்புக்களுடன் பயணித்திருக்கலாம். ஆனால் அதில் எத்தனை எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட்டன என்பது அவருக்கு மட்டுமே தெரிந்திருக்கும். அவரின் திறமையை தெரிந்திருந்த ஒருவர் இருந்தால் அதில் அரைவாசியாவது அவரால் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கும் என்பது என்னால் நிச்சயமாகக் கூறமுடியும். வடக்கையும் - தெற்கையும் இணைக்கக் கூடிய பாலம் சிதைவடைந்து விட்டமை எமது துரதிஷ்டமாகும்.

(சிங்கள மொழியில் சமூகவலைத் தளத்தில் பிரசுரமான இக்கட்டுரையயை தமிழுக்கு மொழிப்பெயர்த்தவர் பிரியதர்சினி செல்லதுரை, இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம்)

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தான ஜெயவீர சிங்கள மொழியில் எழுதிய மூலப்பிரதி

"සිවජෝති"
බිඳී ගිය සහෝදරත්වයේ පාලම
==========================

සිවජෝති උතුරේ පදිංචිකරුවෙකි. එහෙත් ඔහු වැඩි කාලයක් ජීවත් වුයේ හා අධ්‍යාපනය ලැබුවේ දකුණේය. ඔහුගේ මිතුරු සමාජයෙන් වැඩි පිරිසක් අයත් වන්නට ඇත්තේ ද දකුණේ සමාජයට විය යුතුය.
දකුණේ කොතෙක් කාලයක් ජීවත් වුවද තමා අයත් වන්නේ උතුරට බව ඔහු සිතන්නට ඇත. තමන් කරමින් සිටි රැකියාව ද සියලු සමාජ සබඳතා අතහැර ඔහු සිය ගම් පියසට පිටත් වූයේ ඒ නිසා විය යුතුය.
මා මුල් වරට සිවජෝති හැඳින ගත්තේ මෙයට වසර 25කට පමණ පෙරදීය. එවකට ඔහු කොළඹ නාට්‍ය හා සාහිත්‍ය සමාජයේ ප්‍රබල සාමාජිකයකු වූ නිසා අපගේ මිත්‍රත්වය එහිදී ඇති වූවකි.
වංහුං විමසා බැලීමේ දී, ඔහු ජීවත් වන්නේ අප තැපැල් කාර්යාලයට අයත් නිල නිවාසයේ බව දැන ගත හැකි විය. එය අසා මම විමතියට පත් වූයේ එම නිල නිවෙසේ ද්‍රවිඩ පවුලක් ජීවත් වන බව අන්‍යයන් දැන නොසිටීම නිසාය. කාරුණික තැනැත්තකු වූ තැපැල් ස්ථානාධිපතිවරයා ඔහුගේ පියා බව අමතර කතාවලදී දැන ගතිමි.
ඒ අවදිය යුද්ධය දරුණුවට කෙරුණු  කාලය නිසා අප මෙන්ම සිවජෝතිලා ද ජීවත් වූයේ බියෙනි. කාගෙවත් යුද්ධයක් නිසා දකුණේ ජීවත් වන ද්‍රවිඩයන් ජීවත් වූයේ අපට ද වඩා බියෙන්ය යන්න පැවසීම වඩාත් සාධාරණය. මා එසේ පවසන්නේ ඔහුගේ මුහුණින් මා ඒ බිය දැක ඇති නිසාය.

සිවජෝතිගේ පෙනුම වඩාත් ගැලපුණේ විදේශිකයකුගේ පෙනුමටය. ඔහුගේ සම ඡවි වර්ණය ගත් අතර කොණ්ඩය තඹ පැහැ ගත්තේය. සිංහල ද කතා කළේ තරමක් අපහසු වෙනි. ඒ නිසා දකුණේ සමාජය ඔහු දෙස සැකයෙන් බලන්නට ඇත.

එහෙත් ඔහු දකුණේ සමාජ දෙස වෛරී හැඟීමෙන් බැලූ අයකු නොවේ. ඔහු ද්‍රවිඩ නාට්‍යකරුවන් සමඟ මෙන්ම සිංහල නාට්‍යකරුවන් සමඟ ද හරියට සම්බන්ධව නිර්මාණ කටයුතුවල යෙදුණේය.
රාජිණී තිරාණගමගේ ගේ බාල නැගණිය වන මහාචාර්ය සුමති සිවමෝහන් අධ්‍යක්ෂය කළ "නාගමණ්ඩලම්" නාට්‍ය (2000) හා විජිත ගුණරත්නගේ පරිවර්තනයක් ඇසුරින් ආරියවංශ ධම්මගේ කළ "යුද පිටියේ සවාරියක්" නාට්‍යවල ඔහු මතක හිටින රංගන දැක්විය. ඔහු ඒ අවදියේ බොහෝ දෙමළ නාට්‍යවලට සම්බන්ධ වුවද මට මතක මේ නාට්‍යවලට අපගේ ද ඥාතීත්වයක් තිබුණු නිසාය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පසුව ඔහු සාහිත්‍යයට හා නාට්‍ය කලාවන්ට අමතරව දේශපාලනය කෙරෙහි ද උනන්දුවක් දක්වනට විය. ඒ, වාමාංශික ද්‍රවිඩ දේශපාලන ප්‍රවණතාවක් වූ නව ප්‍රජාතන්ත්‍රවාදී පක්ෂය සමගය සමීප සබඳතාවක් ඇති ජාතික කලා සංසදය සමගය. ඔහු එහි ප්‍රබල ක්‍රියාකාරිකයකු විය.

නිවුණු චරිතයක් වන 'සිවා' රැඩිකල් දේශපාලන ප්‍රවණතාවකට ආකර්ෂණය වීම මා අවබෝධ කර ගත්තේ, ඔහුගේ හදවතේ නිදන්ගතව පැවැති සමූහයාට සේවය කිරීමේ අපේක්ෂාව අවදි වීමක් ලෙසය.
කලා සමාජයෙන් ඉවත් වීමත් සමග සිවජෝති සමග මගේ ඇසුර දුරසි විය. නැවතත් ඔහු හමුවන්නේ වෙනස්ම තැනක වෙනස් භූමිකා දෙකක් ලෙසිනා.
එවිට මා මාධ්‍ය ආයතනයක කර්තෘ මාණ්ඩලිකයකු වූ අතර ඔහු එහි සහෝදර දෙමළ පුවත්පතේ මාධ්‍යවේදියෙකි.
මා ඔහුට වඩා එහි තරමක් පැරැණි අයෙක් නිසා එහිදී කටයුතු කළයුතු ආකාරය ගැන යම් යම් උපදෙස් දුන්නෙමි. ගොරෝසු පුද්ගලයකු නොවූ ඔහු රැකියාවේ ඇති වන ගැටලු ගැන වරින්වර මා දැනුවත් කළේය. තමන් වඩාත් උනන්දුවක් දක්වන සාහිත්‍ය වැනි ක්ෂෙත්‍ර ඇසුරු කිරීමට ලැබෙන අංශය වෙනුවට උපකර්තෘ අංශයකට මාරුවක් ලැබීම ගැන ඔහු වරක් කනස්සලෙන් කතා කළේය.
තමන් කර ගෙන යන කලා කටයුතු එලෙසම කරගෙන යන ලෙසත් රැකියාව එහි පමණ දැන කරන ලෙසත් මම ඔහුට දැන්වීමි.
අවසානයේ දිනක ඔහු පැවසුවේ තමා ඉන්
ඉවත් වන බවය. දැන් වූ ලෙසම ඉවත්වූ බැවින් නැවත අප අතර හමුව මැකී ගියේය.
යළි මගේ නෙතට ඔහුගේ රුව ගැටෙන්නේ පසුගිය දෙසැ:31දාය. ආගන්තුකයකු පළ කළ එම පෝස්ටුවේ වූ ඔහුගේ රුව සහිත සටහන දැක මගේ අතැඟිලි මදක් නැවතිණි. එම ප්‍රවෘත්තිය දිගටම මම දිගටම කියවා ගෙන ගියෙමි. එය අවසන මගේ හදවත ද මොහොතකට නැවතිණ. එයින් කියවුණේ සිවජෝති යාපනයේ දී මියගොස් ඇති බවත් ඔහුගේ අවසන් කටයුතු පසුදා යාපනය ආසන්නයේ පිහිටි නියම්ගමක පැවැත්වෙන බවත්ය.
සිවජෝති යාපනයට සංක්‍රමණය වන්නට ඇත්තේ දහසක් බලාපොරොත්තු ඇතිව විය යුතුය. ඉන් ඔහුට ඉටුකරන්නට හැකි වුයේ කොපමණ ප්‍රමාණයක් ද යන්න දන්නේ ඔහු පමණි. ඔහුගේ හැකියාවන් දැන සිටි අයකු ලෙස මගේ විශ්වාසය වන්නේ එයින් අඩක් හෝ ඔහුට ඉටු කළ නොහැකි වූ බවය. අපගේ අවාසනාව වන්නේ උතුරත් - දකුණත් යාකළ හැකි පාලමක් බිඳී යැමය.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Prasanne Perera

### Jothi ever loving lost friend!

Jothi was an intimate friend since I was studying at Open University of (Sri Lanka) in Late 1990's. He was an IT specialist and several years of experience in the industry.

Jothi had helped me in several ways. He helped me in registering my personnel company and advised me on how to develop the business too. Also, I can say that he was there with me in my good and bad times of my life. Sometimes Jothi advised me as a father, brother and at times like a friend too. That is the reason I cannot believe his early leaving this world.

Jothi's death was a shock to me and I cannot forget Jothi's beloved wife Gowry. Whenever I visit his residence, Gowry never forgets to give me a cup of tea before I leave their residence. Until now, I cannot say that Jothi has passed away as I still feel that he is alive.

Despite Jothi being an IT specialist and possess several years of experience, his expertise was under-utilised and his talents wasn't being recognised by none which was the biggest mistake or failure of this society. In addition to that, Jothi is a talented Journalist and has exhibited his several talents in his career in journalism.

Finally, I wish Jothi to Rest in Peace (RIP) according to my religious belief. However, I can say that I lost a *good* frien in my life and I believe I will never ever get such a friend like Jothi with of kind attitude and words cannot express the vacuum you've left.

Thanking You.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி. சிவசேகரம் (கலை இலக்கிய நண்பர்)

(பேராசிரியர்)

### பழக இனிய நண்பர் சிவஜோதி

நண்பர் சிவஜோதியை நான் மத்திய கொழும்பு பேரங்காடியின் மூன்றாம் மாடியிலிருந்த வசந்தம் புத்தக நிலையத்தில் 1997இல் முதல் முறையாகச் சந்தித்தேன். அவரும் (காலஞ்சென்ற) மாவை வரோதயனுமே கொழும்பில் தேசியகலை இலக்கியப் பேரவையின் தூண்கள் என அவரை அறிமுகப்படுத்திய நண்பர் தேவராஜா பெருமையுடன் குறிப்பிட்டார்.

அவ்வேளை சிவஜோதியுடன் விரிவாகப் பேச அவகாசமிருக்கவில்லை. பேரவை நிகழ்ச்சிகள் கொஞ்சங் கொஞ்சமாகச் சூடுபிடித்தபோதே அவருடன் பேசும் வாய்ப்புகள் கிடைத்தன. நாடகத் துறையில் மிக அக்கறை காட்டிய சிவஜோதி தன்னை விளம்பரப்படுத்துமாறு பணியாற்றுவார். 2000ம் ஆண்டு நண்பர் தேவராஜாவின் பெருமுயற்சியால் இயலுமான தேசியகலை இலக்கியப் பேரவையின் சிறுவர் நாடக விழா ஆயத்தப் பணிகளின் போது சிவஜோதியின் நிர்வாக, நாடகப் பயிற்றல் ஆற்றல்களை நான் முழுமையாகக் கண்டேன். 'பாட்டுங் கூத்தும்' நாடக நூலின் ஐந்து நாடகங்களையும் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஒரேநாளிற் சிறப்பாக நடத்தியதில் அவருடைய பங்கு பெரிது. அவ் ஐந்தில் நான்கைப் பயிற்றச் சில வாரங்களாகக் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் விடாது நடந்த ஒத்திகைகளில் நாள் தவறாது பங்கேற்றுச் சிறாரின் மனநிலையை விளங்கி அதற்கேற்ப அவர்களுடன் இணைந்து நட்புடன் இயங்கி ஊக்குவித்துப் பயிற்சியளித்தார்.

ஒரு நிகழ்வை இங்கு குறிப்பிடலாம். ஒரு அப்பத்தைப் பங்கிடச் சண்டையிட்ட இரு பூனைகளின் வழக்கைக் குரங்கு தீர்த்த கதையை "அயலார் தீர்ப்பு" நாடகம் கூறியது. மூலத்திற் கதைமாந்தர் மூவரே. எனினும், நாடகச் சுவடி பல சிறார்கள் பூனைகளாயுங் குரங்குகளாயும் வர இடமளித்தது. ஒரு சிறுவன் இத்தகைய துணைப்பாத்திரத்தில் ஒரு பூனையாகவரக் கடும் முயற்சியெடுத்துப் பூனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்து அவைபோலவே நடக்கப் பயின்றான். நாடகப் பயிற்சியைக் கண்காணித்த மூத்த நாடகக் கலைஞர் பூனை ஒப்பனையைவிடப் பூனை முகமூடி சிறப்பாயிருக்கும் எனத் தீர்மானித்து நாடகம் தொடங்கச் சிலநேரம் முன்பு எல்லாப் பூனைக் கதாபாத்திரங்களையும் முகமூடி அணியப்பணித்தார். முற்கூறிய சிறுவனுக்கு அதுபெரும் ஏமாற்றமாயிற்று. தன் ஒத்திகை யாவும் பாழாவதை நினைத்துத் துன்பப்பட்டான். அதைக் கவனித்த சிவஜோதி, அவனுக்கு ஆறுதல் சொல்லி நாடக ஏற்பாட்டாளர்களுடன் நயமாகப் பேசிப் பிரச்சனையைச் சுமுகமாகத் தீர்த்தார். மூத்தநாடகக் கலைஞர் அப்பையன் முகமூடியின்றித் தோன்றுவதை ஏற்றுப் பெருந்தன்மையுடன் அவனுக்குச் சிறப்பாக ஒப்பனையும் செய்தார். நாடகத்தின் போது நாடகத்தைக் குழப்பாமல் மேடையில் உலாவிய முகமூடியில்லாத பூனையின் சேட்டைகள் நாடகத்துக்குக் களைசேர்த்தன. இது சிவஜோதியின் சமூக ஆற்றல் எனும் பானைச் சோற்றுக்குப் பதங் கூறும் ஒரு பருக்கை.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் நூல் வெளியீட்டு நிகழ்வுகளில் அவரைத் தவறாது காணலாம். அவருடைய நோக்கில் எப்பணியும் அவரின் தகைமைக்குச் சிறிதல்ல. மனமுவந்து ஏற்கும் எதையும் செவ்வனே செய்வது அவரின் சிறப்பு. விரிவான வாசிப்புப் பழக்கமுடையவராயினும் அவர் எழுதுவது குறைவு. எனினும் பிறரை எப்போதும் ஊக்குவிப்பார்.

தனது சுய முயற்சியால் திறந்த பல்கலைக்கழகத்தில் கணினித் துறையில் தகுதிபெற்றார். அக் காலத்தில் அவர் சில சிரமங்கட்கு உட்பட்டபோது என்னுடன் அவைபற்றி உரையாடுவார். ஆனால் மனந் தளரமாட்டார்.

அவர் கணினிச் சேவையைத் தனது துறையாகத் தெரிந்தபின் அவருடைய நட்பு கணனி பற்றி அதிகம் அறியாத எனக்கும் பிரேமளாவுக்கும் பேருதவியானது. அற்பப் பிரச்சனை எனினும் கூடியவிரைவில் வந்து ஆகவேண்டியதைக் கவனிப்பார். பின்னர் வேலைப் பளுமிகுந்து தனக்குவர இயலாதவேளை தன்னுடன் பணியாற்றும் நம்பகமான ஒருவரை அனுப்புவார். இன்றுவரை என்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினிகள் எனக்கு ‘நட்பாயிருக்க’ அவரும் அவர் ஏற்படுத்திய தொடர்புகளுமே காரணம்.

தினகரனிற் சிலகாலம் பணியாற்றிய அவருக்கு மொழிபெயர்ப்புப் பணிகளில் நாட்டமிருந்தது. கிளிநொச்சிக்குப் பெயர்ந்த பின்பும் ஐயங்களைத் தெளிவிக்க என்னுடன் கலந்துரையாடுவார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தை இன்றைய தமிழ்ச் சமூகப் பண்பாட்டுத் தேவைகட்கு உகந்த அமைப்பாக்க அவர் எடுத்த முயற்சிகள் இந் நூற்றாண்டின் முதற் சில ஆண்டுகளில் நற்பயனளித்தன. ஆனாற் சிலரின் அகங்காரம் தமிழ்ச் சங்க நலனுக்கு ஊறாகத் தொடங்கியதும் அவர் பண்பாக அதினின்று ஒதுங்கினார். அவருக்கும் அவர் விரும்பி மணமுடித்த கௌரிக்கும் இருந்த உறவு முன்னுதாரணமானது. நூலகராகவும் பின்னர் பிறதுறைகளிலும் கௌரியின் தொழில் முன்னேற்றத்தை அவர் மிக அக்கறையுடன் ஆதரித்தார். அவர்களின் உறவு இறுதிவரை சமமான நட்பாக இருந்தது.

சிவஜோதி கடும் நோய்க்குட்பட்ட தகவல் எங்களுக்கு அதிர்ச்சியூட்டியது. அவருடைய பிரிவை ஏற்க இன்னமுங் கடினமாயுள்ளது. அவர் விட்டுச் சென்ற இடைவெளியை அவருடைய இனிய நினைவுகளால் நிரப்பமுயல்வோமாக.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. கா. செந்திவேல் (சமூக செயற்பாட்டு நண்பர்)**

(ஆசிரியர், 'புதியநீதி' மாத இதழ், கொழும்பு)

## நண்பர் சிவஜோதியின் நினைவு என்றும் வாழும்

நாம் வாழ்ந்துவரும் இன்றைய சமூகக்கட்டமைப்பானது பிரச்சினைகளும் நெருக்கடிகளும் உக்கிரமடைந்து வரும் ஒரு சூழலிலேயே வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் ஒட்டுமொத்தச் சமூகம் பற்றியும் அனைத்து மக்கள் பற்றியும் குறிப்பாகக் குரலற்ற மக்களின் வாழ்நிலை பற்றியும் அக்கறையாக இருந்து வருவோர் சிலராகவே உள்ளனர். அத்தகையவர்கள் நம்மிடையே இருந்து மறையும் போது அதிலும் காலத்திற்கு முன்பு சாவடையும் போது ஏற்படும் இழப்பின் வலி தாங்க முடியாத ஒன்றாகி விடுகிறது.

அந்த வகையில் நண்பர் வை.சிவஜோதியின் நோய்வாய்ப்பட்ட இழப்பு பெருவலியை ஏற்படுத்திக்கொண்டது. இதே போன்று தான் சில வருடங்களுக்கு முன்பு நண்பர் மாவை வரோதயனைக் கொடுநோயால் இழந்தபோதும் பெரு வேதனையை அனுபவித்தோம். இருவருமே தேசிய கலை இலக்கிய பேரவையைத் தமது தோள்களில் சுமந்து வழி நடந்தவர்களில் முக்கியமானவர்கள்.

நண்பர் சிவஜோதி எங்களோடு மிக நெருக்கமாக இருந்து வந்த ஒருவராவர். சமூக அக்கறையோடு முற்போக்கான அரசியல் சமூகக் கருத்துக்களை உள்வாங்கி நின்றவர். அவற்றினடியாக மக்கள் இலக்கியத்தைத் தேசிய கலை இலக்கியப் பேரவை ஊடே முன்னெடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வந்தவர். நண்பர் சிவஜோதி நல்ல பழக்கங்களைக் கொண்ட நேர்மையான மனிதராக சிறந்த பண்பாளராக, சமூக அக்கறையாளராக மற்றையோருக்கு உதவும் பரந்த மனப்பாங்குடையவராக வாழ்ந்து வந்தமை அவருக்குரிய அழியா அடையாளங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இளமைத்தோற்றமும் புன்சிரிப்பும் அமைதியான பேச்சும் நட்புரிமையுடன் பழகும் பண்பும் எல்லோரையும் ஈர்க்கக் கூடியதாகும். அதே வேளை தவறானவற்றை எதிர்ப்பதிலும் பிழையானவற்றை நிராகரிப்பதிலும் அவர் உறுதியானவராக இருந்தும் வந்தார். இத்தகைய பண்புகளே அவருடனான நட்பின் அடிப்படைகளாக அமைந்திருந்தன.

நண்பர் சிவஜோதியின் மறைவு அவரது வாழ்க்கைத் துணைவி கௌரிக்கும் பெற்றோருக்கும் உறவினர் நண்பர்களுக்கும் பெருந்துயரமாகும். அத்துயரைப் பலமாக மாற்றிக்கொண்டு முன் செல்வோம். நண்பர் சிவஜோதியின் நினைவுகள் என்றும் நம்முடன் வாழும்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோ. தேவராஜா (வழிகாட்டிய ஆசான்)

(பதில் நீதிபதி, தலைவர், தேசிய கலை இலக்கிய பேரவை)

### எங்கள் சிவஜோதி மக்கள் வணங்கும் தெய்வமானார்

01

எங்கள் வெள்ளைக்காரன் சிவஜோதி. நேர்மை, உண்மை, துணிவு, தியாகம், பக்தி, விசுவாசம், அர்ப்பணிப்பு, அச்சமின்மை, சுமைதாங்கி என அத்தனைக்கும் அர்த்தம் தருவான் எங்கள் சிவஜோதி.

ஊர் பேர் இல்லாதவன். எங்கும் இருப்பான். எவருடனும் இனிப்பான். எடுத்த பொறுப்பைச் சுமப்பான். எது நேரினும் இடர்கண்டு ஒதுங்கான். முகம் சுழியான். அதிகாரம், ஆதிக்கத்துக்கு அடிபணியான். தலை சாயான்.

பக்திப் பேரியக்கத்தில் புகழ் பூத்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் குருபூசை மடத்திலே குழந்தையிலேயிருந்து குதூகலித்து வளர்ந்தவன். மறுமலர்ச்சி எழுத்தாளர் வரதர், பொன் முத்துக்குமார், சொக்கன் ஆகியோரின் அன்புக்கும் உறவுக்கும் ஆளானவன்.

அறிஞர்களை நேசித்தவர். அன்பு பராட்டியவர். பேராசிரியர் க.கைலாசபதி மீது பற்றுக்கொண்டவர். பேராசிரியர் சி.சிவசேகரம், பேராசிரியர் சி.தில்லைநாதன், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் சி.மௌனகுரு, கொழும்புத் தமிழ்ச்சங்கச் சித்தர் தமிழுவேள் க.இ.கந்தசுவாமி ஆசிரியர் ஆகிய பல் திற அறிஞர்களுடன் பழகியவர். நட்போடு நடை பயின்றவர்.

பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், நாடகக் கலைஞர்கள் எனப் பலருடனும் பழகுபவர். பிரான்சிஸ்ஜெனம், க.சிதம்பரநாதன், பராக்கிரம நிரியெல்ல, அ.தாசீசியஸ், விஜித்சிங், சோக்கல்லோ கண்முகம், சக்திதரன், மாவை வரோதயன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வைப் பொன்னையன், தம்பு சிவா, இ.தம்பையா, புலவர் த.கனகரத்தினம், உமாமகேஸ்வரன், சிவாசுப்பிரமணியம், சிவஜோதிலிங்கம், தில்லைச்சிவன், டொக்டர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன், உதயகுமார், பெரிய தம்பிப்பிள்ளை விஜயரத்தினம், கோபாலகிருஷ்ணன், மேமன் கவி, திக்வல்லை கமால், மதுசூதனன், கவிஞர் சடாகோபன், இரா.சடகோபன், தேசியகலை இலக்கிய பேரவையின் இளைஞர்கள், கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயற்பாட்டாளர்கள் கோபிநாத், மீநிலங்கோ, தெய்வேந்திரம், க.மு.தர்மராசா, ஆழ்வாப்பிள்ளை, கந்தசாமி, ஜனமகன், அபிலாஷா, நந்தன், ஜெயப்பிரகாஷ், கொழும்புக் கலைஞர்கள் சிதம்பரம், ஜெயந்தி, கலைச்செல்வன் மற்றும் பலர் எண்ணிலடங்கார்.

பூகோள மயத்தில் ஒரு துருவப் பல்தேசியக் கம்பனிகள் நாடுகளின் சுதந்திர தேசிய எல்லைகளைக் கடந்து அத்துமீறி நுழைந்து நாடுகளையும் மானுடரையும் நுகர்வுப் பண்பாட்டுச் சீரழிவில் சிக்க வைத்து மூலதன இலாப வெறியின் நுகத்தடியில் மக்களை றோபோக்களாக்கி நம்முன்னோர் நமக்களித்த அருஞ்செல்வங்களான வரலாற்றில் நாம் பெற்ற விழுமியங்களை, பெறுமானங்களை, சிறப்புகளை இழந்து தவிக்கும் யுத்தக் கடலில் நாம் அனைவரும் எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், எதிர்காலக் குழந்தைகள் என எல்லோருமுட்பட இந்த மூலதனக் கும்பலின் கூட்டத்தின் ஓட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமா?

ஊடக மாபியாக்களின் ஒட்டுண்ணிகளாக மனித சமுதாயம் கெட்டுச் சீரழிந்து நாற வேண்டுமா?

எங்கள் மூளையைச் சுத்தப்படுத்துவோம். எங்கள் கரங்களைப் பலப்படுத்துவோம். எங்கள் கால்களை ஆழமாக எங்கள் மண்ணில் வேரூன்றச் செய்வோம். எம்மைப் பொறுத்த வரையில் எங்களுடன் கூடி வாழ்ந்த ஜோதி மரணித்துச் சாம்பலாகிப் போன பின்னர் அவர் மீள உயிர்த்துள்ளார். பீனிக்ஸ் பறவையாக எங்களுடன் தூது வருவான். நாம் தமிழர், நம் செந்தமிழ் மூலம் புலம் பெயர் தேசம் எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபித்துள்ளோம். நம் உறவுகள் அனைத்தும் சந்தித்துச் சங்கமிக்கும் சாதனை காண்போம்.

சிவஜோதி எனும் சீராளன் சிறப்புகள் எவை? என்றும் எம்நெஞ்சில் இடம் பெற்ற நீங்கா நினைவுகள் எவை? அவர் சாதனைகள் யாவை? அவர் சாதனைகளின் தொடர்ச்சியை எவ்வாறு நாம் எல்லோரும் சேர்ந்து காவுதல் தகும்? அவர் விட்ட இடத்திலிருந்து அவர் தந்த தடியைப்பிடித்து அஞ்சல் ஓட்டத்தில் எமது பண்பாட்டுப் பேரணியை எவ்வாறு வெற்றியின் இலக்கை நோக்கி நாம் ஓடுவது?

சிவஜோதியின் சிறப்புக்களை எவையென வகைப்படுத்தினால்,
நல்லுறவுகளை நல்ல நண்பர்களை நாடி தோழமை வலயம் ஒன்றைத் தனக்கென வகுத்துக்கொண்டமை.
அன்றாடம் இயங்கிக் கொண்டிருப்பதில் மகிழ்ச்சி காணுதல்,

சரிக்கும் பிழைக்கும், உண்மைக்கும் பொய்க்கும், நன்மைக்கும் தீமைக்கும் நடுவில் நின்று மதில் மேல் பூனையாக சமரசம் செய்து விட்டுக்கொடுக்காமல் சரியின் பக்கம் உண்மையின் பக்கம் நன்மையின் பக்கம் தன்னை ஆட்படுத்திக் கொண்டமை.

அறிஞர்கள், ஆற்றல் மிக்கவர்களின் பக்கத்தில் தன்னை அணுக்கத் தொண்டராக இணைத்துக் கொண்டமை.

எடுத்த பொறுப்பை முடிக்கும் வரை 'கருமமே கண்ணாயினார், கண்துஞ்சார், பசி நோக்கார்' என்பதுவாகி ஓயாமல், உறங்காமல் உழைப்பது.

பொதுநலப் பண்பாளராக மிளிர்ந்தமை. "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" எனத் துணிந்தமை.

சுயவிமர்சனம் விமர்சனத்துக்குத் தாங்காமல் வெளிப்படையாகத் திறந்த மனதுடன் உரையாடுவதும் தனது கருத்துக்களைத் தயங்காமல் வெளிப்படுத்துவதும், தன்னிடத்தில் தேடி வருபவர்களிடம் மாத்திரம் உறவு பூணாமல் உதவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானோரைத் தேடி அறிந்து ஆராய்ந்து அவர்களின் புறநிலை நடப்பியலில் உறவுகளைப் பேணுவதும் தொடர்புகளைப் பலப்படுத்துவதும்.

துயரப்படுவோர், அவமானப்படுத்தப்படுவோர், தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பபடுவோர், ஓரங்கட்டப்படுவோர் யாரெனத் தேடி அவர்கள் பற்றித் தானே துயரப்பட்டு அவர்களுக்காக என்ன செய்யலாம் எனத் தனது நண்பர்களுடன் அளவளாவுவதும் தனக்கேற்பட்ட துயரம் போல சுமைதாங்கியாய் துளிர்ப்பதுவும்.

தனித்துச் செயற்படாமல் தன்னோடு சிலரையும் இணைத்துக்கொண்டு ஓர் ஸ்தாபனம் போல் ஒன்று கூடிச் செயற்படுவதில் ஆர்வம் காட்டிக் கடினமாக உழைப்பதுவும் தலை தாழ்த்திச் சேவை செய்வதும்.

- "ஒருவர் தவறிழைத்து விட்டார் என்பது தெளிவாகத் தெரிந்தும், நீண்ட காலம் பழகியவர், சக ஊரவர், சக மாணவர், நெருங்கிய நண்பர், அன்பிற்குரியவர், பழைய சக ஊழியர் அல்லது பழைய கீழ்ப்பணியாளர் என்ற காரணத்தால் அவருடன் கோட்பாட்டு ரீதியில் வாதிடுவதற்கு மாறாக, சமாதானத்துக்காகவும் நட்புக்காகவும் விஷயங்களை நழுவவிடுவது அல்லது சுற்றிலும் நெருக்கம் நீடிக்க வேண்டி முழுமையான தீர்வு காண்பதற்கு பதில் லேசாகத் தொட்டு விடுவது இதன் விளைவாக ஸ்தாபனத்துக்கும் தனிநபருக்கும் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. இது தாராள வாதத்தின் முதலாவது வகை:-

  ஹ"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
  தான்சாம் துயரம் தரும்" (திருக்குறள்) - (792)

- முகத்துக்கு முகம் நேரடியாக யோசனைகளை முன்வைப்பது கூட்டுச் செயற்பாட்டை வலியுறுத்துவது.
- தன்னைப் பாதிக்குமெனினும் தன்னைப் பாதுகாப்பதற்காகத் தவறுகளைக் கண்ட போதே சுட்டிக்காட்டிப் போராடுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கூட்டு முடிவுக்குப் பணிந்து ஒழுகுதல், சுயத்தை ஒடுக்கிப் பொதுமையை பேணுதல். கூட்டுச்செயற்பாட்டின் கட்டுப்பாடுகளை ஏற்று நடத்தல்.
- பழிவாங்கும் பாங்கு, சொந்தக் குரோதங்களை கொட்டித் தீர்க்காமல் தனிநபர் தாக்குதலின்றி ஐக்கியத்திற்காக அல்லது முன்னேற்றத்துக்காக வேலையைச் சிறப்பாக செய்வதற்காக விவாதிப்பதும் போராடுவதும் இயல்பாக உடையவர்.
- தவறான கருத்தெனத் தெளியின் அவற்றை மறுப்பது. அது பற்றி விவாதிப்பது. அதில் சகிப்புத்தன்மை காட்டாது எதிர்ப்பது.
- மிதிச்ச புல்லுச் சாகாத மனிதர் போல் மக்களிடம் பாராமுகமாகவோ அவர்களின் துன்பங்களில் கவலை கொள்ளாமலோ அதற்கான மக்கள் மத்தியில் பரிசீலனையும் விசாரணைகளும் நடத்தாமலோ பேசாமடந்தையாகவோ அமையாதடங்காமல் உணர்வைத் தூண்டி துலங்கச் செய்வது அவரது வினைவகை.
- எவரேனும் மக்கள் நலனுக்கு தீங்கு விளையக்கண்டால் ஆத்திரமடைவது, அதனைத் தடுக்க முனைவது, அது பற்றி நியாயம் கூறி வாதிடுவது, தொடர்ந்து அப்படிச் செய்ய அனுமதியாது பணிய மறுப்பது.
- சுயநலம் தெரியார். தன் சுகநலம் என்பது பொது நலம் எனப் புரிந்தவர். எனவே திட்டத்துடன் செயற்படுவது. இலக்கு நோக்கி இயங்குவது. முழு மனதுடன் வேலை செய்வது. அக்கறையின்மையை அருகிருக்க அனுமதியாமை.
- தான் எடுத்த பணி சிறிதோ பெரிதோ எனப் பாராமல் அவ்வேலையில் அக்கறையுடன் செயற்படுவதும் அது பற்றிய படிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துவதும்.
- தனது தவறுகளைத் திருத்த எப்போதும் தயங்காமையும் அதற்கேற்பத் தன்னைத் தயாராக்கித் தகவமைத்துக் கொள்வதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02

'சிவஜோதி' என்றதும் என்முன்னே திருவள்ளுவர், விபுலானந்தர், கண்ணதாசன், மாக்ஸிம் கார்க்கி ஆகியோரின் தரிசனம் கிடைத்துப் பரவசமடைகின்றேன்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு - (72)

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு - (73)

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு - (74)

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு - (75)

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு - (80)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு - (953)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் - (954)

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு - (960)

அருள்சேர்ந்த நெஞ்சி னார்க்கு இல்லை
இருள்சேர்ந்த இன்னாஉலகம் புகல் - (243)

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு - (783)

மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்.
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போலத் தன்னைத் தந்து தியாகியாகலாம்
உருகி ஓடும் மெழுகு போல ஒளியை வீசலாம்
-மனிதன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்து உள்ளம் மலர்களாகலாம்
யாருக்கென்று அழுத போதும் தலைவனாகலாம்
மனம் மனம் அது கோயிலாகலாம்
-மனிதன்-

மனம் இருந்தால் பறவை கூட்டில் மான்கள் வாழலாம்
வழி இருந்தால் கடுகுக்குள்ளே மலையை காணலாம்
துணிந்து விட்டால் தலையில் எந்த சுமையும் தாங்கலாம்
குணம் குணம் அது கோயில் ஆகலாம்
-மனிதன்-
- கவிஞர் கண்ணதாசன் -

"வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்தமலர் எதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"
- விபுலாநந்த அடிகள் -

"மனிதன்! எத்தனை கம்பீரமாக இச்சொல் ஒலிக்கிறது! எனக்கு மனிதனை விடச்சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் மட்டும் தான் எல்லாப் பொருள்களுக்கும் எல்லாக் கருத்துக்களுக்கும் படைப்பாளி அற்புதம் செய்வோன் அவனே. இயற்கைச் சக்திகளின் எதிர்காலத் தலைவன் அவனே. இவ்வுலகின் அதியற்புத அழகுப் பொருட்கள் எல்லாம் அவனது உழைப்பால் ஆனவை. திறன் மிக்க மனிதக் கரங்களால் ஆனவை. நான் மனிதனுக்குத் தலை வணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை" இவ்வாறு இலக்கியம் பற்றிக்கூறும் போது மனிதனுடைய சிறப்பைக் கூறுகிறார் மாக்ஸிம் கார்க்கி.

புத்தகங்கள் செய்துள்ள பெரும்பணி மனிதனிடத்தில் எனக்கு நம்பிக்கையை உண்டாக்கியது.

- மாக்ஸிம் கார்க்கி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

சிவஜோதி கொழும்பு வந்ததும் கொழும்பு - 12 இல் அமைந்திருந்த முற்போக்குத் தமிழ் கலை இலக்கிய புத்தக நிலையமாக 1990களில் இயங்கிய சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் புக்ஸ் புத்தக நிலையத்திற்கு ஓர் வாடிக்கையாளனாக தொடர்பேற்படுத்தினார்.

அவரின் ஆழ்மன கலை இலக்கியத் தேடலின் விளைவாக தேசியகலை இலக்கியப் பேரவையுடன் தன்னை இணைத்துக் கொண்டு, கொழும்புப் பிரதேசப் பேரவையின் முக்கியமான இயங்கு தளத் தொண்டனாக மாவை வரோதயனுடன் இணைந்தும் ஏனையவர்களுடன் இணைந்தும் மிக உற்சாகமாகச் செயற்பட்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகி தமிழுவேள் க.இ. கந்தசாமி ஆசிரியருடன் இணைந்து பல தமிழ்ப்பணிகள் ஆற்றினார்.

சிலப்பதிகாரம், திருக்குறள், தொல்காப்பியம் நூல்கள் பற்றிய மரபிலக்கிய நூல்கள் பற்றிய ஆய்வரங்குகளிலும் தொண்டராக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில், செயற்பட்டார். மேலும் தேசியகலை இலக்கியப் பேரவையின் கருத்தாடல்கள், நூல் வெளியீடுகள், நூல் அறிமுகம், நூல் நயம், நாடக அரங்கேற்றங்கள், கூடி விளையாடு பாப்பா சிறு பிள்ளைகளுடன் கலை இலக்கிய வகுப்புகள் எனப் பல்துறையிலும் தன் ஆற்றல்களை வெளிப்படுத்தினார்.

நாடகங்களில் விஜித்சிங் அவர்களுடனும் ஜீவா, சக்திதரன், சரிநிகர் நண்பர்கள் பலருடனும் அ.ரவி, சடாகோபன், சுதா, கோபி, ஜனமகன், நந்தன், மீநிலங்கோ, கலீல், சடா, பவன் எனப்பல இளைஞர்களுடனும் இணைந்து செயற்பட்டார். ஜெயபாலரட்ணம், மதுசூதனன், குமரன், உதயன் மாஸ்ரர், திக்குவல்லை கமால் இன்னும் சகல தமிழ்ச் சங்க நண்பர்களுடனும் அன்பாகவும் ஆர்வமாகவும் பழகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் மாதாந்த ஈழத்து நூல்கள் வெளியீடுகளிலும் கொழும்பில் இல்லங்களில் நடந்த புத்தகப் பண்பாட்டு நூல் அறிமுக நிகழ்வுகளிலும் தொடர்ந்து ஏழு நாட்கள் இடம்பெற்ற புத்தகப் பண்பாட்டு விழாவிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். வருடந் தோறும் பேராசிரியர் க.கைலாசபதி நினைவாக இடம்பெற்ற ஆய்வரங்க நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதிலும் ஊக்கமுடன் செயற்பட்டார்.

'விபவி'யினாலும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றிலும் நீர்வை பொன்னையன், செல்வி திருச்சந்திரன் ஆகியோருடனும் பழகினார். பல நிகழ்வுகளிலும் பங்குபற்றினார்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் புத்தகப் பண்பாட்டு நிகழ்வுகள் மட்டுமன்றி அரங்கப் பண்பாட்டு நிகழ்வுகளிலும் முன்னின்று நடத்தும் முதல்வர்களில் ஒருவராக செயற்பட்டார். கொழும்பில் நாடகர் விஜித்சிங்கின் களச் செயற்பாட்டிலும் நாடக அரங்க அளிக்கைகளிலும் ஈடுபட்டு புத்தாக்க அரங்க நிகழ்வுகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

நாடக மேடையேற்றங்களில் கொழும்பு அரங்குகளில் ஒளியமைப்பு பற்றி டவர் அரங்குடன் தொடர்பு கொண்டு பயிற்சி பெற்றுத் தன் ஆர்வத்தை ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கமும் தேசியகலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடாத்திய சி.சிவசேகரம், பிரமிள் ஆகியோரின் 'பாட்டும் கூத்தும்' என்ற சிறுவர் நாடக அரங்க நிகழ்வுக்கான 60க்கு மேற்பட்ட பிள்ளைகளுடன் கலந்து உறவாடி பணியாற்றி மேடையேற்றி மகிழ்ந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக பீட மாணவர்களுக்காக பிரான்சிஸ் ஜெனத்துடன் இணைந்து பேராசிரியர் சி. சிவசேகரத்தின் ஈழக்கூத்துகளை இணைத்த 'கிட்கிந்தை அல்லது அயலவர்கள் வருகை' என்ற நாடகத்தை கொழும்புத் தமிழ் பல்கலைக் கழக அரங்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு கதிரேசன் மண்டபத்திலும் மேடையேற்றத்துக்காக நெறியாள்கை செய்தார்.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'மனத்தவம்' நாடகத்தைக் கொழும்பில் சரஸ்வதி மண்டபம், இராமகிருஷ்ண மண்டபம், கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மேடையேற்றத்திற்காகவும் 'எந்தையும் தாயும்' நாடக அரங்கேற்றத்திற்காகவும் ஒளிப் பதிவுட்பட ஒத்திகைகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டு அன்றாடம் இயங்கினார்.

1997-களில் நாடக அரங்கக் கல்லூரி, இலண்டன் அ.தாசீசியஸ் 'களரி' நாடககுழுவினர் சென்னை பேராசிரியர் அரசு, மங்கை ஆகியோரின் நாடகக் குழு ஆகியன இணைந்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் 13 தடவைகள் மேடையேற்றிய 'எந்தையும் தாயும்' 'புதியதொருவீடு, பொறுத்தது போதும் ஆகிய நாடக மேடையேற்றங்களிலும் கருத்தரங்குகளிலும் உற்சாகமிக்க இளைஞனாக உறவாடினார். "நாராய்...நாராய்.. நாடகப் பயணம்" என்ற மகுடத்தில் இடம்பெற்ற இப்பயணம் இலங்கை - இந்திய தமிழ் மக்களின் உறவில் ஏற்பட்ட விரிசலை விலக்கி உறவை மீள் நிரப்புவதில் பங்காற்றியது வரலாற்றுச் சிறப்புமிக்கது.

"நாராய் நாராய் நாடகப் பயணச்" சந்திப்புகளில் இரவிரவாக நடைபெற்ற கலந்துரையாடல்களைப் பொறுமையுடன் குறிப்புகள் எடுத்துத் தொகுத்து இலங்கை திரும்பியதும் அதனைக் கட்டுரையாக எழுதிப் பத்திரிகைகளில் வெளிவரச் செய்தார்.

'நாராய் நாராய் நாடகப் பயணத்தில்' ஒரு மாணவனாக இருந்து இணைந்த போதும் எந்தப் போக்குவரத்துச் செலவும் பெறாமலே இணைந்து கொண்டமை பற்றி அப்போது நாடகர் அ.தாசீசியஸ் கூறிப் புளகாங்கிதமடைவார். மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் மல்லிகை சஞ்சிகையில் முகப்பு அட்டையில் 'நாராய் நாராய் நாடகப் பயணப்' படத்தை வெளியிட்டுப் பெருமைப் படுத்தியிருந்தார்.

இந்நாடகப் பயணத்தின் தொடர்ச்சியாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.சி. வானொலிச் சேவையின் செயற்பாட்டாளராக ஊதியமெதுவுமின்றி கலாலக்ஷ்மியுடன் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்கும் சென்று செய்திகள் சேகரித்து அக்கால யுத்த சூழலிலும் ஊடகத்தின் வெற்றிக்கு அரும்பணி புரிந்தார்.

இந் பிரபல நாடகரும் 'சுபமங்களா' ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் அவர்கள் இலங்கை வந்த போது அவரது வரவேற்பு நிகழ்வுகளில் தேசியகலை இலக்கியப் பேரவையின் கொழும்புச் செயற்பாடுகளில் முன்னின்றுழைத்தார். தோழர்கள் இ.கா.சூடாமணி, கலாநிதி ந.இரவீந்திரன் ஆகியோருடனும் இணைந்து பணியாற்றினார்.

கொழும்பில் விக்கிரமபாகு கருணாரட்ண, இ.தம்பையா எனப் பலரும் போட்டியிட்ட புதிய இடதுசாரி முன்னணியின் மாகாணசபைத் தேர்தலுக்காக வெள்ளவத்தையில் பிரச்சாரங்களில் தன்னை ஈடுபடுத்தினார். தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தத்துக்கெதிராக சிங்கள முற்போக்குச் சக்திகள் நடாத்திய போராட்டங்களிலும் பங்குபற்றினார்.

ஐ.பி.சி.சார்பில் ஆறுதிருமுருகன் அவர்களுடனும் இன்னும் பலருடனும் பலபேட்டிகளை எடுத்து ஒலிபரப்பினார். ஐபி.சிக்காக வானொலி நாடகங்களை எங்கள் வீட்டில் அமைந்த கலையகத்தில் ஒலிப்பதிவு செய்தும் இலண்டனுக்கு அனுப்பும் முயற்சிகளில் கணினியில் பதிந்தும் பரிமாற்றங்கள் செய்தார்.

2004-ம் ஆண்டு டிசம்பரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணியில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இளைஞர்கள் பலரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்து மக்கள், பிள்ளைகளுடன் பல நாட்களாகச் சென்று முழுநேரமாய்ப் பணியாற்றினார் ஜோதி. 2010-ல் உள்நாட்டு யுத்தம் முடிந்த பின் நாம் வெவ்வேறு திசைகளில் பிரிந்தோம். நாம் யாழ்ப்பாணம் வந்தோம். வந்த பின்னர் தான் நாம் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்திருந்தாலும் யாழ்ப்பாணம் என்றால் என்ன என்பது எமக்குப் புரிய ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஜோதியின் உள்ளத்தை யாழ்ப்பாணம் நெருப்பாகச் சுட்டது. அவர் வாழ்ந்த பண்பாட்டுப் பின்புலத்தில் அவரின் உறவுகள் அவருக்கு விசனத்தை ஏற்படுத்தின. அவருக்கு சகமனிதரை மதிக்க மறுக்கும் யாழ் உறவுகளின் ஊதாரித்தனம் அவரை ஒதுக்கி வைத்தது. கோபத்துக்குள்ளாகினார். அவரைக் கிளிநொச்சிக்கு ஓட வைத்தது. கிளிநொச்சி புகலிடமாகியது. கிளிநொச்சி அவரை ஏற்றுக் கொண்டது. அவருக்குரிய உயர்ந்த இடத்தை கிளிநொச்சி வழங்கியது. எல்லா நிகழ்வுகளிலும் எப்போதும் தான் முன்னுக்கு வரமுனையாது, பின்னின்று முகமலர்ச்சியுடன் முழு மனதுடன் செயலாற்றும் சிவஜோதியை கொழும்போ, யாழ்ப்பாணமோ, நாமோ அவருக்குரிய முன்னுரிமையை வழங்கத் தவறிவிட்ட பெருங்குறையை இப்போது சுயவிமர்சனமாக தலை தாழ்த்தி அவரிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

மாண்டவர்களின் கல்லறைகளுக்குப் பூச்சுப் பூசாமல் விளக்குக் கொழுத்தி ஆரவாரம் செய்யாமல், புகழ் தேடாமல், யுத்த வடுக்களின் சுமைகளோடு உயிரோடு மனிதர்களாக வாழும் வன்னி மக்களிடம், கிளிநொச்சி மாந்தரிடம் அன்பு பூண்டு - பாசம் பரிவுடன் - பணியாற்றச் சென்று உன்னையே நீ தற்கொடையாக்கி துன்பப்பட்ட ஆழ்மனவடுக் கொண்ட - யுத்த வடுக்களைச் சுமந்த கிளிநொச்சியில் நீ சன்னதம் கொண்டு - மாணவர் மையக் கல்வியில் உன்னையே நீ உரமாக்கி, அவர்கள் மனமறிந்து இரவு பகல் பாராமல், உறவு, சுற்றம் தேடாமல் மெழுகாக உருகி மாணவர்களின் வீடு தேடி ஓடி - அவர்களின் வாழ்வுக் களம் நாடி- இன்ப துன்பங்களில் இணைந்து - இறையருளாளனாய் ஜோதியில் கலந்தாய் எங்கள் பெருமகனே சிவஜோதி. பிரபஞ்ச வியாபக உண்மையில் சங்கமிப்போம்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ பாதி நான் பாதி...

காலங்கள் உருண்டோடியது. அன்று அறியாப் பருவத்தில் கேட்ட பாடலின் வரிகளை சிவஜோதி முழுமையாக புரிந்துகொண்ட காலம் வந்தது. "விழியே கதையெழுது. கண்ணீரில் எழுதாதே. மஞ்சள்வானம் தென்றல் சாட்சி உனக்காகவே நான் வாழ்கிறேன்....". தமிழ்ச் சங்கத்தில் சிவஜோதி ஈடுபாடு காட்டியது தமிழுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல அங்கிருந்த தமிழிச்சி தன் கதையை விழியால் எழுத வேண்டும் என்பதற்காக என்பதை அறிய கனகாலம் எடுக்கவில்லை. யாழ்ப்பாணத்தின் வறட்சிக்கும் மலையகத்தின் குளிர்ச்சிக்கும் இருந்த தூரமும் இடைவெளியும் சிவஜோதிக்கு பொருட்டாக இருக்கவில்லை. தனது முடிவில் மிகஉறுதியாகவும் தெளிவாகவும் நின்று அனைவரது சம்மதத்தையும் பெற்றான். ஹம்சகௌரியின் பெற்றோரும் தங்கள் மகள்மீது எதிர்காலத்தில் எவ்வித குற்றங்களும் வரக்கூடாது என்பதை உறுதிப்படுத்தி இரு மனமொத்த திருமண ஒப்பந்தம் இனிதே நிகழ்ந்தது.

ஆனால் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே உடன்பட்ட ஒப்பந்தம் உடன்படாமலேயே இழுபறியில் இருந்தது. ஆனால் அதற்கு முன்னமே தொலைக்காட்சிகளில் நேரடியான ஒளிபரப்பில் இருக்கும் போதே அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டது. ஆயுதப் போராட்டங்கள் அனைத்துமே விடுதலைப் போராட்டங்கள் உட்பட பயங்கரவாதப் போராட்டமாக அர்த்தப்படுத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டமும் பயங்கரவாதப் போராட்டமானது. யாழ்ப்பாணத்து இளைஞர்கள் வெளிநாடு செல்ல போராட்டத்திற்கு போராளிகளை சளைக்காமல் வழங்கிவந்த மட்டக்களப்பு தலைமை – கருணா புலிகளுக்கு சவாலானார். ஈழக் கனவு ஈடாடிப் போனது. தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபாடு காட்டாததால் புலிக்குள் ஒரு சுனாமி எழுந்தது. அதேயாண்டில் தான் சுனாமி என்ற சொல் இலங்கையில் பேரழிவுடன் அறிமுகமானது. பனையேறி வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாக யுத்தத்தால் துவண்டு போன மக்களை ஆழிப்பேரலையும் ஒரு கைபார்த்தது.

இந்தப் புறச்சூழல் அழிவுகள் சிவஜோதியையும் கௌரியையும் மேலும் மேலும் நெருக்கமாக்கியது. வாழ்க்கை நிரந்தரமற்றது என்பதை சிவஜோதிக்கு கோடிட்டு காட்டியது. மனிதத்துவத்தின்பால் மேலும் நாட்டம் ஏற்பட்டது. சிவஜோதியின் திருமண பந்தம் மனமொத்த வாழ்வாகத் தொடர்ந்தது. நீ பாதி நான் பாதி... என்ற நிலையில் இருந்து சிவஜோதியோ ஹம்சகௌரியோ நீங்கியது கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய திருமண பந்தம் இனிதே நிறைவேறினாலும் மனம் நிறைந்திருந்த அளவுக்கு பொருள்வளம் நிறையவில்லை. மிகுந்த பொருளாதாரக் கஷ்டங்கள் அவர்களைத் துரத்தியது. யாரிடமும் கைநீட்டி பணம் வாங்கவோ அல்லது மாதாந்த கடனில் வாழவோ விரும்பாமல் வண்டிச்சக்கரத்தை அன்பையும் புரிந்துணர்வையும் கொண்டு நகர்த்தினர்.

மணலாற்றில் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் திருப்புவதை விளையாட்டாக நிறுத்திவிட அது விபரீதமாக வளர்ந்தது. அவர்கள் யாரை தேர்தலில் வெல்ல வைத்தார்களோ அவர்களிடமே பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது. வன்னி யுத்தம் கால அட்டவணை போட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. பொன்னாலையில் தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டில் ஆரம்பித் போராட்டம் 2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த துப்பாக்கி வேட்டுடன் முடிவுக்கு வந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள் விலைமதிக்க முடியாதவை. கொஸோவோவில் அமெரிக்க நேசநாடுகள் தரையிறங்கியது போல் வன்னியிலும் நிகழும் என்று சில முட்டாள் கணக்குகள் போடப்பட்டது. எல்லாமே பொய்த்துப் போனது. தமிழீழவிடுதலைப் போராட்டம் தோற்றுப் போனது என்ற உண்மையைச் சொல்வது கஷ்டமாக இருந்தாலும் சொல்லாமல் அதனைக் கடந்து செல்ல முடியாது. தோற்றுப் போன போராட்டத்தை வாழ வைக்க தமிழ் அரசியல்வாதிகள் என்னென்னவோ எல்லாம் செய்கின்றனர்.

ஆனால் தோற்றுப்போன காதல் தான் வாழும் என்றொரு கருத்துருவாக்கம் நம்மிடையே உள்ளது. ஆனால் சிவஜோதியும் கௌரியும் 'தோற்றுப் போன காதல் தான் வாழும்' என்பதை பொய்யாக்கி திருமணத்தின் பின்னும் காதல் வாழும் என்பதை நிரூபித்தனர். ஜோதிக்கு கௌரியும் கௌரிக்கு ஜோதியுமாக பத்தொன்பது ஆண்டுகால வாழ்க்கை மிக மகிழ்ச்சியுடன் நகர்ந்தது. சிவஜோதி தானிருக்கின்ற போதே கௌரிக்கு ஒரு மாளிகையையும் கட்டிக்கொடுத்து அதில் அவரை குடியிருத்தி விட்டுச்சென்றுள்ளார். கௌரியை பல நல்ல உள்ளங்களின் மத்தியில் விட்டு தன் பணியைத் தொடரச்சொல்லிச் சென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹம்சகௌரி சிவஜோதி (மனைவி)**

(பணிப்பாளர், லிற்றில் எய்ட், கிளிநொச்சி)

## ஜோதியுடன் கலந்த தனித்துவமான ஜோதி

எனது கணவர் ஜோதிக்கு எத்தனையோ நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் ஜோதி எனக்கு கணவர் மட்டுமல்ல மிகச் சிறந்த நல்ல நண்பரே. நாம் நண்பர்களிடம் மட்டுமே எல்லா விடயங்களையும் மனம் திறந்து பகிர்ந்து கொள்ள முடியும். சின்ன சின்ன விடயங்கள் என்றாலும் அக்கறையோடு காதுகொடுத்து கேட்கும் நல்ல பண்பு அவரிடம் இருந்தது. சமூக அக்கறையுடன் செயற்படும் பலர் குடும்பத்தை கவனிக்காது இருப்பார்கள். அந்த வகையில் இவர் குடும்பத்தையும் சமூக சேவையையும் சமமாக கொண்டு சென்றவர்.

ஜோதி! ஒரு மனிதனின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்னும் கொள்கையுடன் வாழ்ந்தவர். எல்லோரிடமும் மிகவும் அன்பும் பணிவும் இருந்தாலும் தனது கொள்கைக்கு முரணான கருத்துக்களில் தளர்வுகளை எச்சந்தர்ப்பத்திலும் மேற்கொண்டதில்லை. பல அரசியல் கட்சிகளுடன் நெருக்கமான உறவை வைத்திருந்த போதிலும் எவ்விதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட விரும்பியதில்லை. அரசியலில் இருந்துதான் மக்கள் சேவையை மேற்கொள்ளலாம் என்பதில் ஜோதிக்கு எப்போதும் கருத்து வேறுபாடு இருந்தது. அதேபோல் இடதுசாரி நண்பர்களின் தொடர்புகள் நிறையவே ஜோதிக்கு இருந்தாலும் கடவுள் மறுப்புக் கொள்கையை தனது வாழ்க்கையில் இவர் பின்பற்றவில்லை. ஆனால் இடதுசாரி கொள்கையைப் பின்பற்றினார். இறைவழிபாட்டில் இறுதிவரையும் மிகவும் நம்பிக்கை உள்ளவராகக் காணப்பட்டார். புகைத்தல், மது அருந்துவதை முற்று முழுதாகவே வெறுத்தார். பத்திரிகைத்துறையில் இருந்தபோதும் தனது தனித்தன்மையை பேணுவதில் மிகவும் அக்கறையாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருவரும் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. கொழும்பில் வாழும்போது வீட்டு வாடகை பெரும் நெருக்கடியைத் தந்தது. இரண்டு பேரும் வேலை செய்து உழைத்த போதிலும் பொருளாதார பிரச்சினையில் இருந்து மீண்டு வரமுடியாத நிலையை எதிர்நோக்கிய போதிலும் யாரிடமும் கடன் கேட்கக்கூடாது என்ற வைராக்கியத்துடன் நாம் வாழ்ந்தோம். இவ்வாறு இடர்படும் போதெல்லாம் இவ்வுலக வாழ்க்கையில் இருந்து விடுபடுவதே இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வாகும் என்று என்னால் முன்வைக்கப்படும் போதெல்லாம் இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை மேற்கொள்ளத் தேவையில்லை. இதில் இருந்து எம்மால் மீண்டு வர முடியும் என்ற தைரியத்தை எப்போதும் எனக்குத் தந்தார். நாம் இச்சமூகத்தில் ஒரு நல்ல இடத்திற்கு வர முடியும் என்ற தன்னம்பிக்கையை என்னுள் விதைத்தவர். அதேபோல் எமக்கென்ற ஒரு வீட்டையும் பொருளாதார ரீதியில் எமக்கான ஒரு நிலையையும் அடைவதில் வெற்றியும் கண்டார். வாழ்க்கையை நாம் முழுமையாக வாழத் தொடங்கும் போது காலனவன் அவர் வாழ்க்கையை முடித்தது ஏன் எனத் தெரியவில்லை.

அவரின் மனைவியாக சிவஜோதி ஹம்சகௌரி என்ற உறவுக்கு சாட்சி நானும் ஜோதியும் மட்டுமே. எமது பத்தொன்பதாவது வருட இல்லற வாழ்க்கையை நெருங்கும் இவ்வேளையில் ஜோதி இன்று என்னுடன் இல்லை என்ற உண்மை மிகவும் வேதனையாக உள்ளது. ஜோதி இந்த உலகத்தில் என்னுடன் வாழ்ந்த காலங்கள் சொல்லில் வடிக்க முடியாத பசுமையான நினைவுகளே. ஒரு சிற்பி தான் செதுக்கும் சிற்பத்தை எவ்வாறு அழகு பார்த்து செதுக்குவானோ அவ்வாறே என்னை அவர் இந்த உலகத்திற்கு உருவாக்கி விட்டுச் சென்றுள்ளார். எனது ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் இருப்பது ஜோதி மட்டும்தான். திருமணத்திற்கு பின்னரே எனது தொழிற் கல்வியான நூலகவியலும், இதழியல் கற்கை நெறியையும் நிறைவு செய்தேன். அதற்கு முற்றுமுழுதான காரணமாக இருந்தவர் எனது கணவர் சிவஜோதியே. தொடர்ந்து கல்வியை தொடர வேண்டும் என்ற ஊக்கத்தையும் உந்துசக்தியையும் தந்துகொண்டுதான் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை மிகவும் வரவேற்றார். தனது கொள்கை எதுவோ அதனை வாழ்க்கையிலும் பின்பற்றினார். எனது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் தொழில் ரீதியான செயற்பாடுகளிலும் முதல் விமர்சகரும் ஆலோசகரும் தோளோடு தோள் நின்றவரும் அவரே. இது என்னையும் ஜோதியையும் சார்ந்த எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு ஆணின் பின்னும் ஒரு பெண் இருப்பாள் ஆனால் எனது ஒவ்வொரு அசைவிலும் வளர்ச்சியிலும் பின்நின்று உந்துதல் தந்தவர் எனது கணவரே. உலக II மகளிர் குழுமத்தின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளராக இருக்குமாறு கேட்டுக்கொண்ட போது அதனை நான் ஏற்க மறுத்தேன். அப்போது ஜோதியே எனக்கு அறிவுரைகளும் உற்சாகமும் கொடுத்து அதன் செயற்பாடுகளை கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்க என்னுடன் இணைந்து உலக II மகளிர் குழுமத்தினை கிளிநொச்சி மாவட்டத்தில் செம்மையாக முன்கொண்டு செல்லக் காரணமாக இருந்தார்.

ஒரு மனைவியின் வளர்ச்சியையும் அவளின் திறமையையும் பாராட்டும் கணவனாகவே அவர் இருந்தார். எமது தமிழ் சமூக பண்பாடுகளில் ஊறிய சாதாரண ஒரு கணவனுக்கு நிச்சயமாக இவ்வளவு பரந்த மனப்பான்மையும் மனப் பக்குவமும் இருக்க முடியாது. அவரின் முழுமையான காதல் 19 வருடங்களுக்கு முன்பு எவ்வாறு இருந்ததோ அதேபோல் இறுதி நிமிடம் வரை இருந்தது. வாழ்க்கையில் எல்லாவற்றையும் கடந்து செல்ல வேண்டியவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருந்தபோதும் கடைசி வரை எனது வாழ்க்கையில் என்னுடன் பயணம் செய்வார் என நினைத்திருந்தேன். எனக்கிருந்த ஒரு உறவை இன்று இழந்து நிற்பதில் உள்ள வலி மரணத்தையும் விடவும் மிகவும் கொடூரமானது.

நான் நடந்து செல்லும் பாதையில்
பூக்களை இரசிக்க நினைத்தேன்
அது எவ்வளவு முட்டாள் தனம்
நான் நடந்து செல்லும் பாதையில்
உள்ள பூக்கள் கூட என்
பாதம் பட்டதும் கருகிவிடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானாகத் தேடிய உன்
உறவு மட்டும் நிலைக்கும்
என நான் கண்ட கனவும்
இன்று கானல் நீராகியதே.... ஜோதி.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வே. மகாலிங்கம் (மாமா)

### அவசரம் ஏனோ....

அன்பின் வடிவமே சிவஜோதி
அவதிப்பட்டோர் விரும்பும்
அருள் ஜோதி
ஆருத்ரா காண
அவ்வளவு அவசரமோ
உன் உணர்வோடு
கலந்துவிட்ட
உயிரை ஏன்
பிரிந்துசென்றாய்
காலமெல்லாம்
உன்னை நம்பி
கைப்பிடித்து வந்தவளை
காலனைக் கண்டவுடன்
கைவிட்டுச்சென்றாயோ
ஆயிரம் உறவுகள்
அவருக்கிருந்து
என்ன பயன்
ஆசையாய்நோக்கும்
உன் அன்பு முகம்
இனி இல்லையே
காரிருள் சூழ்ந்ததே
காதல் மழையிலா வாழ்வில்
மருமகனாய் வந்து சேர்ந்தாய்
மகனாக அன்பு செய்தாய்
நல்ல பல கதைகள் பேசி
நண்பர் போல் நாமிருந்தோமே
நட்டாற்றில் விட்டுவிட்டு
நழுவிவிட்டாய் எம்மை விட்டு
காலங்கள் உள்ளவரை
காலன் என்னைக் காணும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களுக்குள்
நீ இருப்பாய்
மறவேனே உன் அன்பை.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வே. குமாரவேல் (மாமா)

### குடும்ப தீபம்

கோவில் தெய்வம் போல்
குடும்பத்தில் ஒளியானாய்..!
உறவினர் உள்ளமதில்
உயர்வாய் இடம் பிடித்தாய்...!
மாமனார் உள்ளத்தில்
மதித்திடும் நண்பனானாய்...!
மாமியாரை மனேஜரென்று
மகிழ்ச்சியாய் விளித்திடுவாய்...!
மாமியோ மழலை நீயென
மகிழ்ந்து புகழ்ந்திடுவாள்...!
இல்லறம் என்பதனை
நல்லறமாய் கண்டாய் நீ
மச்சானும் மச்சாளும்
மதித்திடும் மனிதனானாய்..!
அறிவு வழிகாட்டி
அணைத்தாய் குழந்தைகளை..!
அன்பும் பண்புமே
அத்தனை உள்ளமும் விதைத்தாய்...!
எமக்கு செல்லமும் நீயானாய்
எல்லா செல்வமும் நீயானாய்...!
குடும்பத்தில் நிறைவாக
குடும்ப ஜோதியே நீயானாய்...!
சுற்றத்தார் எல்லாம் உனை
சொந்தம் கொள்ள ஆசைப்பட்டார்..!
மாமா எனும் உன் அழைப்போ
மந்திரமாய் என்றும் என் காதில்...!
வேர் விட்டு வளர்ந்தாய்
விருட்சமாவாய் என்றிருந்தேன்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்த்தி விட்டான் இறைவன் உனை
வெடித்திட எம் இதயங்கள்...!
இன்னொரு பிறவி உண்டென்றால்
எமக்கு ஆசான் நீயாவாய்...!

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிற்றில் எய்டும் கிளிநொச்சியும்

Butterfly Theory - வண்ணத்துப் பூச்சிக் கொள்கை முக்கியத்துவமற்ற சிறிய விடயங்கள் கூட பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம். சர்வசாதாரண விடயங்கள் அடுத்தடுத்த மாற்றங்களினூடாக உலக இயக்கத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றன. குறிப்பிட்ட அந்த வெளவால் ஊஹான் மாநிலத்தில் குறிப்பிட்ட அந்த இடத்தில் பறந்திருக்காவிட்டால் இந்த கொரோனா வைரஸ் பரவி இருக்காது என்று வைத்துக்கொள்ளலாம். அப்படித்தான் பல நிகழ்வுகள் நம்மைச் சுற்றி நிகழ்ந்து விடுகின்றன. அல்லது நிகழாமல் இருந்துவிடுகின்றன.

2017இல் லிற்றில் எய்ட் இற்கு கிளிநொச்சியிலும் லண்டனிலும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. என்னைப் பொறுத்தவரை லிற்றில் எய்ட் என் குழந்தை. அதனை என்ன விலை கொடுத்தும் வெற்றிகரமாக இயக்க வேண்டிய நிலையில் நான் இருந்தேன். ஆனால் என்னுடைய அகச்சூழலும், புறச்சூழலும் அதற்கு இடம்தரவில்லை. எனது மூளையின் ஒரு மூலையில் சிவஜோதி கணினியுடன் சம்பந்தப்பட்டவன் என்ற பதிவு மட்டும் இருந்தது. கிட்டத்தட்ட 1990களின் பின் மூவொன்பது ஆண்டுகள் சிவஜோதியுடன் தொடர்பே இருக்கவில்லை. சிவஜோதியைத் தேடி தொடர்புகொண்டு லிற்றில் எய்ட் அமைப்பை பொறுப்பெடுக்கும்படி கேட்டேன். சிவஜோதியைத் தவிர அப்பொறுப்பிற்கு நியமிக்க வேறு யாரையும் எனக்குத் தெரியாது. ஒரு நண்பனை அப்பொறுப்பில் நியமிப்பது சரியா, தவறா என்ற கேள்வியும் என்மனதில் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலான கேள்வி ஒன்றும் இருந்தது. இதற்கு சிவஜோதி சம்மதிப்பானா? சிவஜோதியுடைய மனைவி யார் என்பதுகூட எனக்குத் தெரியாது. அவர் சம்மதிப்பாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் சிவஜோதி யோசிப்பதற்குக் கூட நேரம் எடுக்கவில்லை. தனக்கும் அப்படி ஒரு சமூகம்சார்ந்த வேலையில் ஈடுபடுவது தான் விருப்பம் என்றான். சிவஜோதி கிளிநொச்சியில் வாழ்ந்தால் தான் லிற்றில் எய்ட் இல் பணிபுரிய இயலும் என்ற போது சிவஜோதி தனக்கு யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டமைப்பில் இருந்த அதிருப்தியை வெளிப்படுத்தினான். மேலும் கொழும்பில் கௌரி செய்த வேலையையும் விட்டுவிட்டுத்தான் அவர்கள் கிளிநொச்சி வந்தனர். நான் என்னை சிவஜோதிக்கோ அல்லது சிவஜோதி தன்னை எனக்கோ நியாயப்படுத்த எந்தத் தேவையும் இருக்கவில்லை. எமது பதின்ம வயதில் போடப்பட்ட அந்த நட்பின் அத்திவாரம் மிகப்பலமாக இருந்தபடியால் நம்பிக்கையீனம் என்பது துளியும் இருக்கவில்லை.

சிவஜோதியுடைய அனுபவம், திறமை, ஆளுமை லிற்றில் எய்ட் இன் எதிர்கால வளர்ச்சிக்கு மிக அவசியம் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். சிவஜோதி என்னிடம் கேட்ட ஒரே விடயம் தனக்கு லிற்றில் எய்ட் சார்ந்து முடிவெடுக்கும் உரிமை இருக்க வேண்டும் என்பது. அந்த உரிமையை வழங்குவதில் எனக்கு எந்தத் தடையும் இருக்கவில்லை. பொறுப்பான ஆசனங்களில் உள்ள பொறுப்பானவர்களின் கைகளில் அதிகாரம் வழங்கப்படுவது மிகவும் அவசியம். அந்த வகையில் சிவஜோதி லிற்றில் எய்ட் இன் ஒரு சொத்து என்றால் அது மிகையல்ல.

கிளிநொச்சி மண்ணுக்கும் சிவஜோதிக்குமான தொடர்பு 2017இல் தான் ஆரம்பித்தது. இந்தக் குறுகிய காலத்தில் சிவஜோதி லிற்றில் எய்ட் ஐ கிளிநொச்சியின் ஒரு தொடர்பாடல் புள்ளியாக, மையப் புள்ளியாக மாற்றி இருக்கின்றான். அதற்கு இங்குள்ள பதிவுகளே சாட்சியம்.

சிவஜோதிக்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான தொடர்பு லிற்றில் எய்ட் மட்டுமல்ல. மலையகத்தைச் சேர்ந்த கௌரியின் குடும்பத்தினர் புலம்பெயர்ந்து எண்பதுகள் முதல் வாழ்ந்தது கிளிநொச்சியிலேயே. அந்த வகையில் கிளிநொச்சி சிவஜோதிக்கு பெண் கொடுத்த மண்ணும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிமர்த்தனா கணேசன்**
(மாணவி, லிட்டில் எயிட் உறுப்பினர்)

## மனதகலா மனிதத்தின் மறு உருவம்

மனிதராகப் பிறக்கின்ற ஒவ்வொரு உயிரும் மனிதராக வாழ்ந்து மடிதல் என்பது சாத்தியப்படாத இப் பூமியில் மனிதராக பிறந்து மனிதராகவே எம்மைவிட்டுப் பிரிந்திருக்க ஒருமானுடமாக இவ்விடத்தில் பதிவு செய்தால் மிகையில்லை. உண்மையில் சிவஜோதி ஆசிரியரை என் குரு என்று சொல்வதில் நான் எப்போதும் பெருமைகொள்வேன் ஏனெனில் நான் மனிதம் கற்ற பேராளுமை. ஒவ்வொரு உயிருக்கும் இருக்கிற உணர்வுகளை ஆசைகளை கனவுகளை ஆளுமைகளை மதிக்கிற செவிசாய்க்கிற ஒருமானுடப் பண்புமிகுந்தவர் என் ஆசான். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வாசகத்தின் வழியே எந்தவித இன மத கட்சி சாதி வேற்றுமைகளைக் காட்டாத சக மனிதரை தன் உறவாகவே கருதி வாழ்ந்து காட்டியவர். "ஆக்கம் அதனினூ உங் கில்லை உயிர்க்கு" என்ற பொய்யாமொழிக்கு சிறந்த உதாரண புருஷராக விளங்கியவர். கடந்து வந்த பாதைகளில் எத்தனையோ அனுபவங்களும் அறிவும் அவரை முழுமையான மனிதராக ஆக்கியிருந்தாலும். அந்த அடக்கம் என்ற அறமும் அவரை செதுக்கியே எம் கண்முன் நடமாடவைத்தது. மாணவர்களுடன் அனுபவங்களையும் அறிவுரைகளையும் தனது வாழ்வின் சம்பவங்களாக ஒருகதையின் பாணியில் சொல்லி அந்த படிப்பினைகளை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தும் அவருடைய வழிகாட்டல் பாங்கு அனைவரையும் கவர்கிற அவருடைய சொற்களுக்கு செவிசாய்க்கிற மனிதர்களாக எம்மை ஒருநொடியில் மாற்றிவிடக் கூடியதன்மை வாய்ந்தது.

எப்போதும் வியந்துபோய் நான் பார்த்த விடயம் என்னவென்றால் எந்தவித தொடர்பும் இல்லாத கிளிநொச்சி மண்ணை தேர்ந்தெடுத்து சேவையாற்ற வந்த அவரால் எந்த சந்தர்ப்பத்திலும் பிரிவினை காட்டாது சுயநலம் கருதாது இறுதிவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே இலட்சியத்தோடு சேவையாற்ற முடிந்தது எவ்வாறு என்பது தான். வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருமுறை உதவி செய்ய சந்தர்ப்பம் கிடைத்தபோது பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட மக்களுக்குத் தேவை இருப்பதாக தகவல் கிடைத்தபோது எந்தவித சிரமமும் பார்க்காது அதற்காக முன்வந்தார். புகழ்ச்சியை விரும்பிய மனிதர்கள் மத்தியில் இருப்பதால் எமக்கும் கரைச்சிக்குள்ளேயே உதவிசெய்தால் நன்றாக இருக்கும் எல்லோருக்கும் தெரியவரும் எமது நிறுவனமும் விளம்பரப்படுத்தப்படும் என்ற மனோநிலையில் இருக்க அவர் உண்மையாக கஷ்டப்படும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எந்தவித பிரிவினையுமின்றி - மனிதர்களை மனிதர்களாக மட்டுமே பார்க்கிற ஒரு மனநிலையில் அந்த உதவித் திட்டத்தை திருப்தியாக செய்து முடிக்க வழிகாட்டியாகவிருந்தவர். கல்வியை ஆயுதமாக்கல் தான் ஊழிக் காலத்தை வெல்வதற்காக வழிவகுக்கும் என்றநோக்கில் பயணப்பட்டார். சமூகத்தின் தேவைகளை நிறைவேற்ற கல்வியை வாகனமாக்கியமையே அவரின் வெற்றியாக நான் பார்க்கிறேன்.

அவர் கதைக்கின்ற விடயங்களைக் கூர்ந்து கவனிக்கின்ற மனிதர்களுக்கு புரியும் ஒவ்வொன்றும் மனதில் கிளர்ச்சி உண்டாகிற ஒருபுரட்சிக்கு வழி கோலக் கூடிய சிந்தனைகள். அவர் அவ்வாறு விதைத்த கருத்துக்களை மிகவும் இலகுவாக அவரது பாணியிலேயே சொல்லிவிட்டுப் போகிறவராக நான் அவரை அவதானித்திருக்கிறேன். லிட்டில் எயிட் திறன் விருத்திமையம் திறன்களை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதற்கு சமூகமட்டத்தில் அந்த மாணவர்களுக்கு இருக்கின்ற தடைகளை கண்டறிவதன் மூலம் சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையில் சற்றும் விலகியவராக அவரது அடிவைப்புக்கள் இருந்திருக்கவில்லை எமது நிறுவனத்திற்கு வரும் மாணவர்கள் அனைவரையும் அனைவரது குடும்பச் சூழல் சார்ந்து அறிந்து வைத்திருக்கும் பண்புமிகையாக இருந்தது. அதனால் அனைத்து குடும்பங்களின் உறுப்பினராகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் இன்றுவரை. மாணவர் மையக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்ற கோட்பாட்டுக்கு அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கும் நிறுவனமாக மாற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார் அவ்வாறு மாணவர்கள் தங்களுடைய கற்பனைகளை அறிவை பிரயோகிக்கக் கூடிய இடமாக லிட்டிஎயிட் மாறவேண்டும் அந்தத் திறமைகளை சகமாணவர்களோடு பகிர்ந்துகொள்ளக் கூடிய களத்தினையும் நாம் எமது நிர்வாகத்தினால் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று ஒரு எண்ணம் எப்போதும் ஆசிரியருடைய மனதில் இருந்தது அதை பல தடவைகள் என்னுடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.

தூர நோக்கான பல்வேறு சிந்தைகளை மாணவர்கள் மத்தியில் விதைத்துவிட்டுப் போயிருக்கிறார் அவருடைய எண்ணங்களை சிரமேற்றி எமது திறன்விருத்திமையத்தைக் களமாகக் கொண்டு அனைத்து மாணவர்களும் பயணிக்கவேண்டும் அதுதான் ஆசிரியருக்குத் நாம் செய்யும் புகழாரமாக நிச்சயமாக இருக்கும். இன்னும் ஆசிரியரிடம் இருந்து கற்றிருக்க வேண்டிய அனுபவங்கள் நிறைய இருந்தும் அதற்கானசந்தர்ப்பம் இயற்கையால் நமக்கு மறுக்கப்பட்டது மிகப்பெரும் வேதனை. எத்தனை சகாப்தம் ஆனாலும் வெற்றிடமாகவே இருக்கப் போகிற ஆளுமையின் இழப்பு யாராலும் ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே இருக்கும். சிவஜோதி ஆசான் எம்மைவிட்டுப் பிரிந்த அந்ததருணம் நான் என் விழிநீருடன் சேர்ந்து உதிர்த்ததவரிகள் இவை..............

"இப்பகலை போர்வையிட்ட கும்மிருட்டிலும்
விட்டில்களாய் உமைச்சூழ்வோம்
உன் கருவிழி ஒளிமட்டும் போதும்.
ஒரு முறை மறு முறை உறவாடமீளீரோ! ஆசானே!"

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. குபேந்தினி (மகளான மாணவி)**

(மாவட்ட பணிப்பாளர், பொறியியளாலர் கூட்டுத்தாபனம், முல்லைத்தீவு)

## எம் இமயம் இன்று எம்மோடு இல்லை.

சிவஜோதி சேரும் நானும் என்ற இக்கதையில் எதுவும் பொய்கள் இல்லை. சரியாக 4 ஆண்டுகளுக்கு முன் எனக்கான அடையாளமே இல்லை. கணினி கற்போம் என்று லிட்டில் எயிட் திறன் விருத்தி மையத்துக்கு சென்றேன். அங்கே நான் பார்த்து வியந்த அற்புத மனிதர் திருவாளர் வைத்தீஸ்வரன் சிவஜோதி ஆசிரியர் அவர்களின் நட்பு கிட்டியது.

நாளுக்கு நாள் விரிவடைந்த நம் நட்பில் நான் தையல் வகுப்பையும் கணினி காட்வெயார் வகுப்பையும் தெரிவு செய்தேன். காட்வெயார் வகுப்பின் ஆசிரியர் ஜோதி சேர் தான். ஒழுக்கம், நேர்மை, கடமை உணர்வு, நேர முகாமைத்துவம், விசுவாசம், விளக்கும் திறன், கற்றல் உத்தி யாவும் நான் ஜோதி சேரிடம் இருந்து பெற்றவை தான்.

வலிகள் நிறைந்தோடிய என் வாழ்க்கைப் பயணத்தில் கரம் கொடுத்து கரை சேர்த்த பெருமை அவரையே சாரும். ஏதோ வெள்ளை காரன் போல் தோற்றம் கொண்டவர் அனைத்து விடயங்களிலும் வெள்ளையாகவே நடந்தார் என்பது திண்மம். வகுப்பில் நம் அலப்பறை என்பது வார்த்தைகளால் அடங்காது ஆனால் என்றுமே கோபம் கொண்டு எம்மை பேசியதே இல்லை. அவ்வளவு பொறுமையானவர். ஏதாவது செய்ய வேண்டும் என்ற உத்வேகம் அனைவரும் கற்க வேண்டும் வறுமைகள் ஒழிக்க பட வேண்டும் அனைவருக்கும் உதவ வேண்டும் என்ற அவரது கோட்பாடுகள் அனைத்தும் நூலறுந்த பட்டம் ஆகிற்றே.

ஐயோ சேர் ஏன் இந்த அவசரம் எனக்கு அதிகம் சொல்லும் விடயத்தில் அவசரம் வேண்டாம் என்பீர்களே. நீங்கள் மட்டும் ஏன் சேர்? நான் கௌரி மிஸ்சுக்கு என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் சொல்லுவேன். நான் உங்களை ஆசிரியராக மட்டுமல்ல இருவரினதும் ஒற்றுமையை பார்த்தும் வியப்பதுண்டு. நிகழ்வுகளில் தனித்தனியே நான் கண்டதில்லை. தற்பொழுது மட்டும் ஏன் தவிக்க விட்டு சென்றீர்கள் தங்கள் துணையை. அழுகை நெஞ்சை அடைக்கின்றது சேர்.

2017ஆம் ஆண்டு எமது மையத்தில் நத்தார் பண்டிகை கொண்டாடப்பட வேண்டும் என்று தங்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கான கோரிக்கை என்று இல்லை இங்கே இந்து கிறிஸ்தவம் என்ற வேறுபாடு இல்லை அனைவரினதும் பங்களிப்புடன் நத்தார் பண்டிகை நடைபெறும் என்றார். தலைமை பொறுப்பு எனக்களிக்கப்பட்டது. ஐயோ சேர் நான் இந்து அப்பா பூசகர் என்று முணுமுணுக்க... ஓர் சிறு புன்னகையுடன் "நானும் இந்து தான் மாற்றம் என்பது எம்மில் தொடங்கட்டும்" என்று இலகுவாகச் சொல்லி விட்டு சென்றார். கடும் கோபம் எனக்கு ஏதோ என்னை சுதாகரித்து கொண்டு வீடு சென்றேன். மீண்டும் வகுப்புக்குச் சென்றேன் அலங்கரிப்பதற்கான அனைத்துப் பொருட்களும் வாங்க வேண்டும் கூடு வைக்க வேண்டும் கொட்டகை போட வேண்டும் அலங்காரம் செய்ய வேண்டும் என்று ஏற்பாடுகள் அதற்கு நடுவில் கலை நிகழ்வுகள் வேறு. எனது கோபம் இன்னும் அதிகமாக ஆனால் சேர் சற்றும் சலனம் இல்லாமல். சரி அன்று மாலை வைக்கோல் கொட்டில் போட வேண்டுமாம் என்று ஆயத்தம் ஆகின்றேன் சேரின் அழைப்பு சொல்லுங்கோ சேர் என்றேன் எங்க சவுக்கு மரம் வெட்டலாம்" என்றார் நான் அறிவியல் நகரில் உள்ளது என்றேன் சரி நீங்கள் வாங்கோ பிள்ளைகள் நிக்கின்றனர் குழப்படி செய்வீனம் றோட்டுக்கு போவீனம் என்றார்.

ஏன் சேர் நீங்கள் நிக்கின்றீர்கள் தானே என்றேன் இப்ப நான் நிக்கிறன் ஆனால் சவுக்கு வெட்ட போக போறன் என்றார். ஏன் சேர் நீங்கள் வேற ஆரையும் அனுப்பலாமே என்றேன் இல்லை இல்லை ஏறி விழுந்தாலும் நான் போறன் என்றார். நான் அந்த நிமிடமே வெட்கி தலை குனிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம் காத்து இடைநடுவில் விட்டு சென்றது ஏனோ? பல மணித்தியாலயத்தின் பின் சவுக்கோடு வந்து இந்து கிறிஸ்தவ பாகுபாடு இன்றி பாலன் பிறப்பு கொண்டாடிய பெருமை தங்களையே சாரும். அதன் பிறகு தைத்திரு நாளும் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடி மகிழ்ந்தோம் அதனோடு நானும் விடை பெறும் தருணம்.

இதற்குப் பிறகான இன்று வரை ஆசிரியர் மாணவி என்ற நிலை மாறி என் பாதுகாவலர் என்றாகினார். பாதுகாவலர் என்பதை விட தந்தை என்பதே சரியாக இருக்கும். ஆம் கண்டிப்புடன் கூடிய அறிவுரைகள். பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் விதம் யாவுமே வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை.

நான் இன்று உயிரோடு இருக்கின்றேன் என்றால் என் தெய்வமான ஜோதி சேரும் கௌரி மிஸ்சும் தான் பெரும் பங்கு என்று அடித்து கூறுவேன். இரவென்றோ பகல் என்றோ நடுராத்திரி என்று எதுவும் இல்லை. எனக்கான அனைத்து அறிவுரைகளையும் பெற்றோராக வழங்கி இன்று ஓர் தலை நிமிர்ந்து வாழும் ஒருவராக என்னை மாற்றிய எம் இமயம் இன்று எம்மோடு இல்லை.

வரிகளாலும் வார்த்தைகளாலும் வர்ணிக்க முடியாத எம் தெய்வத்துக்கு கண்ணீர் பூக்களை காணிக்கை செய்கின்றேன். எல்லாம் வல்ல இறைவன் மடியில் இளைப்பாறுக மாற்றங்களை எம்மில் இருந்து உருவாக்குவோம் என்று தங்கள் ஆத்மா மேல் உறுதி செய்கின்றோம். பட்டாம் பூச்சியின் வாழ்தல் என்பது எட்டு நாளாம் இறைவன் வகுத்தது. பட்டு போல ரோஜா மலரும் தொட்டால் உதிரும் சிற்சில நாளில் ஆனால் அழியா வேதனையை அள்ளி திணித்து விட்டு வேகமாய் பறந்த காரணம் ஏனோ அப்பா. தங்கள் ஆத்மா அமைதி கொள்ள எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்டில் எய்ட் ஆசிரியர்கள்

### எம்மை தனியே விட்டு எத்தேசம் காணச் சென்றீரோ .... !

அன்பு வதனமும் அழகுமிகு சிரிப்புடன் எல்லோரையும் கவர்ந்திடும்
எம் இனிய ஒளிவிளக்கே .... !
ஆயிரம் கதைபேசி அழகழகாய் சுற்றிவந்தோம்
பாதிவழியிலே பரிதவிக்கவிட்டதேனோ ...... !
அன்பில் நிறைந்தமுகம் அடிக்கடி வருகுதையா
ஆசைக்கதைபேச எமது மனம் துடிக்குதையா ....... !
பிள்ளைகள் மனநிலையை கணப்பொழுதில் அறிந்திடுவீர்
கண்டிப்புடன் நாம் நடந்தால் அன்பெனும்நெறியில் எமை வழிநடத்துவீரே ..... !
நேர் வழியில் எம்மை நடத்திவிட்டு இன்று எதிர்மறை மாற்றத்தை காண்பித்து சென்றதேனோ ...... !
உம் கஷ்டங்களை மறைத்துவிட்டு லிட்டில் எய்ட் தழைத்திட உழைத்தீர
இன்று எம்மை தனியேவிட்டு எத்தேசம் காண சென்றீரோ ...... !
லிட்டில் எய்ட் வாசல் கதவு உம்மை காணாமல் தவிக்குதையா
மாணவர்படையணி உம்மை தேடி அலையுதையா .... !
மீண்டும் எம்முடன் சேர்ந்து பணிபுரியும் நாளை தேடி எம் நாட்கள் நகருதையா...... !
கஷ்டம் என்றாலே கரம்கொடுக்க செல்வீரே
இன்று எம்மை கஷ்டப்படுத்தி எதைக்காண சென்றீரோ ..... !
ஆயிரமாயிரம் உறவுகளை சேர்த்துவிட்டு அசையாமல் உறங்குகிறீர்
நீர் ஆனந்தமாய் உறங்குமையா ...... !
உம் ஆருயிர் துணை தன்னை நாம் அன்புடனே பார்த்துக்கொள்வோம்
தவறேதும் செய்திருந்தால் தயவுடனே ஏற்றுக்கொள்ளும் .... !
நீர் என்றும் எம்முடன் இருந்திடுவீர் எனும் எண்ணத்தில்
எம் லிட்டில் எய்ட் வெற்றிபெற உழைத்திடுவோம் எப்பொழுதும்
மனநிறைவுடன் நீர் உறங்கும் ஐயா ... !

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி. இதயராஜா (கலை இலக்கிய நண்பர்)

(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர். தலைவர், லிற்றில் எய்ட்)

### நிறைந்திருப்பாய்!

என் இனிய நண்பனே!
சிவ ஜோதியே!
உன் பார்வையின் வசீகரத்தால்
பிணைக்கின்ற பண்பாளனே!
என்னோடு தமிழ்ச் சங்கத்தில்
அன்பாகிப் போனவனே! - நின்
இன்னுயிர் போனதென
இடியோசை கேட்டதுவே!

தினகரனில் சரிநிகரில் "இருக்கிறம்"
என்றொருநாள் சொன்னாய்!
வனப்புறு புன்னகை முகம்மலர
கிளிநொச்சி லிட்டில் எயிற்றில்
உனக்கொரு பணியென்று சொன்னாய்!
பின்னொரு நாளில் தேடிவந்தாய்!
எனக்கொரு இடமும் தந்தாய்
ஏனிடையில் இக்கதி நண்பனே!

வெல்ல ஒரு சொல் இல்லையெனத்
தேர்ந்தெடுத்து சொல்லும் ஜோதியே!
வல்ல மனத் துணை கொண்டு
வழிகாட்டும் விழிச்சுடரே!
சொல்ல ஒரு வார்த்தை வைக்காது
புன்னகையால் பகை போக்கி,
நல்ல மனிதம் விதைத்தவனே!
நம்மில் நீ! நிறைந்திருப்பாய்!

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப. தயாளன் (நண்பர்)**

(ஆசிரியர். செயலாளர், லிற்றில் எய்ட், கிளிநொச்சி)

## என்றும் கேட்கும் குரல்

இப்படி ஒரு வழியில் இழந்துவிட்டிருக்கக் கூடாத மனிதாபிமானியின் நினைவுகளை எழுத நேர்ந்திருப்பது மிகப்பெரும் காலக்கொடுமை. வாழ்ந்து கொண்டிருந்த போது அவரது வாழ்வு பற்றி அறிந்திருந்ததை விட மறைவின் பின்னர் புரிந்து கொள்ளப்படும் அர்த்தங்கள் அதிகமானவை.

மூன்றாண்டுகள் முன்பதாகவே அவர் அறிமுகமானார். நான் அவருக்கு அறிமுகமானேன். அன்று முதல் இறுதிவரை அடிக்கடி தொடர்பு கொள்ளும் பேசிக்கொள்ளும் மனிதராக இருந்தார். மிக மென்மையான குரலில் ஆணித்தரமாக தனது நிலைப்பாட்டை எடுத்துரைத்து காரியங்களை நகர்த்துவதில் திறன் படைத்த ஆளுமையாக தோன்றினார்.

"அப்படிச் செய்யலாம் தானே! நீங்கள் வரலாம் தானே!" என்று அவர் கேட்கும் எந்த வார்த்தைகளும் அவரது சொந்த விடயம் ஒன்றுக்கானது அல்ல. அவர் செயற்பட்ட லிட்டில் எய்ட் திறன் விருத்தி நிலையத்தின் செயற்பாடு ஒன்றை முன்னகர்த்துவதற்கானதாக, அன்றேல் அவர் எம்மோடு அங்கம் வகித்துச் செயற்பட்ட மக்கள் சிந்தனைக் களத்தின் பணியொன்றை நிறைவேற்றுவதற்காக இல்லையெனில் கலை இலக்கியத்துறை சார்ந்த நிகழ்வொன்றை ஒழுங்கமைப்பதற்கான உதவிக்காகவே அழைப்புக்கள் இருக்கும்.

தான் ஏற்றுக்கொண்ட பணியொன்றை எவ்வளவு துரிதமாக நிறைவாக ஆற்ற முடியுமோ அதற்காக இடையறாது உழைத்தல் என்பதன் அண்மைக் கால முன்மாதிரியாக சிவஜோதி அண்ணர் அவர்களை கண்டேன். தன் வாழ்நாளின் இறுதி மூன்றாண்டுகள் மட்டுமே அவருக்கு கிளிநொச்சி அறிமுகமானது. இக்குறுகிய காலத்துக்குள் தனது இடையறாத உழைப்பாலும் சிந்தனையாலும் தொழில் திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியுள்ள மாணவர்களை உருவாக்குவதற்காக அவர் உழைத்த விதம் அபாரமானது. அந்த மாணவர்கள் வழியாக அவர் கால்பதித்த இடங்கள் ஏராளமானவை.

சுயநலமில்லாத மனிதப்பிறவியாக இயங்கிய நாள்கள் அவருக்கான வாழ்வை கபளீகரம் செய்த நாள்களாகி விட்டனவோ என்று ஐயுறத் தோன்றுகின்றது. தன்னை சூழ்ந்த நோயை பொருட்படுத்தாது — உணராது வழமையான வேகத்தில் அவர் ஓடிக்கொண்டிருந்தார் என்பது தான் இந்த துயரார்ந்த நிகழ்வின் அடித்தளமாகி விட்டது.

மருத்துவமனையின் விடுதியில் இரு வாரங்களுக்கு முன்னர் அவர் உரையாடிய விதம் எந்தவிதமான அவநம்பிக்கையையும் ஏற்படுத்தாத ஆரோக்கியத்தின் அறிகுறியாகவே இருந்தது. அப்போதும் கூட அவர் பேசியவை அதிகமாக லிற்றில் எய்ட் நிறுவனம் பற்றியும் மக்கள் சிந்தனைக் களத்தின் ஆண்டிறுதி நிகழ்வுக்கான சஞ்சிகை வெளியீடு பற்றியுமே இருந்தன. இவையிரண்டையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கு தானும் விரைவில் வந்துவிட வேண்டும் என்ற ஓர்மமும் தெளிவுமே இருந்தது.

ஆனால், அவையெல்லாவற்றையும் மீறி காலனெனும் மாயக்கிழவன் அவரையும் அவரது கனவுகளையும் வெற்றி கொண்டான். இறுதி இரு வாரங்களையும் நடக்கப்போவது என்ன என்பதை அறிந்து கொண்டும் கையறு நிலையில் காத்திருந்தோம் - கடந்திருந்தோம் என்பது மனித வாழ்வு எமக்கு உணர்த்துகின்ற மிகக் கசப்பான உண்மை.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி...
செந்தழல் அடைந்ததுன் தேகம்...
யாவரும் தேம்பியழும் நிலையாயிற்று..
போய் வருக தோழரே!... மீண்டும் சந்திப்போமா.....?

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்க்கண்டு குகன் (நண்பன்)

(நிறைவேற்று இயக்குனர், ஆதிபராசக்தி கல்வி சமூகநல அபிவிருத்தி மையம்.
செந்தளிர் அறக்கட்டளை, கிளிநொச்சி)

இது பேனாவால் எழுதப்படுகின்ற வரிகள் அல்ல
என் இதயத்தைப் பிளந்து கண்ணீரால்
எழுதப்படுகின்ற வரிகள்...

### மனிதம் போற்றும் மாமனிதன்!

சிவஜோதி அண்ணன் அவர்களை எனக்கு ஓர் சில ஆண்டுகளாகத்தான் தெரியும் அவருடன் பழகிய காலத்தில் கண்ட சிறப்பம்சங்களால் கவரப்பட்டவர்களில் நானும் ஒருவனாக இருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவருடைய நற்பண்புகளால் கவரப்பட்ட எனக்கு அவர் ஓர் உற்ற நண்பனாகிவிட்டார். படித்த படைப்புக்களையுடைய இலக்கிய மகானாக இருந்தபோதும் பெருமிதம் கொள்ளாது மக்களோடு மக்களாக பழகிய பண்பினைச் சொல்லவா?

மாணவர்களோடு மாணவராக உற்ற நண்பனாக மாறி கல்வி கற்பித்ததைச் சொல்லவா?

இருப்பவர்களிடம் பெற்று இல்லாதவர்களுக்கு கொடுத்துதவும் நல் மனதினைச் சொல்லவா? ஏதை நான் சொல்வது?

நெஞ்சமதில் நிறைந்த ஜோதியே!
நீ எங்கிருந்து வந்தாய் எம்மோடு பழக
ஏன் எம்மோடு பழகினாய்?
எம்மை விட்டு பிரிந்து செல்வதற்காகவா?
பஞ்சென எம் மனதில் பதிந்தவனே!
பஞ்சும் பறந்திடும் என சொல்லிவிட்டுச் சென்றாயே!
பழக எம் மனம் துடிக்கிறது.
உன்னுடன் பயணம் தொடர என் மனம் ஏங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியிலே நீ காட்டிய ஆர்வம் கண்டு எம் மனம் துடிக்கின்றது.

உன் முகம் காண எம் மனம் படபடக்குது

சிவத்தின் ஜோதியே!

அன்பின் ஜோதியே!

ஆன்மீகத்தின் ஜோதியே!

மானிடத்தின் ஜோதியே!

தர்மத்தின் ஜோதியே!

பாரினிலே உன்னைப் போல் பல பேர் உண்டு

பார்ப்பவர் எல்லாம் உன்னைப் போல் ஆகிடுவாரா? ஜோதியே!

இது தர்மத்தின் சோதனையா?

கலை இலக்கிய படைப்புக்களில் தன்னை வளர்த்தது மட்டுமல்லாது எமது இளம் சமூகம் அதனைப் பின்பற்றுவதற்கும் தன்னைப் பல வழிகளில் அர்ப்பணித்தவர் பெயருக்கு ஏற்றாற் போல் சிவத்தின் ஜோதியாக சமூகத்திற்கு சுடர் ஏற்றியவர் சிவஜோதி அண்ணன். அதுமட்டுமா? சொல்ல மனம் ஏங்குகின்றது.

எனக்கு ஒரு நல்ல நண்பனாக, ஆசானாக, ஆலோசகராக என் வாழ்வில் மறக்கவே முடியாத அளவுக்கு தோளோடு தோள் நின்று செயற்பட்டவர்.

சிவஜோதி அண்ணன் முதலில் எனக்கு அறிமுகமானதைச் சொல்லவதா? சொல்ல வார்த்தைகள் போதாது.

ஆதிபராசக்தி சமூகநல அபிவிருத்தி மையத்தின் நிறுவுனர் சக்தி - கணேசன் ஐயா அவர்கள் எனது சமூக நலப் பணியை இலகுபடுத்துவதற்காக காட்டிய ஒரு பொக்கிஷம் சிவஜோதி அண்ணன். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழுவில் பணியாற்றிய சிவஜோதி அண்ணன் அவர்களையும் அவரது துணைவியாரையும் தொடர்பு கொள்ளுமாறு சக்திகணேசன் ஐயா வேண்டினார். அவரின் வேண்டுதலுக்கு அமைய அப்பொழுது அவர்கள் பணிபுரிந்த லிட்டில் எயிட் திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி மையத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய சிவஜோதி அண்ணனை முதன் முறையாகச் சந்தித்தேன்.

"சொல்ல கண்கள் கலங்குகின்றன."
என்னைக் கண்டதும் தனது இருக்கையிலிருந்து எழுந்து வந்து கை கொடுத்து உள்ளே அழைத்துச் சென்றார். அந்தக் கணம் மனம் ஆனந்தத்தில் குதூகலித்தது!

சிவஜோதி அண்ணன் அவர்களை எமது அமைப்பின் ஆலோசகராக இருந்து எம்மை வழி நடத்துமாறு வேண்டியபோது, எனக்கு பதவி நிலை எதுவும் வேண்டாம் தான் ஒரு தொண்டனாக பணியாற்றுவதாக கூறிய பெயரினையும் புகழினையும் விரும்பாத ஓர் அற்புத மனிதன்.

எப்பொழுதெல்லாம் அவரை நான் சந்திக்கின்றேனோ அவர் வார்த்தைகள் எல்லாம் சமூகம் பற்றியதாகவே அமைந்திருந்தது. ஒரு சமூகபற்றாளராகக் காணப்பட்டார்.

ஒரு சமூக பொருளாதார வாழ்வியலுக்கு கல்வியே சிறந்த ஆயுதமென்பதில் உறுதியாக நின்றவர். கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆன்மீகமே சிறந்தது எனப் பல சமய நிகழ்வுகளில் கருத்துக்களை முன்வைத்த உண்மைத் தொண்டன். தர்மத்தின் வழி வாழ்ந்த எத்தனையோ போற்றுதற்குரிய ஆளுமைமிக்க ஒரு அன்பான மனிதமே போற்றும் மாமனிதனை இழந்து நிற்பது துர்ப்பாக்கியமே. அண்ணனும் நண்பனும் ஒருநல்ல ஆசானுமாகிய சிவஜோதி அவர்களுடைய பெருமை கூற பக்கங்கள் போதாது.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் மனைவி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஜோதி அண்ணன் அவர்களின் ஆத்மா இறையடி சென்றடைந்து சாந்தி பெற அன்னை ஆதி பராசக்தியின் பாதம் பணிகின்றேன்.

"பல ஆண்டுகளானாலும் எம் மனங்களில் சுடர் விட்டு எரியும் விளக்கு
அண்ணன் சிவஜோதி"

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.விஜயசேகரன் (நண்பர்)

(ஆசிரியர்)

### ஜோதி அண்ணன்

பிரகாசித்த ஜோதியே பிரிந்தாயே எம்மை விட்டு. பழகியது சொற்ப காலம். பாசம் நிறைந்தது உமது நடத்தை. நீங்கவில்லை உமது நினைவுகள் இன்றும் எம்மைவிட்டு. உங்களிடமிருந்து கற்கவேண்டியது நிறையவே இருக்கின்றது. ஒவ்வொரு செயலையும் நின்று, நிதானமாக செயற்படுத்தும் உங்களது ஆளுமை மிகவும் வலுவானது. எதிரியைக் கூட இன்முகம் காட்டி விலகும் மனப்பாங்கு யாரிடம் இருக்கப்போகின்றது. ஜோதி அண்ணனே? நீங்கள் ஒரு சமூக மாற்றத்திற்காக போராடிய போராளி, சமூக உளவியலின் புரிதல் உங்களிடம் நிறையவேயிருந்தது. நெருக்கடிக்குள்ளாகும் சமூகம் மீது மிகவும் கரிசனையும், வருத்தலும் உங்கள் மனதில் அடிக்கடி தோன்றும். அவ்வப்போது உங்களின் பகிர்வு மூலம் அவதானித்தோம் நிறையவே.

இளநிலை மாணவர்களிடம் பழகும்போது பார்த்திருக்கின்றேன் நீங்களும் இளசாகியதை. அவர்களின் மனங்களில் தோன்றும் முரண்நிலை உணர்வுகளைக் கூட நீங்கள் மிகவும் நிதானமாக கையாண்டு அவர்களை நேர்வழிப்படுத்துவீர்கள். கற்கும் மாணவர்களிடத்தே நீங்கள் கற்பிக்கும் முறைமையும், ஆற்றலும் பாண்டித்தியமுள்ள ஆசானிடம் கூட கண்டுகொள்வது கடினம். முன்மாதிரிகளை நிச்சயம் உங்களிடம் பலர் கற்றிருப்பார்கள். நீங்கள் எம்மோடு இணைந்திருந்தது சொற்பகாலமென்றாலும் எம்மனவெளியில் ஏற்படுத்தியிருந்த அதிர்வுகள் என்றும் அழியாத கோலங்கள். வீச்சம் குறைந்து மங்கலாக ஒளியுதிர்ந்து சென்ற லிற்றில் எய்ட் நிறுவனத்தை பெரும் ஒளியை பிரகாசிக்க செய்த பெருமை தங்களையே சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பகாலத்தில் கிளிநொச்சியில் எத்தனை அறிமுகங்கள், எத்தனை நண்பர்கள் வியக்கின்றது உங்கள் மனப்பாங்கு. நீங்கள் எத்தனை தோற்றங்களை எமக்கு காட்டினீர்கள்.

1. அரங்க வெளியில் ஒரு அற்புத நடிகன்
2. தொழிநுட்ப செயற்பாட்டில் ஒரு கணினியாளன்
3. நிர்வாக கட்டமைப்பின் ஒரு தரமான முகாமையாளன்
4. அறிவூட்டம் வழங்கும் கற்போனின் முன்னிலையில் அசத்தும் ஒரு ஆசான்
5. அனர்த்தம் நிகழும் சமூகத்தில் சுகம் கொண்ட ஒரு கொடையாளி
6. இடர்படும் மக்களுக்கு கரம் கொடுக்கும் ஒரு போராளி

நீங்கள் வாழ்ந்த காலத்தில் பல்வேறு தடங்களை பதிவிட்டு போய்விட்டீர்கள்.

உங்கள் பிரிவின் பின்னர்தான் எமக்கு தெரிந்தது. பிற மாவட்டங்களிலும் ,தலைநகரிலும் நீங்கள் ஆற்றிய பணிபற்றி. உங்களது நட்பு வட்டம் மிகவும் விரிந்து காணப்படுவதை உங்களது நண்பர்கள் பறைசாற்றுவதை காணும் போது உங்களது சமூகப்பணி மிகவும் பெரியதென்பதை காணமுடிகின்றது. நீங்கள் பிரிந்து சென்றாலும் நல்லெண்ணங்களும், கனவுகளும் நிச்சயம் நிறைவேறும். ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போம்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு. தமிழ்ச்செல்வன் (நண்பர்)

(ஊடகவியலாளர்)

## அமைதியான ஆளுமை ஜோதி அண்ணன்

ஆழமான கடல் எப்பொழுதும் ஆர்பரிப்பதில்லை அவ்வாறுதான் ஜோதி அண்ணனும். ஜோதி அண்ணன் எப்பொழுதும் அமைதியாய், எளிமையாய் காணப்படுவார். ஆனால் மிகுந்த ஆளுமை மிக்கவர் என்பது அவரது மரணத்தின் பின்னரே அறிந்துகொண்டேன்.

தனது அமைதியான ஆளுமையால் எந்த சவால்களையும் எளிதாக வென்றுவிடக் கூடியவராக இருந்துள்ளார். மற்றவர்களின் மனங்கள் காயப்படாமல் பேசுகின்ற பக்குவம் ஜோதி அண்ணனின் சிறப்பு.

கலை இலக்கியச் செயற்பாடுகள், சமூகப் பணி, ஊடகப் பணி, தகவல் தொழிநுட்பம் என பல் வகை ஆளுமை மிக்க மனிதராக எம்மோடு வாழ்ந்த ஒருவர். முற்போக்குச் சிந்தனையாளராக மட்டுமன்றி செயற்பாட்டாளராகவும் இருந்துள்ளார். அவரது வாழ்க்கையே அதற்கான உதாரணம்.

பிறந்த அனைவரும் ஒரு நாள் இறந்தே ஆகவேண்டும் இது விதி. அந்தப் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே எப்படி வாழ்ந்தோம் என்பதே நாம் இறந்த பின்பும் வாழ்வதற்கு வழி வகுக்கிறது. அந்த வகையில் ஜோதி அண்ணன் இப்பொழுதும் வாழ்கின்றார்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரசிங்கம் கேதீஸ்வரன் (சமூக செயற்பாட்டு நண்பர்)

(உதவி திட்டமிடல் பணிப்பாளர்)

### சோதி என்ற நண்பர்

சோதி என்ற நணடபருடைய அறிமுகம் கிடைத்தது ஒரு பொதுச் சேவையின் போது தான். தன்னடக்கமும் மற்றவரைச் மதிக்கும் பண்பும், எதனையும் நிதானித்து சிந்தித்துக் கொண்டிருக்கும் திறனும், சமூக நன்மை மீது அதிக அக்கறை கொண்ட மனிதனாகவே நான் இவரை மதிப்பிடுகிறேன். இளைய சமூகத்தின் எதிர்கால சவால்களை எப்படி வெற்றிகொள்ள வேண்டும் அதற்கு எத்தகைய திறன்களை அவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். எமது தாயகத்தின் மீது எமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு எத்தகைய அறிவுபூர்வமான மானிட நேய உணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் எல்லாம் அவருக்கிருந்த தெளிவார்ந்த நிலை அவரின் அறிவாற்றலின் வெளிப்பாடு என சொல்லலாம்.

நல்ல வாசிப்புத் திறனும், நவீன தொடர்பாடல் ஊடகங்களில் இருந்த பரீட்சயமும் அவரை அறிவூட்டம் பெற வாய்ப்பளித்திருக்கிறது. கிளிநொச்சியில் அவரால் இயக்கப்பட்ட லிற்றில் எய்ட் கருத்திட்டம் பல நல்ல பிள்ளைகளை உருவாக்கி வளப்படுத்தியுள்ளது. சிந்தனை வட்டத்தில் அவரது வலுவான கருத்துப்பகிர்வு பல வாதப் பிரதிவாதங்களை கிளறிவிட்டிருந்தது. இளமையும், துடிப்பும் கொண்ட ஒரு சமூக செயற்பாட்டாளன் இவ்வளவு விரைவாக எம்மை விட்டு விலகிவிடுவார் என எண்ணியதேயில்லை. ஒரு துயர செய்தி அவரை தூரவே கொண்டு சென்று விட்டது. மரணம் நிச்சயமானது. எனினும் மரணத்தை வென்றும் வாழும் மனிதர்களாக சிலர் தமது வாழ்க்கை காலத்தை மாற்றி செயற்படுகின்றனர். அவ்வாறாக வழித்தடத்தில் பயணித்த நண்பர் சோதி அவர்களின் நினைவும் பணியும் நிதானமும் எமக்கு ஊக்கத்தைத் தரும். அவரால் பெரிதும் நேசிக்கப்பட்ட குடும்பத்தாரின் துயருடன் பங்கெடுத்து அஞ்சிலித்து நிற்கின்றேன்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண. T. S. யோசுவா (மதங்களைக் கடந்த நண்பர்)

(அருட் தந்தை)

### யார் சொன்னது நதி காய்ந்ததென்று...

எல்லாரும் எழுந்து அங்கொன்றும்
இங்கொன்றுமான சிறுவட்டங்களாக
சிந்தனையாளர் வட்டம் "சிதறி"
வெளிச்சத்தில் இருந்து மெதுவாக
மெல்லமாய் 'நகர்ந்து'
மர நிழல்களில் இருட்டிலும்
நிலா வெளிச்சத்தின் தாவரங்களிலும்
தேடல் தொடர்ந்து கொண்டிருக்கும்
ஆனால் அந்த தண்ணீர் பைப்படியில்
சலசலவென ஓடும் தண்ணீரில்
ஒரு நிழல் மிதந்து நீந்திக்கொண்டிருக்கும்
அந்த இருட்டில் ஓடியதண்ணீரில்
நாம் குடித்த குவளைகளின்
அடிப் பாகத்தையும் ஒரு கரம்
தேய்த்து கழுவி அடுக்கி
வைத்து கொண்டிருக்கும் - அது
ஒரு வழமையான ஒரு கூட்டத்தின்
முடிவில் நான் காணும் காட்சி
அந்த காட்சியை இனியும் காணலாம்
ஆனால் அந்த காட்சியின்
அந்த மாட்சியின் சிருஷ்டிகனை
அந்த காட்சிக்குள் மட்டுமே
காணலாம் " ஜோதி " வடிவமாய் ...

ஜோதியண்ணர் போய் விட்டார்
என்று யார் சொன்னது
வாழ்க்கையை தொலைத்தவன்
மட்டுமே இங்கே செத்து போகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் இன்பங்களை
அதனதன் காலத்தில் கொண்டாடியவர்கள்
கோடான கோடி காலம்
கடந்தும் கொட்டும் மழையிலும்
உடைக்கும் புயலிலும்
அணையாமல் எரிந்து கொண்டிருக்கும்
அற்புதச்ஜோதியாய்,
அபூர்வ நதியாய் பாய்ந்து கொண்டேயிருப்பார்கள்.

அற்புதச்ஜோதி,
ஒரு அபூர்வ நதியாகி
என் மனச்சோலையில்
ஓடிக்கொண்டிருக்கிறது.....
எங்கிருந்தோ பாயத்தொடங்கி
இங்கே
சில காலத்தின் முன்னே,
கரையுடைத்து புதுக் கிளை பிரித்து
எனக்குள் பாயத்தொடங்கி
பசுமையாய் இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது..

வந்து பாருங்கள்
என் ஜோதி நதியை
என் வசந்தகால
நதிக்கரையில் நான்
கொண்டாடிய நினைவுகள்
இன்னும் அப்படியே இங்கே
அழகாக பூத்துக்கிடகின்றன .

நதியின் வேலை என்ன
'அழகாக பாய்வது'
'அருவியாகக் குதிப்பது'
தண்ணீர் உயிர்களுக்கு
'தாயாகி நிற்பது'
மண்ணின் மனிதர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாகத்தை தீர்ப்பது'
மடிக்கரை பூக்களை
வாழ வைத்து 'ரசிப்பது'
இது அத்தனையும்
இந்த ஜோதி நதிக்கரையில்
இன்றும் நீங்கள் காணலாம்...

'யார் சொன்னது' நதியை
காணவில்லை
காய்ந்து போனதென்று
இது என்ன குட்டையா
கட்டை வெயிலுக்கு
காய்ந்து போக..

அற்புத ஜோதி நதி
சொர்க்கமாக
இன்றும் எனக்குள்
பாய்ந்து கொண்டேயிருக்கிறது..

வந்து பாருங்கள்,
என்னிடம் கேட்டு பாருங்கள்
ஜோதி நதியின் ஓரத்தில்
கொஞ்சம் அமர்ந்து
கொண்டாடி செல்லலாம்..
'ஜோதி' ஒரு
அழகான நதி....
நதியின் அழகின்
இலக்கணம் என்ன?
தெளிவாக அது ஓடும்.....
ஜோதி நதி ஒரு
தெளிவான 'பாதை'
ஒரு கொள்கை நதி - அது
ஒரே ஒரு கொள்கைபதி
நாளுக்கொரு கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கொரு முகம்
என குட்டை, குளங்கள்
இங்கே மணந்து கொண்டிருக்க
இன்றும் இங்கே
வற்றாமல்
தெளிவாக ஜோதி நதி மட்டும்
கொள்கை நதியாய் ஓடிக்கொண்டிருக்கிறது.

யார் சொன்னது
நதி காய்ந்தது
பறி போனதென்று...
அது ஒரு 'பதி'
நீண்டுச்செல்லும் ஒரு வழி 'பதி'
பேசும் போது மெதுவாக
ஆனால் உள்ளத்தின்
ஆழத்திலிருந்து
ஊற்றெடுத்து அருவியாய் பாயும்
பாயும் அந்த நதி,
சொல்லில் பாதியும்,
கண்ணில் பாதியும்,
எண்ணில் ஒரு கதை
தெளிவாய் சொல்லி
அருவியாய் அடங்கிப் பாயும்,
அந்த நதி இன்னும் இங்கே
பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது....

நதி அழுவதை
நதிகள் மட்டுமே காணும்
ஜோதி நதிக்கு நீண்ட கண்ணீர் உண்டு
கண்ணீரை தன் மேனியில்
சுமந்து நன்னீராக்கிய பெருமை
ஜோதிக்கு மட்டுமே உண்டு
நீலிக்கண்ணீர் வடித்து
வேலி உடைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளி பறிக்கும் 'காளி பயல்' கூட்டம்
இன குழி பறிக்கும் ஊரில்
எலி கூட்டத்தின்
சதி வலையில்
கிளி பிள்ளைகளாய்
சிக்கித்தவிக்கும் இன மாந்தர்
களி கொள்ளும் கூட்டத்தின் நடுவில்
உளி தாங்கிய இதயம்
வலி தாங்க முடியாமல்
கரைந்தோடும் கண்ணீரை
பயிர் வளர்க்கும் தண்ணீராய்
ஜோதி நதி மட்டுமே
இன்றும் இங்கே பாய்ச்சி கொண்டிருக்கிறது.

யார் சொன்னது நதி காய்ந்ததென்று...
இந்த காட்டில்
வழி தொலைத்தவர்களில்
நானும் ஒருவன்,
யாரோ எங்கோ
வெட்டி போட்ட
அடையாள குளைகளில்
நீண்ட தூரம் பயணித்து விட்டேன்
அந்த பாதை ஒரு கரடி குகைக்கு
கொண்டு வந்து விடும் வரை
யாரும் சொல்லவில்லை.....
இது கரடி போட்ட பாதையென்று...
கடைசியாக கரடி விட்ட அழைப்பை
வீசியெறிந்து திக்கு தெரியாமல்
ஓடி வந்து மூச்சு வாங்கிய போது
முட்டி தெரித்த சில ஓடைகள்
இங்கே கட்டு தெறித்து ஓடும்
சத்தம் கேட்டு நின்று பார்த்தேன்,
இங்கொன்றும் அங்கொன்றும்
சில ஊற்றுக்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் ஒன்று ஜோதியூற்று....

நதியாகி, வழியாகி,
வாழ்வாகி பாயும்
ஜோதி நதிக்கரையில்
நான் மூழ்கி
தாகம் தீர்த்து
தலைசாய்த்து
மடியாறி பசி முடித்து
புது கனவொன்றை
நான் பிடித்து - என்
ஜோதி நதிக்கரை
எனக்கு ஒரு வழிக்கரை - என்று
நான் நினைக்க
கரையேரியவர் பலர்
இங்கே நினைக்க - அவர்
அத்தனை பேரும்
இந்த நதியை
தங்கள் தாய் மடியாகவே
இன்றும் கொண்டாடுகின்றனர்...

யார் சொன்னது
தாய்மடி காய்ந்ததென்று
இந்த ஜோதி நதிக்கரையில்
ஆயிரமாயிரம் பூக்கள்
மலர்ந்து கொண்டேயிருக்கின்றன
அத்தனை பூக்களும்
அழகும் வாசமும்
வண்ணமும் நிறைந்து
மெல்லிய தென்றலை
அள்ளிப் பருகி
வெள்ளிச்சுடர்களாய்
மண்ணில் சிரிக்கின்றன
வெள்ளித் திசைகளாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் சொன்னது நதி காய்ந்தது
ஜோதி நதி பறி போனதென்று
வாழ்வு நதியாகி போனவர்க்கு
மரணம் கதியாகி போவதில்லை...

நாமும் நதியாகி
வாழ்வாகி போவோம்
நாளை நமக்கும்
ஒரு நதிப் பாட்டுண்டு...

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டொக்டர். தங்கமுத்து சத்தியமூர்த்தி (நண்பர்)

(தலைமைப் பொறுப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை)

அமரர் சிவஜோதி அவர்களை கடந்த சில வருடங்களாக நன்கு அறிந்திருந்தேன். மிகவும் அமைதியான மென்மையான சுபாவம் கொண்ட அவர் எங்கள் பலரையும் அதிகம் கவர்ந்தவர்.

கிளிநொச்சியில் அவர் தலைமையேற்று நடத்திய லிற்றில் எய்ட் நிறுவன பல நிகழ்வுகளில் பங்குபற்றி இருக்கின்றேன். அந்நிறுவனத்தை இயக்கி வறுமையில் இருக்கும் சிறுவர்கள், இளைஞர்களை நல்வழிப்படுத்தும் தொழில் முயற்சியில் ஈடுபடுத்தி எதிர்காலத் தலைவர்களாக உருவாக்க பல கருமங்களை சிறப்பாகச் செய்து வந்தார். இளைஞர்கள் புதிய தொழில் முயற்சியிலும் புதிய கண்டுபிடிப்புக்களிலும் ஈடுபட்டதை கண்டு கொண்டேன். அத்துடன் அவர்களுடைய ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் ஆளுமை விருத்திச் செயற்பாடுகளையும் கலையாக்கத்தையும் முன்னெடுத்து வந்தார். அங்குள்ள சிறுவர்கள் இளைஞர்களோடு மிக அன்பாக பழகி அவர்களுக்கு ஏற்றவாறு உதவிகளை செய்து வந்தவர் அமரர் திரு சிவஜோதி.

கிளிநொச்சி - மக்கள் சிந்தனைக் களத்தில் பங்குபற்றி அனைவருடனும் அன்பாக கலந்துரையாடி தனது சிறப்பான கருத்தையும் சமூக நோக்கினையும் முன் வைத்தவர். எல்லா சந்தர்ப்பங்களிலும் அன்பாக புன்முறுவலோடு மற்றவர்களோடு கதைத்து தன் கருத்தை சொல்வதில் வல்லவர். எல்லோரோடும் அன்பாகப் பழகிய அந்த இதயம் இப்போது எங்களை விட்டு பிரிந்து விட்டது இருப்பினும் அவர் நினைவுகள் தொடரும்.

நல்ல மனிதர்கள் சில காலம் வாழ்ந்தாலும் பலர் மனதில் தங்கள் பெயரை பதிவு செய்து மறைந்து விடுகிறார்கள். அமரர் சிவஜோதி அண்ணன் அவர்கள் எல்லா நெஞ்சங்களிலும் இடம் பிடித்தவர். அவர் நினைவுகள் வாழும்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முருகேசு சந்திரகுமார் (அரசியலற்ற நண்பர்)**

(பொதுச் செயலாளர், சமத்துவக் கட்சி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

## ஜோதி என்றொரு மானுடன்

சில மனிதர்கள் நம்முடைய வாழ்க்கையில் எப்போதும் நினைவிலேயே இருப்பர். அப்படியானவர்களில் ஒருவரே அருமை நண்பர் சிவஜோதி. மிக அண்மைக் காலத்தில்தான் சிவஜோதிக்கும் எனக்கும் இடையிலான உறவு ஏற்பட்டது. அதுவும் ஒரு பொதுப்பணி சார்ந்த விடயத்திலேயே. சோதி, கிளிநொச்சியில் இயங்கும் லிற்றில் எய்ட் என்ற இளையோர் திறன்விருத்தி நிறுவனத்தின் மேம்பாட்டுப் பணிக்காகக் கிளிநொச்சிக்கு வந்திருந்தார். அதற்கு முன்பு அவர் கொழும்பில் பல்வேறு பணிகளில் செல்வாக்கோடு இருந்தவர். அதையெல்லாம் விட்டு விட்டு, லிற்றில் எய்ட் இற்கு வந்தது அவருக்கு மனித நேயப் பணியின் மீதில் உள்ள பிடிப்பின் நிமித்தமே. அப்படி வந்தவர் நிர்வாகப் பொறுப்பை ஏற்று மிகக் குறுகிய காலத்திலேயே லிற்றில் எய்ட் இல் மிகப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

இதனால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தொழிற்திறன் விருத்தி, ஆளுமை விருத்தி, ஆடை வடிவமைப்புக் கலை, கணினிக் கற்கை உள்ளிட்ட விடயங்களில் ஈடுபடக்கூடியதாக இருந்தது. இதோடு அந்த மாணவர்களுடன் இணைந்து பல இடர்கால உதவிப் பணிகளையும் சமாந்தரமாகச் செய்யத் தொடங்கினார். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள பாதிக்கப்பட்ட – பின்தங்கிய பொருளாதார நிலையையுடைய குடும்பங்களின் முன்னேற்றத்திலும் அந்தப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் ஜோதி கொண்டிருந்த அக்கறை மிகப் பெரியது. ஒவ்வொருவரையும் தனிப்படப் புரிந்து கொள்வதில் சோதி காட்டிய கரிசனை தனியானது.

இதெல்லாம் கிளிநொச்சியில் சிவஜோதியைப் பலரும் அடையாளம் காணக்கூடியளவுக்குரிய நிலையை உருவாக்கியது. மாணவரிடத்திலே சக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழனாக நெருக்கமாகிச் செயற்பட்ட ஜோதிக்கு சுற்றயல்களில் மட்டுமல்ல, சமூக அக்கறையோடு இயங்குவோரிடத்திலும் உறவும் நெருக்கமும் உண்டாகியது. இதன்போதெல்லாம் சிவஜோதியிடம் நான் கண்ட சிறப்பம்சம் சமத்துவம், மனித நேயம், அர்ப்பணிப்புணர்வு, சமூகப்பற்று ஆகியவற்றின் கூட்டுருவமாக அவர் இருக்கிறார் என்பதையே. இதுதான் அவரை எனக்கும் நெருக்கமாக்கியது. முற்போக்காகச் சிந்திப்போரையும் சிவஜோதியின்பால் ஈர்க்க வைத்தது. சிவஜோதியின் ஆற்றலையும் அர்ப்பணிப்பையும் சிறந்த பண்பையும் முதலீடாகக் கொண்டு மிக விரிவான மக்கள் பணியைக் குறித்து நாம் திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதற்கிடையில் சடுதியான மரணம் அவரைப் பறித்துச் சென்று விட்டது. இதனால் ஏற்பட்ட இழப்பு நமக்கு — எமது சமூகத்துக்குப் பேரிழப்பாகியுள்ளது. இப்பொழுது நம்முன்னே உள்ள பணியும் சவாலும் ஜோதியின் பணிகளைத் தொடர்வதும் அவருடைய மகத்தான கனவுகளை நிறைவேற்றுவதுமாகும். அதற்கு நம்மை அர்ப்பணிப்போம். அதுவே அவருக்கு நாம் செய்யும் மிகப் பெரிய மரியாதை நிறைந்த அன்புமாகும்.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணாகரன் (கலை, இலக்கிய நண்பர்)

(எழுத்தாளர்)

### உணர்வுகளை மதிக்கும் உன்னத மானுடன்

ஒருவருடைய இழப்பு எந்தளவுக்கு நம்மைப் பாதிக்கிறது என்று உணரும்போதே நாம் அவருடைய நெருக்கத்தையும் முக்கியத்துவத்தையும் கூடுதலாக அறிகிறோம். நண்பர் சிவஜோதியின் இழப்பு அப்படியான ஒன்று. அவரை இழந்த பிறகே அவரோடு இணைந்து பல விடயங்களிலும் கூடுதலாகச் செயற்பட்டிருக்க வேண்டும் என்ற ஆதங்கம் ஏற்படுகிறது. அதுவும் அதற்கான வாய்ப்புகள் தாராளமாக இருந்தும் அதையெல்லாம் தவற விட்டிருக்கிறேன் என்ற கவலை. இது உண்டாக்கும் துக்கமும் குற்றவுணர்வும் கொஞ்சமல்ல.

சிவஜோதியைப் பற்றி ஏற்கனவே அறிந்திருந்தாலும் 2017 அளவில்தான் அவரோடு நெருக்கம் ஏற்பட்டது. கிளிநொச்சியில் எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள லிற்றில் எய்ட் என்ற இளையோருக்கான தொழிற்திறன் விருத்தி நிறுவனத்தின் இயக்குநராகத் தலைமைப் பொறுப்பேற்று வந்திருந்தார் சிவஜோதி. அதற்கு முன்பு கொழும்பில் அவர், கலை இலக்கியச் செயற்பாடுகளிலும், ஊடகத்துறையிலும் செயற்பட்டுக் கொண்டிருந்தார். குறிப்பாக தேசிய கலை இலக்கியப் பேரவை, தமிழ்ச்சங்கம் “இருக்கிறம்“ சஞ்சிகை மற்றும் “தினகரன்“ பத்திரிகை போன்றவற்றோடு, இதில் தேசிய கலை இலக்கியப் பேரவையோடு அவர் புத்தகப் பண்பாட்டு நிகழ்வுகளிலும் நாடகச் செயற்பாடுகளிலும் கூடுதலாகச் செயற்பட்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவர் நாராய் நாராய் என்ற நாடகப் பயணத்தில் சிதம்பரநாதன் சோ.தேவராஜா போன்றோரோடு தமிழ் நாட்டுக்குச் சென்று பல இடங்களிலும் நாடகங்களை நிகழ்த்துவதில் பங்களித்திருந்தார்.

இதெல்லாம் சிவஜோதியை நெருக்கமாக்கின. சிவஜோதியின் பள்ளித் தோழர் “தேசம்“ ஜெயபாலனே லிற்றில் எய்ட் இன் இணைப்பாளர் என்ற வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஜோதியை கிளிநொச்சிக்கு அழைத்தவர். சந்தித்த சில நாட்களிலேயே நெடுங்கால நண்பரைப் போல உணர்வில் நிறைந்து விட்டார் ஜோதி. கிளிநொச்சிக்கு வந்த கையோடு சிவஜோதி தனக்கிசைவானவர்களை அடையாளம் கண்டு, அவர்களோடு இணைந்து செயற்படத் தொடங்கினார். இதில் அவர் இரண்டு வகையான தெரிவுகளைச் செய்திருந்தார் என்று தெரிகிறது. ஒன்று, லிற்றில் எய்ட் இன் வளர்ச்சியை முதற் தெரிவாகக் கொண்டு அதற்குப் பொருத்தமான — தகுதியுள்ளோரை இணைத்துச் செயற்பட்டமை. இரண்டாவது, தன்னுடைய கலை இலக்கிய சமூகச் செயற்பாட்டிற்குரியவர்களை இனங்கண்டு அவர்களோடு இணைந்து இயங்கியமை. நான் இரண்டாவது வகையிலேயே சிவஜோதியுடன் நெருக்கமாகினேன். இதில் சிவஜோதிக்கும் எனக்குமிடையில் இன்னும் நெருக்கம் கூடியதற்கு இன்னொரு காரணம் அவருடைய நண்பர்களிற் பலர் எனக்கும் நண்பர்களாக இருந்தனர். இதனால் அவர்கள் கிளிநொச்சிக்கு வரும்போது என்னோடு சிவஜோதியைச் சந்திப்பதுண்டு. அதைப்போல சிவஜோதியிடம் வருவோர் என்னையும் சந்திப்பர். இதை விட பிற இடங்களிலிருந்தும் புலர்பெயர் நாடுகள், தமிழ்நாடு போன்ற இடங்களிலிருந்தும் வருவோருடனான சந்திப்பிலும் சிவஜோதி தவறாமல் கலந்து கொள்வார்.

இப்படியே இந்த உறவு வளர்ந்து, கிளிநொச்சி கலை இலக்கிய நண்பர் வட்டம், மக்கள் சிந்தனைக்களம் என விரிந்தது. கிளிநொச்சியில் நடந்த இலக்கியக் கூட்டங்கள், சந்திப்புகள், திரையிடல்கள், ஓவியக் காட்சிகள், நாடகங்கள் எல்லாவற்றிலும் ஜோதியிருப்பார். எங்கள் வீட்டுக்கு வருகின்ற எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் பலரோடும் ஜோதிக்கு உறவிருந்தது. அல்லது அவர்களோடு உறவைக் கொண்டாடினார். இதன்போதெல்லாம் ஜோதி தன்னை வெளிப்படுத்திக் கொண்ட விதம் ஈர்ப்பானது. எந்தப் பணியையும் பொறுப்பெடுத்துச் சிறப்பாகச் செய்யும் திறனும் இணைந்து செயற்படுவதில் கொள்ள வேண்டிய அடிப்படைப் பண்புகளும் ஜோதியின் அடையாளங்கள். வன்னி இலக்கியச் சந்திப்பிலும் சிவஜோதியின் பங்களிப்புகள் நிறையவுண்டு. சிவஜோதியுடன் எப்போதும் கூடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய துணைவி கௌரியும் இணைந்திருப்பார். இரட்டைப் பிறவிகளைப் போல நெருக்கமாக – ஒருவரோடு ஒருவர் இணைந்து இருவரும் சிந்திப்பதும் செயற்படுவதும் தனியான அழகு. இது ஒரு பெரும் பலமும் கூட.

சிவஜோதியினுடைய பழகும் விதம், பண்பான நடத்தை, சமூக அக்கறை, பொதுச்செயற்பாடுகளில் கொண்டுள்ள ஆர்வம் கலை இலக்கியப்பிடிப்பு வாசிப்பில் உள்ள ஈடுபாடு, நட்பை உறவாகக் கொண்டாடும் முறை, சமத்துவ நோக்கு வெளிப்படைத்தன்மை கூடிச் செயலாற்றும் பாங்கு எனப் பல விடயங்கள் அவருடன் நெருக்கமாக்கின. என்னை மட்டுமல்ல, பலரையும்தான்.

உலகம் முழுவதிலும் உள்ள ஜோதியின் நண்பர்கள் அனைவரையும் ஜோதி இவ்வாறான விடயங்களின் மூலம் ஆட்கொண்டிருக்கிறார். வானமே ஜோதியின் எல்லை. சமத்துவச் சிந்தனையாளர்களுக்கு எப்போதும் இப்படி விரிந்த உறவே உண்டு.

தலைமுறைகளைக் கடந்து எல்லோருடைய மனதிலும் ஒருவர் மதிப்பாகப் பதிகிறார் என்றால் நிச்சயமாக அவரிடம் பல சிறப்பியல்புகளும் திறன்களுமிருக்க வேண்டும். அதிலும் எந்த விதமான அதிகாரமும் இல்லாமலே பலருடைய மனதிலும் அன்பாக அவர் விளைகிறாரென்றால் அவர் அன்பாலான இனிய குணங்களும் எல்லோரையும் சமநிலையில் கொள்ளக் கூடிய உறவையும் கொண்டிருக்க வேண்டும். அப்படியான ஒரு நண்பரே ஜோதி. தன்னை எப்போதும் மற்றவர்களுக்குப் பின்னே வைத்துக் கொள்வதும் மற்றவர்களின் உணர்வுகளை முன்னிறுத்திச் செயற்படுவதும் சிவஜோதியின் இயல்பு. இந்தப் போட்டியுலகில் இப்படியான இயல்போடு வாழ்வது கடினம். வாழ்ந்தாலும் ஒரு வெற்றிகரமான அடையாளமாக உருப்பெறுவது அதை விடக் கடினம். எல்லாவற்றையும் விட இந்த இயல்போடு குடும்பத்திற்குள் நின்று பிடிப்பது மிகமிகச் சவாலானது.

ஆனால், இந்த இயல்பை மாற்றிக் கொள்ளாமல்தான் சிவஜோதி வாழ்ந்திருக்கிறார். இதற்காக அத்தனை சவால்களையும் ஏற்றிருக்கிறார். எதிர்கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காரணம், தன்னிலும் தான் கொண்டிருக்கும் நிலைப்பாட்டிலும் உள்ள தெளிவும் உறுதிப்பாடுமே. ஒருவரிடமுள்ள தெளிவே அவருக்கான உறுதிப்பாட்டைக் கொடுக்கும். அந்த உறுதிப்பாட்டுக்குத் தெளிவான நல்ல சிந்தனை வேண்டும். அந்தச் சிந்தனை பொது நிலைப்பட்டதாக இருப்பது அவசியம். தன்னுடைய இளமையிலேயே பொதுநிலைப்பட்ட இடதுசாரியச் சிந்தனைக் குழாத்தினருடன் தன்னை இணைத்துக் கொள்ளும் வாய்ப்பு சிவஜோதிக்குக் கிடைத்திருக்கிறது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் தொடர்பு இதில் முக்கியமானது. அதில் பெற்றுக் கொண்ட அறிவும் அனுபவமும் மனப்பாங்கும்தான் பின்னாளில் சிவஜோதியை வழிப்படுத்தியிருக்கின்றன என்று எண்ணுகிறேன்.

சிவஜோதியைப் பற்றிச் சொல்லும்போது முக்கியமாக குறிப்பிட வேண்டியது, கிளிநொச்சியில் ஒரு இளைய தலைமுறை சிவஜோதியினால் உருவாகியிருக்கிறது என்பதை. லிற்றில் எய்ட் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் இளைய தலைமுறைக்கான தொழில் வழிகாட்டல், தொழிற் பயிற்சி, கணினி அறிவூட்டல் மையமாகும். இது தொண்டு அடிப்படையில் இலவசமாக அறிவையும் ஆளுமை விருத்தியையும் செய்யும் நிறுவனம். லண்டனில் உள்ள ஈழத்தமிழர்கள் சிலர் இந்தப்பிரதேச மக்களின் - குறிப்பாக இளைய தலைமுறையின் எதிர்காலத்தைக் குறித்துச் சிந்தித்து உருவாக்கிய அமைப்பே லிற்றில் எய்ட். அதைப் பொறுப்பேற்று நடத்திய ஜோதி ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களை பயிற்று வித்திருக்கிறார். ஒவ்வொரு மாணவரையும் அவர்களுடைய பல்திறன்களை வெளிப்படுத்தும் வகையில் லிற்றில் எய்ட் இன் செயற்பாடுகளையும் கற்றலையும் மாற்றியமைத்தது ஜோதியின் சிறப்பு. முக்கியமாக ஒவ்வொருவரையும் ஆளுமையுள்ளவர்களாக ஜோதி மாற்றினார். அல்லது அவர்கள் தங்களை வெளிப்படுத்திக்கொள்வதற்கான களமாகத் தன்னை மாற்றியமைக்க வாய்ப்புக் கொடுத்தார். இதனால் இளைய தலைமுறையினரின் மனதில் பேரிடத்தைப் பெற்றார். அதில் பயில வந்த இளைய தலைமுறையினருடன் தொடங்கிய சிவஜோதியின் செயற்பாட்டுப் பயணம், முல்லைத்தீவு வரையில் விரிந்தது. பயிலும் மாணவர்களோடு கொண்ட உறவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட சூழலைச் சேர்ந்த மாணவர்களைப் பற்றிய புரிதலும் சிவஜோதியை அவர்களோடு நெருங்க வைத்தது. பயில்தல் – பயிற்றுவித்தல் என்பதற்கு அப்பால், எல்லோருமாகக் கூடிச் செயற்படுதல் என்றவாறாக சிவஜோதி செயற்பாடுகளை வடிவமைத்தார். இதனால் அந்த மாணவர்களின் பெற்றோரோடும் அவர்கள் வழியாக சமூகத்தோடும் நெருங்கினார். இந்த நெருக்கத்தின் மூலம் சமூகத்தின் நிலையைத் தெரிந்து கொண்டு தன்னுடைய நண்பர்கள் வழியாகவும் தனக்குத் தெரிந்த அமைப்புகள் மூலமாகவும் இந்த மக்களுக்கான உதவிகளைச் செய்யத் தொடங்கினார். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏராளமான உதவிகளை, வளர்ச்சியை நோக்கிய திட்டங்களை தனியாளாகச் செய்து முடித்த சிவஜோதி, இதைப்பற்றி எங்கும் பிரஸ்தாபித்ததும் கிடையாது. பதிவு செய்ததும் இல்லை. ஆனால், தொடர்ந்து வேலை செய்து கொண்டேயிருந்தார்.

இதுதான் சிவஜோதியை எல்லோரும் விரும்பக் காரணம். குறிப்பாக இளைய தலைமுறையினருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும். இளைய தலைமுறையினரிடம் மூத்த தலைமுறையினர் மதிப்பைப் பெறுவது இன்றைய வாழ்க்கைச் சூழலில், வாழ்க்கை முறையில் எளிதான விடயமல்ல. ஆனால், சிவஜோதி அதிலே வெற்றியடைந்திருக்கிறார்.

இப்படிப் பன்முக ஆற்றலோடும் பல தளங்களிலும் நின்று வானவில் வண்ணமாக ஒளிர் முகம் கொண்டு செயற்பட்டு வந்த சிவஜோதியை எதிர்பாராத நிலையில் இழந்து விட்டோம். இது மரணங்களை அதிகமாகச் சந்திக்கும் கொவிட் 19 யுகம். ஆனாலும் சிவஜோதியின் இழப்பு மிகத் துயரமாக தாங்கிக் கொள்ள முடியாததாகவே உள்ளது.

###



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஜோதி எனும் ஆளுமை...

ஆளுமைகள் பிறப்பினாலே உருவாக்கப்படுகின்றனரா அல்லது ஆளுமைகளாக வளர்த்தெடுக்கப்படுகின்றனரா என்ற விவாதம் இன்னமும் முற்றில்லாமல் தொடரும் சூழலில் நம்மில் ஒருவனாக வாழ்ந்த 'சிவஜோதி எனும் ஆளுமை...' யை இழந்து நிற்கின்றோம். ஆளுமைகளின் உருவாக்கம் பற்றிய அறிவியல் விவாதம் ஒரு புறம் இருக்க 'சிவஜோதி எனும் ஆளுமை...' எப்படி உருவாக்கப்பட்டான் என்ற கேள்வி அவன் மறைவைத் தொடர்ந்து என்னுள் எழுந்தது. அதற்கு சிவஜோதியின் குடும்பப் பின்னணியும் அவனுடைய வாழ்வியல் முறையும் ஒரு காரணமாக இருந்தது. ஒரு சைவப் பாரம்பரிய குடும்பத்தில் பழமைவாதமும் மிகவும் இறுக்கமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடுகளையும் கொண்ட சமூகப் பின்னணியில் பிறந்து வளர்ந்த சிவஜோதி பொதுவுடமைக் கொள்கைகளினால் கவரப்பட்டது ஒரு முரண்நகை. மூட நம்பிக்கைகளையும், சமூக ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து, மனிதத்துவத்தை முன்நிறுத்தி, அதனை தனது சொந்த வாழ்க்கையில் கடைப்பிடித்து, அதன் படி வாழ்ந்து காட்டுவது என்பது மிகப்பெரிய சவால். அதுவும் யாழ்ப்பாணச் சமூகத்தில் இப்படி ஒரு பின்னணியில் இருந்து வந்த ஒருவன் பொதுவுடமைக் கொள்கையாளனாகவும் 'கடவுள்' பற்றாளனாகவும் வாழ்ந்துகாட்டி இருக்கின்றான் என்பது என்னை இன்றும் உலுக்குகின்ற ஒரு கேள்வியாகவே உள்ளது.

தன்னுடைய குறுகிய 49 ஆண்டுகால வாழ்க்கையில் சிவஜோதி சாதித்தவை பல. அதற்கு இந்நூலில் உள்ள எழுத்துக்களே சாட்சியம். 'உன் நண்பனைப் பற்றிச் சொல் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்' என்று பிரெஞ்ச் பழமொழி ஒன்றுள்ளது. அந்த வகையில் நான், நாங்கள் சிவஜோதியை நண்பனாகச் சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்கின்றேன். பெருமை கொள்கின்றோம்.

'சிவஜோதி எனும் ஆளுமை...' எமது பள்ளிக் காலத்திலேயே துளிர்விட ஆரம்பித்து விட்டது, பதின்ம வயதில் பருவ மாற்றங்கள் ஆரம்பிக்க அந்த இளமைத்துடிப்புடன் ஒரு ஆளுமையும் உருவாகிக்கொண்டிருந்தான். அதற்கு அவன் தாய் வழித் தாத்தா பற்றி அவன் எழுதிவைத்த கட்டுரையை அவன் மறைவிற்குப் பின் அண்மையில் வாசித்த போது எனது சில கேள்விகளுக்கு விடையை அதில் கண்டுகொண்டேன்.

'சிவஜோதி எனும் ஆளுமை...' என்ற இந்த நூல் அவன் மறைவை எண்ணிக் கலங்குவதற்காக அல்ல. அதனை அவனும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டான். இவை அவன் வாழ்ந்த வாழ்வைக் கொண்டாடுவதற்கும் அவன் விட்டுச் சென்ற சமூகப் பணிகளை தொடர்வதற்குமான நிகழ்வு. மறந்தும் மறந்துவிட வேண்டாம்: ஆளுமைகள் மரணிப்பதில்லை. 'சிவஜோதி எனும் ஆளுமை...'யும் அவ்வாறே. அவனுக்கு மரணமில்லை. பொறுப்புகள் கைமாற்றப்பட்டுள்ளன. அவ்வளவே.

த ஜெயபாலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா அப்பா அண்ணாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்மா அப்பா அண்ணா தாய்மாமன் மாமியுடன்



உறவுகளுடன்
சிறு வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவுகளுடன் சிறு வயதில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உறவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜோதி அண்ணா மற்றும் மச்சானுடன் ஜோதி



முன்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருபானந்தவாரியாருடன் சிவஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறும்புத்தனம்



இளமைத்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறும்புத்தனம்



கிருபானந்தவாரியாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை விளையாட்டுப்போட்டி



பாடசாலை மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியில் தலைமை தாங்கிய போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியில் பச்சை இல்லத்தில் தலைமை வகித்த சந்தர்ப்பத்தில் (உயர்தரம்)




தேசிய கலை இலக்கியப் பேரவையின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவில் நாராய் நாராய் நாடகப் பயணத்தின் போது
இந்திய இலங்கை நாடகக் கலைஞர்களுடன்..



இந்தியாவில் நாராய் நாராய் நாடகப் பயணத்தின் போது
இலங்கை நாடகக் கலைஞர்களுடன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்வி சுற்றுலாவின் போது




கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சிறுவர்களுக்கான கூடிப்பயில்வோம் திறன் விருத்திப் பயிற்சி பட்டறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நாடகத்தில் ஒரு காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு தமிழ்ச் சங்கம் ஓலைச் சஞ்சிகை வெளியீட்டு விழா



தமிழ் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி கருத்தரங்கு 27.02.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2008 ஆம் ஆண்டு நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டின் ஒரு சில காட்சிகள்.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலப்பதிகார மாநாட்டில் பன்முகப்புலவர் த. கனகரத்தினத்துடன்




கொழும்பு தமிழ்ச்சங்க நிகழ்வொன்றில் உரையாற்றும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எழுத்தாளர் நீ.பி அருளானந்தம் அவர்களின் நூல் வெளியீட்டில் பிரதி பெறும் போது



தேசிய கலை இலக்கியப் பேரவையின் நூல் வெளியீட்டின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடகத்தின் ஒரு காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2017ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தை பொறுப்பேற்ற வருடம் நடைபெற்ற முதலாவது நத்தார் பண்டிகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய ஜனநாயக மாக்ஸிச லெனிஸிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா செந்தில்வேல் எழுதிய “வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை” என்ற நூலின் அறிமுக விமர்சன விழா



கொழும்பு தமிழ்ச் சங்க நிகழ்வொன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2018ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் பொங்கல் விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2018ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் சிறுவர் தினம்



2018ஆம் ஆண்டு நத்தார் பண்டிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2018ஆம் டிசம்பர் லிட்டில் எய்ட் ஊழியர்கள் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்திற்கு யாழ்ப்பாண விஜயம்



2018 ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது. லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தின் ஸ்தாபகர் த.ஜெயபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் பொங்கல் விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019.09.31ஆம் திகதி இடம்பெற்ற ஆசிரியை குலேபாவின் சேவை பாராட்டு விழா நிகழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் சிறுவர் தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2019ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் ஆசிரியர் தினம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2019ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
நிவாரண உதவி செய்த பொழுது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
நிவாரண உதவி செய்த பொழுது





2020ம்ஆண்டில் ஆதிபராசக்தி கல்வி வளர்ச்சிமன்றத்துடன்
இணைந்து கொவிட்-19 காலப்பகுதியில் நிவாரண உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2020 ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் பொங்கல் விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2020ம்ஆண்டில் ஆதியராசக்தி கல்வி வளர்ச்சிமன்றத்துடன் இணைந்து கொவிட்-19 காலப்பகுதியில் நிவாரண உதவி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019ம் ஆண்டில் லிட்டில் எயிட்

மாணவர்களுடன் வெள்ள அனர்த்த நிவாரண உதவியின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2020ம்ஆண்டில் ஆதிபராசக்தி கல்வி வளர்ச்சிமன்றத்துடன் இணைந்து கொவிட்-19 காலப்பகுதியில் நிவாரண உதவிசெய்தபொழுது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






லிட்டில் எய்ட் மாணவர்களுடன் சுற்றுலா பயணத்தின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லிட்டில் எய்ட் மாணவர்களுடன் சுற்றுலா பயணத்தின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லிட்டில் எய்ட் சிறுவர்களுக்கான மீன்தொட்டி வாங்கிய பின் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2020 இன் சிறுவர் தினத்தின் சில பதிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2020இன் ஆசிரியர் தினத்தின் சில பதிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2016ஆம் ஆண்டு குடும்பத்தினருடன் பொங்கல் விழாவின் போது



22.08.2020 மாமாவின் பிறந்தநாளை புதுமனையில் கொண்டாடியபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2016 ஆம் ஆண்டு இந்தியா விஜயத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற

49ஆவது இலக்கியச் சந்திப்பின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019 ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது.



தினகரன் ஆசிரியபீடத்துடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாங்குளம் காணியில் அடிக்கல நாட்டும் விழா



பொங்கல் விழாவின் போது ஜனாதிபதி மாளிகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கிய நண்பர்களுடன்....



திறந்த பல்கலைக்கழக நண்பர்களுடன் ஒரு இராப்போசனத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரசிகர் அவைக்காக அரங்காடிகள் வழங்கும் நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேருவளை பள்ளிவாசல் விஜயத்தின் போது



டிப்ளோமா இதழியல் கற்கை நெறி சான்றிதழ் நிகழ்வில் சான்றிதழ் பெறும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மச்சான்மாருடன்



தந்தையின் பிறந்தநாளின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மழலைகளுடன் மகிழ்ந்திருந்த சந்தர்ப்பத்தில்



லிட்டில் எய்ட் அலுவலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் லிட்டில் எய்ட்திறன் விருத்தி மையத்தின்
நம்பிக்கை நிதியத் தலைவர் திரு கதிருடன்



லண்டன் லிட்டில் எய்ட்
திறன் விருத்தி மையத்தின்
நம்பிக்கை
நிதியச் செயலாளர்
சுகேந்திரன் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது - 2018




கல்விச்சுற்றுலாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மனைவியுடன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓர் மாலைப்பொழுதில்
இரணைமடுவத்தில்



ஓர் மாலைப்பொழுதில்
சங்குப்பிட்டி பாலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைகள் பிறப்பினாலே உருவாக்கப்படுகின்றனரா,
அல்லது ஆளுமைகளாக வளர்த்தெடுக்கப்படுகின்றனரா
என்ற விவாதம் இன்னமும் முற்றில்லாமல் தொடரும் சூழலில்
நம்மில் ஒருவனாக வாழ்ந்த சிவஜோதி எனும் ஆளுமையை
இழந்து நிற்கின்றோம். ஆளுமைகளின் உருவாக்கம்
பற்றிய அறிவியல் விவாதம் ஒருபுறம் இருக்க
சிவஜோதி எனும் ஆளுமை எப்படி உருவாக்கப்பட்டான்
என்ற கேள்வி அவன் மறைவைத் தொடர்ந்து
என்னுள் எழுந்தது. அதற்கு சிவஜோதியின்
குடும்பப் பின்னணியும் அவனுடைய வாழ்வியல் முறையும்
ஒரு காரணமாக இருந்தது. ஒரு சைவப் பாரம்பரிய குடும்பத்தில்
பழமைவாதமும் மிகவும் இறுக்கமான
கட்டுப்பாடுகளையும் கொண்ட சமூகப் பின்னணியில்
பிறந்து வளர்ந்த சிவஜோதி பொதுவுடமைக் கொள்கைகளினால்
கவரப்பட்டது ஒரு முரண்நகை. மூட நம்பிக்கைகளையும்,
சமூக ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து, மனிதத்துவத்தை
முன்நிறுத்தி, அதனை தனது சொந்த வாழ்க்கையில்
கடைப்பிடித்து, அதன்படி வாழ்ந்து காட்டுவது
என்பது மிகப்பெரிய சவால். அதுவும் யாழ்ப்பாணச்
சமூகத்தில் இப்படி ஒரு பின்னணியில் இருந்து வந்த ஒருவன்
பொதுவுடமைக் கொள்கையாளனாகவும் 'கடவுள்' பற்றாளனாகவும்
வாழ்ந்துகாட்டி இருக்கின்றான் என்பது என்னை
இன்றும் உலுக்குகின்ற ஒரு கேள்வியாகவே உள்ளது.
'சிவஜோதி எனும் ஆளுமை...' என்ற இந்த நூல் சிவஜோதியின்
மறைவை எண்ணிக் கலங்குவதற்காக அல்ல.
சிவஜோதி வாழ்ந்த வாழ்வைக் கொண்டாடுவதற்கும்
விட்டுச் சென்ற சமூகப் பணிகளை தொடர்வதற்குமாக.
மறந்தும் மறந்து விடவேண்டாம்:
ஆளுமைகள் மரணிப்பதில்லை.
'சிவஜோதி எனும் ஆளுமை...'யும் அவ்வாறே.
'சிவஜோதி எனும் ஆளுமை'க்கு மரணமில்லை.
பொறுப்புகள் கைமாற்றப்பட்டுள்ளன.

த. ஜெயபாலன்,
நிறுவனர், லிற்றில் எய்ட்.

wrapper rashmy

Print@ JEMFAR, Uduvil, 021 222 4484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org